
ALKI 30-9-84
ரூ1-50
கல்கி




## அற்புதமான ஒரு பொட்டலம் ரஸ்னுவைக் கொண்டு 32 டம்ளர் சுவைமிக்க குளிர் பானத்தைத் தயாரிக்கலாம்.

அது மிகவும் சுலபம். ஒரு குழந்தைகூட அந்த தந்திரத்தைச் செய்துகாட்டலாம். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் சர்க்கரை மற்றும் நீருடன் ரஸ்னுவைக கலக்குங்கள். நிமிடங்களில் பானம் தயார். 32 டம்ளர் சுவைமிக்க குளிர்பானம் தயாரிகக 2 பாட்டில்கள் சிரப் போதும். இதை இதர எந்த சிரப்/ ஸ்குவாஷுடன் ஒப்பிட்டுப் பாருங்கள் மற்றவைகளைவிட ரஸ்னுவுக்கு பாதி விலைதான் ஆகிறது என்பதை உணர்வீர்கள்.

இப்போது! ஒரு புதிய சர்வதேச பாக்கினிலே.




**ரஸ்னு**

ஸாஃப்ட் ட்ரிங்க் கான்ஸன்ட்ரேட்

**சுவையானது !**
**சிக்கனமானது !**

தயாரிப்பவர்கள்: பயோமா இண்டஸ்ட்ரீஸ், அசர்வா, அஹமதாபாத் 380 016.

இவ்விடங்களிலும் கிடைக்கின்றது: குவைத், துபாய், பேஹ்ரின், மொரீஷியஸ், கெய்ரோ, கார்டூம், லுஸாகா, நெய்ரோபி, ஜெத்தா, ஒஸ்லோ, லண்டன்.

Mudra: A: PI :1507 TAM.

# கல்கி



தீபாவளி சிறப்பிதழில்

## ஸ்ரீவேணுகோபாலன்

எழுதும்

மகத்தான சரித்திரத் தொடர்கதை



# மோகினித் திருக்கோலம்

ஆரம்பம்

மற்றும் பல புதிய அம்சங்கள்

அதிக பக்கங்கள் * இலவச இணைப்பு * அதே விலை!

அலசல்

சென்னையில் ஓடும் பல்லவன் பஸ்களின் கட்டணத்தை அதிகப்படுத்த அரசு முடிவு செய்திருக்கிறது. ஆனால் இந்த உயர்வு அமுலுக்கு வருவதற்கு முன்னர் பொது மக்களின் கருத்தையும் கேட்டிருக்கிறது. நமது நிருபர்கள் ப்ரியன், மௌலி இருவரும் நிர்வாகம், தொழிலாளர்கள், பொது மக்கள் என்று பல்வேறு பிரிவினரைச் சந்தித்துப் பேசினார்கள்.

# பல்லவன் கட்டண உயர்வு

கட்டணத்தை உயர்த்தவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குனர் **திரு. ரத்தினசபாபதியைச்** சந்தித்துப் பேசிய போது:

''நிறைய பேர் நினைத்துக் கொண்டிருப்பது போல் இனிமேல் தான் கடன் வாங்கி நாங்கள் 555 பஸ்கள் வாங்கப் போவதில்லை. ஏற்கெனவே கடனை உலக வங்கியிடம் பெற்று 555 பஸ்களை வாங்கி அவைகள் தற்போது சாலைகளில் ஓடிக் கொண்டிருக்கின்றன. சுமார் 30 லட்சம் மக்கள் தினசரி பஸ்களில் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

✕ ''கால் கடுக்க நின்றாலும் பஸ்ஸே வராது''



பல்லவன் சுமார் 10 கோடி நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு பஸ் தினசரி 200 கி. மீ. ஓடினால் தான் லாபம் வரும். ஆனால் சென்னையில் ஒரு பஸ் 200 கி. மீக்குக் குறைவாகவே ஓடுவதால் நஷ்டம் வருகிறது. நகரில் அதிக தூரம் அதிக டிரிப்கள் ஓட்ட முடியாது. காரணம் சென்னை ரோடுகள். இப்போதே நெரிசல் அதிகம். இதற்கு மேல் கொள்ளளவு கிடையாது. இன்னும் அதிகப்படியான பஸ்களைச் சாலைகளில் விடுவது என்பதும் முடியாத காரியம்.''

''தனியார் பஸ் முதலாளிகளிடம் ஒரு குறிப்பிட்ட பஸ் ரூட்டைக் கொடுத்துப் பாருங்கள். லாபம் சம்பாதித்துக் காண்பிப்பார்கள்'' என்று ரத்தின சபாபதியிடம் சொன்ன போது அவர் சொன்னார்:

''தனியார் முதலாளிகள் பணியாட்களைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்குவார்கள். தனியார் பஸ்கள் தினசரி 300, 400 கி.மீ. ஓடுகிறது. அதனால் லாபம் வருகிறது. அரசு நிறுவனம் என்பதால் நிர்வாகச் செலவுகள் அதிகம், சம்பளம் போனஸ், ஊக்கத் தொகை ஆகியன பல்லவனில் அதிக பட்சமாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். தனியார்கள் என்றால் லாப நோக்கு ஒன்றையே குறியாக வைத்து பஸ்களை ஓட்டுவார்கள். ஆனால் அரசுத் துறை நிறுவனமான நாங்கள் அப்படிச் செய்ய முடியாது. எங்கள் பி. டி. ஸி. யின் செயல்பாடு குறித்து உலக வங்கியே சான்றிதழ் வழங்கி இருக்கிறது.


''மற்றொரு விஷயம் மாணவர் கட்டணம். ஒன்றரை லட்சம் மாணவ, மாணவியர் பயன் அடைகிறார்கள். அதனாலேயே பல்லவனில் 5 கோடி ரூபாய் நஷ்டமாகிறது. இதற்கென்று இதை எடுத்து விட முடியுமா?

''வாங்கிய கடனை பஸ் கட்டணத்தின் உயர்வினால்தான் கட்ட முடியும் என்ற எண்ணத்தால்தான் உலக வங்கி உயர்வுக்குச் சிபாரிசு செய்தது. இரண்டாண்டுகளுக்கு முன்னரே இது நடைபெற்றிருக்க வேண்டும். எந்த விகிதத்தில் கட்டண உயர்வு இருக்க வேண்டும் என்பதை நாங்கள் முடிவு செய்வதில்லை. அரசுதான் முடிவு செய்கிறது.''


### உயர்த்த அவசியம் இல்லை

''தூக்கில் தொங்க இருப்பவனைப் பார்த்து ''கடைசியாக உன் விருப்பம் என்ன?'' என்று கேட்பார்கள். அது போல் தான் தமிழக அரசும் கட்டணம் உயர்த்தப் போவது பற்றி மக்களிடம் கருத்து கேட்கிறது'' என்று கிண்டலாகக் கூறினார் **திரு. ஏ. சௌந்தர்ராஜன்**. இவர் சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கத்தின் போக்குவரத்து பிரிவு செயலாளர்.

''டெல்லியில் 17 கி. மீ. தூரம் போவதற்கு 50 பைசாதான் ஆனால் சென்னையில் 1 ரூபாய். இதேபோல் மற்ற மாநிலங்களான ஆந்திரா, மே. வங்கம், கேரளா ஆகியவற்றிலும் தமிழகத்தை விட நகர பஸ் கட்டணம் குறைவு. ''அண்ணா நகர் இடைத் தேர்தலின் போது பஸ் கட்டணத்தை உயர்த்த மாட்டோம்'' என்று சொன்ன எம். ஜி. ஆர். இப்போது செய்வது ஏன்? தோல்வி அடைந்ததாலா? பல்லவனில் நஷ்டக் கணக்குக் காட்டுவதென்பது மிகவும் கேலியான ஒன்று. 1982–83–ல் தேய்மானத்திற்கு (Depriciation) ஒதுக்கியது 8 கோடி ரூபாய். இன்றைக்கு நகரத்தில் 2085 பஸ்கள் இருக்கின்றன. இரண்டரை வருடங்கள் ஒரு பஸ் ஓடினால் 40 சதவீதம் தேய்மான மதிப்பாக எடுத்துக் கொள்ளப் படுகிறது. ஆனால் பாலன்ஸ் ஷீட்டுகளுக்காகத் தான் இந்தக் கணக்கே தவிர, பஸ்கள் 8 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கின்றன. அதாவது தேய்மான செலவு என்று கூறப் படும் தொகை, பஸ்ஸின் விலையையும் மீறிச் சென்று விடுகின்றது. ஆனால் பஸ்கள் மட்டும் தெருக்களில் ஓடுகின்றன. பல்லவன் ஓர் அரசு சார்பு நிறுவனம். எந்த அரசு சார்பு நிறுவனத்துக்கும் அரசு மான்யம் கொடுக்க வேண்டும். இது மற்ற மாநிலங்களில் நடைபெறுகிறது. இங்கு கிடையாது. அரசு போட்ட மூலதனத்துக்காகப் பி. டி. சி. வட்டியாக 4 கோடி ரூபாய் 1982–83–ல் அரசுக்குக் கொடுத்துள்ளது. இது எப்படி என்றால் மனைவிக்குக் கணவனே கடன் கொடுத்து வட்டி பெறுவது போல்



✖ சீனிவாசன்



✖ சுந்தர்



✖ ஸ்நேகலதா



✖ ஏ. சௌந்தர்ராஜன்




''நெரிசலில் போய்வருவது நரக வேதனை...''

இருக்கிறது. தேய்மான செலவு, வட்டித் தொகை இப்படியாக மொத்தத்தில் 18 கோடி ரூபாயை ஒதுக்கி விட்டு 8 கோடி ரூபாய் நஷ்டம் என்கிறார்கள்.

''நகரத்தில் 2 கி. மீ. தூரத்திற்கு ஒரு ஸ்டேஜ் என்றும் அதற்கு, கி. மீ.க்கு 7·5 பைசா கட்டணம் என்றும் பல்லவன் கூறுவது சுத்தப் பொய். அப்படிப் பார்த்தால் 30 பைசாவிற்கு 4 கி. மீ. பயணம் செய்ய வேண்டும். இந்த fare stage Fair stage அல்ல. நிறைய இடங்களில் 1 கி. மீ. தூரத்திலேயே fare stage வந்து விடும். மேலும் ஒரு கி. மீ. தூரத்திற்கு பஸ்களை ஓட்ட 4.87 சாசுதான் பல்லவனுக்குச் செலவாகிறது.

''பல்லவன் கூறும் இன்னொரு காரணம், தொழிலாளர்களுக்குச் சம்பளம் கிராக்கிப் படி, போனஸ் என்று அதிகம் செலவாகிறது என்பது. இந்தியாவிலேயே பஸ் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் அளிப்பதில் தமிழகம் ஒன்பதாவது இடத்தில்தான் இருக்கிறது. மற்றும் டீசல், பஸ் சேஸிஸ், டயர் ஆகியவற்றின் விலை உயர்ந்து விட்டதாகக் கூறுவார்கள். இது உண்மைதான். இந்த விலையேற்றத்தை மத்திய அரசுதான் கட்டுப்படுத்தி இருக்க வேண்டும். அல்லது மாநில போக்குவரத்து நிறுவனங்களுக்குக் குறைந்த விலையில் உதிரி பாகங்களை வழங்க மத்திய அரசு உதவ வேண்டும். இந்த உதிரி பாகங்களின் விலை உயர்வினால் லாபம் சம்பாதிப்பது தனியார் நிறுவனங்கள்தான். நம் நாட்டிலேயே கச்சா எண்ணெய் உற்பத்தி அதிகரித்துள்ளதால் மத்திய அரசு 5000 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தி, எண்ணெயை வெளிநாடுகளில் வாங்குவதை வெகுவாகக் குறைத்துள்ளது. அப்படியிருக்க இந்தியாவில் ஏன் எண்ணெய் விலையை உயர்த்திக் கொண்டே போகிறோம்? இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் அரசு போக்குவரத்து நிறுவனங்களுக்குச் சலுகை கட்டண முறையில் டீசல் தர வேண்டும்.

''பஸ் கட்டணம், டீசல் விலை, பஸ்களின் எண்ணிக்கை எல்லாம் பெருகியும் ஊழியர்களின் சம்பளம் மட்டும் உயர்த்தப் படாமல் இருக்கிறது. 1981-ல் பஸ் கட்டணத்தை உயர்த்தினார்கள். அப்போது 4 சதவீதம் ஊக்கத் தொகையாக இருந்ததை 3.5 சதவீதமாகக் குறைத்து விட்டார்கள். பல்லவனில் அனாவசிய செலவுகள் அதிகம். பஸ்களில், வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான 'டைகிராஃப்' என்ற சாதனத்தை வாங்கினார்கள். இன்று எந்த பஸ்ஸில் இது செயல்படுகிறது? இதில் எக்கச்சக்க நஷ்டம். 18000 பேர் வேலை செய்யும் பல்லவனில் 300 ஆளும் கட்சி நபர்கள் எந்த வேலையும் செய்யாமல் மாதா மாதம் சம்பளம் மட்டும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இது பல்லவன் உயர் அதிகாரிகளுக்கே தெரியும். ஆனால் ஒன்றும் செய்ய முடியாது. ஆளும் கட்சியின் ஆட்களாயிற்றே!

''சீஸன் டிக்கெட் விற்பனையிலும் ஊழல். முதல் தேதி முதல் 15-ம் தேதி வரை சீஸன் டிக்கெட் கொடுப்பதாகக் கூறுவார்கள். ஆனால் 3-ம் தேதி போய்ப் பாருங்கள், 'தீர்ந்து விட்டதே' என்பார்கள். இதற்குக் காரணம் ஒன்றரை லட்சம் சீஸன் டிக்கெட்டுகள் விற்றுக் கொண்டிருந்தவர்கள் அதில் வருமானத்தை இழப்பதால் 59000 சீஸன் டிக்கெட்டுகள் தான் இன்று விற்கிறார்கள். இது கடந்த இரண்டு மாத காலமாக நடந்து கொண்டிருக்கிறது.

''இப்படியாகப் பார்த்துக்கொண்டு போனால், பல்லவன் அதிக வருமானம் தேடிக் கொண்டிருக்கிறதே தவிர நஷ்டமடைய வாய்ப்பில்லை. கட்டண உயர்வுக்கும் அவசியமில்லை. பஸ் போக்குவரத்து என்பதை அரசு பொது நல நோக்குடன் நடத்த வேண்டும். எனவே 'லாப நோக்கத்துடன் வியாபார ரீதியாக நடத்து' என்ற உலக வங்கியின் கட்டளையை ஏற்றுக் கொண்டு கட்டணத்தை உயர்த்துவது என்று அரசு முடிவு செய்யக் கூடாது.''

கிளாமர் கிருஷ்ணமூர்த்தி (படம் + போன் நெ. கிமே.) ஒரு உபயோகமான காரியம் செய்திருக்கிறார்.

சினிமாத் துறையில், பத்திரிகைத் துறையில், பப்ளிசிடி துறையில் உள்ள பலரது ஃபோன் எண்களை அழகிய பாக்கெட் புத்தகமாகத் தயாரித்திருக்கிறார்.

இப்படி வெளியிட்டால் நடிகர்களின் ரசிகர்கள் அடிக்கடி ஃபோன் செய்து தொல்லைதர மாட்டார்களோ? ஊஹும்.. 'திரைப்படத் துறையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டும்தான் இந்தப் புத்தகம் விநியோகமாகும்' என்கிறார் ஜி. கே. 'அப்பாடா, பிழைத்தோம்' என்று ஒரு பெருமூச்சு விடலாம் சினி ஃபீல்டில் இருப்பவர்கள்..



843314



இதோ உங்கள்
மெய்க்காப்பாளர்!
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
CHAITRA-B G 189 TAM
கோத்ரெஜ்
ஸின்த்தால் துர்நாற்றத்தைப் போக்கும் சோப்
அனைவர் மெய்க்கும்
அவசியமான மெய்க்காப்பாளர்

## பயணிகள் கருத்து

பஸ்ஸில் பயணம் செய்கிற பொது மக்கள் என்ன நினைக்கிறார்கள்? சில சாம்பிள்கள்:

**திரு. கே. சீனிவாசன் (நங்கநல்லூர்)**

''உத்தேசித்துள்ள கட்டண உயர்வு சாமானிய மனிதனை மிகவும் பாதிக்கும். இப்போது அதிகபட்சம் ரூ. 1·55 கொடுப்பவர் மாற்றி அமைக்கப்பட்டுள்ள விதிப்படி ரூ. 2·50 கொடுக்க வேண்டிவரும். கட்டண உயர்வு ரொம்ப அவசியம் தான் என்றால், இப்போதைக்கு ஒரு ஸ்டெப்பாகவும், இன்னும் ஆறு மாதமோ, ஒரு வருடமோ கழித்து, அடுத்த ஸ்டெப்பாகவும் இரு தடவைகளில் அதிகரிக்கலாம்''.

**மிஸ். ஸ்நேகலதா, (அசோக் நகர்)**

''கட்டண உயர்வாம். இதை மட்டும் தவறாமல் செய்து விடுகிறார்கள். ஆனால் பயணிகளுக்குத்தான் வசதிகள் ஒன்றும் செய்து தரக் காணோம்! காலையும், மாலையும் நெரிசலில் போய் வருவது நரக வேதனை. சில சமயங்களில் என்ன, பல சமயங்களில் கால் கடுக்க ஒரு மணி நேரம் நின்றாலும் பஸ் வராது. கடைசியில் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு மூன்று பஸ்களாய் வரும். இதை ஒழுங்குபடுத்த எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டேன் என்கிறார்கள். பஸ்களைச் சுத்தமாய் வைத்துக் கொள்வது இடையாது. கட்டண உயர்வு என்று வரும் போது, பயணிகள் சௌகரியங்களையும் கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டும்.''

**திரு. சுந்தர் (தண்டையார்பேட்டை)**

''நாட்டில் சாக்லேட் விலையிலிருந்து பவுன் விலை வரை எல்லாவற்றின் விலையும் அதிகரித்து விட்டது. எங்கே வேலை பார்க்கிறவராய் இருந்தாலும், வருடா வருடம் சம்பளம் கூடுகிறது. ஆனால் பஸ் கட்டணத்தை மட்டும் அதிகரிக்காமல் அப்படியே வைத்திருக்க வேண்டுமாம்! இது எப்படி சார் சாத்தியம்? நாம் உலக வங்கியிடம் கடன் கேட்கும்போது வட்டியுடன் திருப்பித்தர வேண்டாமா? எனவே அவர்கள் கட்டணத்தை உயர்த்தச் சொல்கிறார்கள். இவர்கள் உயர்த்துவதைத் தவிர வேறு வழி? இதில் பல்லவனைக் குறைகூறி என்ன பயன்? கட்டண உயர்வு நியாயம் என்றே எனக்குப்படுகிறது.''

புகைப்படங்கள்: சுபா


# GANESHJI MANDIR

## IRWIN ROAD, NEW DELHI-1

**An appeal to YOU**

**Sani Preethi to ward off the bad effects of Sani Bhagwan**

As you know, our human life is controlled by the Navagrahas and Sani plays an important role in every one's life. Therefore, for the smooth running of our daily life, Sani Bhagwan's blessings are very necessary. It has been the belief from time immemorial that by pleasing Him, He minimises the intensity of our sufferings to a great extent. Offering til oil to keep lamp (kept before Sani Bhagwan) glowing day and night is the most simplest, easiest and economical way of pleasing Sani Bhagwan.

It is our desire to deposit an amount of two lakhs of rupees by collecting Rs. 200/- from each devotee and out of the interest thereof, it should be possible to keep the lamp glowing for ever. **Thus your contribution of Rs. 200/-** (that too only once in your life time) is for an **external cause** and **for the entire future.** It is hoped you would like to associate yourself in this noble scheme. Your cheque drawn in favour of **'Ganeshji Mandir'** my please be sent to Sri S.R. IYER, Secretary.

# அமரர் கல்கிக்கு சங்கீதாஞ்சலி

ஒரு பக்கம் செல்வி ஜெயலலிதாவின் பேட்டியை ஆடம்பரமாகப் போட்டு அ. தி. மு. க. வினை உயர்த்திக் கூற விட்டு அடுத்தபக்கம் ஊழல் மிகுந்த அ.தி.மு.க. ஆட்சி என்ற தலைப்பாக்கம் தீட்டத் தங்களால் தான் முடியும்.
லால்குடி—1. எம். இராஜேந்திரன்.

'வேறு கிரகங்களில் இருந்து வந்த கடவுளர்கள்' கொள்கையைப் பற்றி 'தராசு' பதில் நம்பிக்கையின்மையைப் புலப்படுத்துகிறது. எதையெதையோ நம்புகிறோம். இவற்றை நம்பினால் என்ன தவறு?
சென்னை—78, சுப்ர. பாலன்.

மாஜி நடிகைக்கு ''கல்கி'' அளித்திருக்கும் முக்கியத்துவம் என் போன்ற வாசகர்களுக்குப் பெருத்த வருத்தத்தை, கோபத்தை உண்டாக்கியிருக்கிறது.
''கல்கியைத் தொட்ட களங்கம்
காசிக்குப் போனாலும் தீராது!'' —
அம்மாப்பேட்டை, த. குணசேகரன்.

அமரர் கல்கி நினைவுச்சிறுகதைப்போட்டியில் பரிசு பெற்ற எழுத்தாளர்களைப் பற்றிய குறிப்புக்கள் அவர்களின் கதைகளைப்போல் வெகு சுவாரஸ்யமாக இருந்தன.
நெல்லிக்குப்பம், ரா. ஜோதிராமன்.

ஜெயலலிதா பேட்டியில், ''நான் நவீன உடைகள் எதுவும் அணிவது கிடையாது. புடவைதான் கட்டிக் கொள்கிறேன்'' என்று கூறியுள்ளார். ஆனால் மேலட்டையில் சல்வார் கமீஸ் அணிந்து காட்சி தருகிறாரே?
திருச்சி—6, ஜே. பிரேமா.

பேட்டி முடிந்த கையோடு அவர் புதுதில்லி சென்றுவிட்டதால் நேரத்தோடு புதிய படம் எடுக்க இயலவில்லை. அட்டைப்படத்தில் பிரசுரமானது அவர் அரசியலுக்கு வருமுன் எடுத்த படம். -ஆர்

தி. மு. க. காரர்கள் என்றும் கணக்கைப் பொது மக்களிடம் காட்ட வேண்டும். அ. தி. மு. க. காரர்கள் மட்டும் கணக்கை எம். ஜி. ஆரிடம் காட்ட வேண்டுமா? கோ. ப. செ. அவர்களே! எங்கே கற்றீர்கள் இந்த நியாயத்தை?
கும்பகோணம், டி. எஸ். சீதாராமன்.

முகமூடிகள் வந்து விட்டால் என்ன செய்வது என்று கலங்கிக் கொண்டிருந்த சென்னை மற்றும் இதர புறநகர்வாசிகள் கல்கி வாசகர்களிடமிருந்து முகமூடிகளைச் சமாளிக்கும் வழிமுறைகளைக் கற்றுக் கொண்டு விட்டார்கள். வாழ்க உங்கள் சமூகத் தொண்டு!
சென்னை—14 துயாறு எஸ். வாசுதேவன்.

கர்நாடக முதல்வர் ஹெக்டேயைப் பற்றி அனிதா பிரதாப் அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் மிகவும் துல்லியமாக இருந்தன. நேர்மையோடும், நாணயத்தோடும் அவர் செயல்படுவதால்தான் அவரை இன்று வரை யாராலும் ஆட்சிப் பீடத்தில் இருந்து அகற்ற முடியவில்லை.
சென்னை—5. எஸ். சம்பத்குமார்.

9.9.84 அன்று கிருஷ்ண கான சபாவில் திரு. சங்கரநாராயணன் முதல் தர பக்கபலத்துடன் (சந்திரசேகர், மூர்த்தி) மயக்கிய மாலையில் இதமாக ஓடிய கச்சேரியில் திடுமென இறுக்கமான முடிச்சுடன் விழுந்ததொரு ஹரி காம்போதி ஆலாபனை... அழகான, கனமான, விரிவான ஆலாபனையை அடுத்து வந்ததொரு அருமையான சிறு பாடல்:

வண்டாடும் சோலைதனிலே
கண்டேனதுளம் கொண்டான் சகியே
(வண்டாடும்)

கண்ணனைக்காதலில் கண்ட பாடல்; பாவத்துடன் பாடிய போது மெய்சிலிர்த்தது. 'பாரதியின் பாட்டாயிருக்குமோ? ஆனால் கேட்டதில்லையே?' என்று சிந்தனை ஓட, நிரவலிலும் சுவரப் பிரஸ்தாரத்திலும் அந்தச் சிந்தனை அழிந்து இசை மட்டுமே மின்னலென்று இதயத்தில் ஓங்கி நின்றது. முத்தாய்ப்பாய் அறிவித்தார் பாடகர்: ''இது கல்கியின் சாகித்யம்; இன்றவர் பிறந்த நாள்!'' ஆச்சரியத்தினூடே ஆனந்தம்!

இந்தப் பாடலை ஸ்ரீமதி எம். எஸ். முன்பு அடிக்கடி பாடுவார் என்று வீடு திரும்பியதும் பெரியோர் கூறக் கேட்டேன்.

இளைஞர் சங்கர நாராயணன், கர்நாடக இசையின் மறுமலர்ச்சிக்கு எவ்வளவோ



செய்த கல்கிக்கு சங்கீத உலகின் சார்பில் பொருத்தமான விதத்தில் அஞ்சலி செலுத்தி விட்டார்.
சென்னை—26, வடபழனி பாலு.

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)





**சென்றோம்**
**பார்த்தோம்**
**சொல்கிறோம்**

# பொன்னியின் செல்வனுக்குப்

தஞ்சை விளையாட்டுத் திடலில் துவக்க விழா. வெயிலையும் பொருட்படுத்தாது, நல்ல கூட்டம். ரொம்ப டைட்டான செக்யூரிட்டி. (உயரமான தண்ணீர்த் தொட்டியின் மேலே கூட போலீஸ் நின்று கண்காணித்துக் கொண்டிருந்தது.) திடலில் ஒரு திறந்த மேடையில் அரசுக் கலைஞர் ஷேக் சின்ன மௌலானா நாயனம் வாசித்துக் கொண்டிருந்தார். கடும் வெயிலில், தலையில் துண்டைப் போட்டுக்கொண்டு சுமார் ஒன்றரை மணி நேரம் மௌலானா நாயனம் வாசித்தது, பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. அமைச்சர் ஆர். எம். வீ. அதிகாரிகளை இதுபற்றிக் கடிந்து கொண்டார்.

பிரதமர் பேச்சை மொழி பெயர்க்கையில் வழக்கம்போல் குளறுபடி. இதைத் தவிர்க்க இனியேனும் ஏதேனும் ஒரு வரைமுறையை உருவாக்குதல் வேண்டும். பேச்சை முடிக்கும் போது, வழக்கம் போல் தமிழில் 'வணக்கம்' சொன்னார்.

**கோவிலில் இந்திரா!**

பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்கப்பட்டார். தஞ்சைக் கோவிலில் உள்ள ஓவியங்களைப் பார்த்து, மகிழ்ந்து, ''நான் என் பெற்றோருடன், சின்ன வயதில் வந்திருக்கிறேன் இங்கே'' என்றார். வெளியில் வந்து இளநீர் சாப்பிட்டார். நேரே 'ஹெலி பாட்'டுக்குப் போய்த் திருச்சிக்குப் புறப்பட்டார்.

**ஆய்வரங்கம்**

என்சைக்ளோபீடியா பிரிட்டானிகாவில் கட்டிடக் கலை பற்றிச் சொல்கையில், தஞ்சை கோவில் பற்றிக் குறிப்பிட்டிருப்பதை அத்தனை பேச்சாளர்களும் மறக்காமல் சொன்னார்கள். ஆய்வரங்கத்துக்குச் சிறப்பளித்தவர்கள் கி. ஆ. பெ., திருக்குறளார்.

ராஜராஜன் பற்றிய சிறப்பு மியூஸியம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. அதிலே ராஜராஜன் பற்றி ஒரு ஒலி ஒளிக்காட்சி. ஓவியங்கள் — ம. செ. சபாஷ்!

**மீசை உண்டா இல்லையா?**

இப்போது புதிதாய்க் கிளம்பியுள்ள ராஜராஜன் பற்றிய சர்ச்சை: அவனுக்கு மீசை உண்டா? இல்லையா? ''தஞ்சை கோவிலுக்கு வெளியிலுள்ள ராஜராஜன் சிலைக்கு மீசை இருக்கிறது. ஆனால் உண்மையில் அவருக்கு மீசை இல்லை; எனவே, பிரதமர் அனுமதித்து விட்டால், மீசையில்லாத ராஜராஜன் உலோகச் சிலை ஒன்றை இன்னும்ஒரு ஆண்டுக்குள், கோவிலுக்குள்ளேயே வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்'' என்று பேசியுள்ளார் முதல்வர். ஆனால் தமிழக அரசு விழாவுக்கெனத் தயாரித்துள்ள அழைப்பிதழிலாகட்டும், தஞ்சை அரண்மனையின் நுழைவாயிலில் உள்ள 'கட் அவுட்'டிலாகட்டும், ராஜராஜனுக்குத் தீர்க்கமான மீசை இருக்கிறதே!


**சில சர்ச்சைச் செய்திகள்!**

தொல்பொருள் துறையினர் வெளியிட்டுள்ள சிறப்பு மலரில் இரு செய்திகள்:

தஞ்சைக் கோவிலின் பெரிய நந்தி, ராஜராஜன் உருவாக்கியது இல்லை; நந்தியும், நந்தி மண்டபமும் நாயக்கர் காலத்தவை என்பது ஒரு செய்தி. கோவிலின் மேலே உள்ள சிகரக்கல் ஒரே கல் இல்லை; ஆரஞ்சுச் சுளைகள் போல, பல கற்கள் ஒன்று சேர்ந்து அமைக்கப்பட்டது என்பது மற்றொன்று.

**பட்டி மன்றம்!**

ராஜராஜன் சிறப்புக்குக் காரணம் அவனது அரசியல் மாட்சியா? கலை மாட்சியா என்று பட்டிமன்றம். ஜெயித்தது கலைமாட்சிதான். பட்டிமன்றத்திற்குத் தலைமை, அமைச்சர் காளிமுத்து. அவர் பேச்சு பற்றி ஒரே வார்த்தை! அற்புதம்!




## நிறைவு விழா!

அய்யாரு வாண்டையார், ''என் வெற்றிக்குக் காரணம் எம். ஜி. ஆர். அவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பொன்னாடை போர்த்தி இந்தக் கிரீடத்தை (வெள்ளி) அளிக்கிறேன்'' என்றார். மற்றும் பலர் எம். ஜி. ஆர். ஸ்துதி பாடினர். சுருக்கமாய்ப் பேசிக் கைத்தட்டல் பெற்றவர்கள்; நீட்டிப் பேசி, ஜனங்கள் கைத்தட்ட, புரிந்து கொண்டு, பேச்சை முடித்துக் கொண்டவர்கள்; அப்படியும் நிறுத்தாமல் பேசி, அறுத்தவர்கள் என்று பல ரகம்.

முதல்வர் பேச ஆரம்பிக்கும் போது மணி 11. முடிக்கும் போது 12 (இரவு). எம். ஜி. ஆர். பேசும்போது சொன்னார்: ''நான் இப்போது சொல்லப் போகிற விஷயத்தைக் கேட்டால் நீங்கள் சந்தோஷப்படப் போகிறீர்கள். கல்கியின் 'பொன்னியின் செல்வன்' கதையை எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் படமாய் எடுத்து வெளியிடும்!'' எதிர்பார்த்த படியே கூட்டத்தினர் சந்தோஷப்பட்டனர்.

அதன் பின் அரசுக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள். முடியும் போது சுமார் மூன்றேகால் மணி. அதுவரை எம். ஜி. ஆர். இருந்து, பார்த்து விட்டுத்தான்போனார்.

## சில 'ஏன்'கள்!

- மியூஸியம் திறப்பு விழாவில் ஒரு அரசு அதிகாரி, எம். ஜி. ஆரை 'இதயதெய்வம்' புரட்சித் தலைவர்' என்றெல்லாம் புகழ்ந்தாரே?
- அமைச்சர் ஒருவர் தொடக்க உரையில் நிகழ்ச்சிக்கே வராத ஒருவரை, அழைப்பிதழைப் பார்த்தபடி, 'அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய ...............அவர்களே!' என்று அழைத்தாரே!
- நிறைவு விழாவின் போது பேசிய சீனியர் அமைச்சர், முதல்வரிடம் தம் அபிமானத்தைக் காட்ட, வீணை, எஸ். டி. எஸ்ஸை இழுத்தாரே!
- நிறைவு விழா மேடையில் வைக்கப்பட்டிருந்த ராஜராஜன் சிலைக்கு அணிவிக்கப்பட்ட மாலையில், கறுப்பு, வெளுப்பு, சிவப்பு வரும்படி அமைக்கப்பட்டிருந்ததே!
- 'செக்யூரிட்டி' என்ற பெயரில் போலீஸார் பத்திரிகை போட்டோகிராபர்களிடம் கடுமையாய் நடந்து கொண்டனரே!

## முடிவாக...

ராஜராஜனின் பெருமைக்கு ஏற்ற பெருவிழா அவன் ஆட்சித்திறனை நினைவூட்டும் திருவிழா.

எஸ். சந்திரமௌலி

✕ இராஜராஜன் சிலைக்குக் காஞ்சிப் பெரியவர் வழங்கிய பொன்முடியைச் சூட்டினார் பிரதமர்.



## க்ளோஸ் அப்



அடிக்கொருதரம் போன் பண்ணி, நினைவூட்டி, நினைவூட்டி, சோவிடம் ஒரு கட்டுரையை வாங்குவதற்குள் அப்பப்பா! போதும் போதும் என்றாகி விடும்! எல்.கே.ஜி படிக்கிற என்னுடைய பையனுக்குப் பக்கத்தி லேயே உட்கார்ந்து கொண்டு, அவனை 'வீட்டுப் பாடம்' பண்ண வைப்பதில் ஏற்படு கிற அனுபவத்துக்கும் சோவிடம் கட்டுரை வாங்குகிற அனுபவத்துக்கும் அதிக வித்தி யாசமில்லை! நான் போன் பண்ணுவேன். மறுமுனையில் ரிசீவர் எடுக்கப்பட்டு, 'ஹலோ' என்ற என் குரல் கேட்டதுமே 'சோ வெளி யூர் போயிருக்கிறார்' என்றோ, 'வெளியே போயிருக்கிறார்' என்றோ பதில் வரும். ஆனால் பேசுவது சோவேதான் என்று எனக்குத் தெரிந்து போகும்! சிரித்துவிட்டுத் தொடர்ந்து கட்டுரை கேட்பேன். ஒருசமயம் அவர், 'சோ செத்துப் போய் விட்டார்'! என்றார். 'நான் கட்டுரை கேட்பது உங்க ளுக்கு இப்படிப் பேசுமளவு தொந்தரவாய் இருக்கிறதென்றால் நீங்கள் கட்டுரை தரத் தாமதிப்பது எங்களுக்கு எவ்வளவு சிர மத்தைத் தரும் யோசியுங்கள்' என்றேன். அப்புறம் ஒரே சிரிப்பு!

சோவின் நகைச்சுவை எழுத்திலும் மேடைப் பேச்சிலும் மட்டும் பரிணமிப்பவை அல்ல. அவரைப் பார்த்து 'ஹலோ!' சொல்வதில் ஆரம்பித்து, 'பை' சொல்லி விடைபெறுகிற வரையில் சிரித்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான்! அட, என்ன சரளமாய் வருகிறது அது!

# சிரிக்க வைக்கும் சீரியஸ் மனிதர்



தாம் எதையும் நகைச்சுவையாய்ச் சொல் வதால், மற்றவர்கள் அவற்றைப் படித்து விட்டு அல்லது கேட்டுவிட்டு, சிரித்துவிட்டுப் போய் விடுகிறார்கள்; எதையும் சீரியஸாய் எடுத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார்கள் என்று பல சமயம் சோ குறைபட்டுக்கொள்வ துண்டு. இது விஷயத்தில் நான் சோவிட மிருந்து கருத்து வேறுபாடு கொள்கிறேன். பத்துப் பக்கங்களில் விரிவாக மற்றவர்கள் எழுதுவதைத் தம் நையாண்டி மூலம் ரொம்பச் சுருக்கமாகவும், அழுத்தமாயும் அவர் சொல்வதாய் நான் நினைக்கிறேன்.

சோ ஒரு சீரியஸான மனிதர். எப் போதும் எதைப் பற்றியாவது சிந்தித்துக் கொண்டே இருப்பார். அவருக்கு இந்த நாட்டின் அரசியல் நிலை பற்றி எப்போதுமே ஆழ்ந்த கவலை உண்டு.

'சோ'வைப் பற்றி என்னை ஆச்சரியப் படுத்துகிற இன்னொர் விஷயமும் உண்டு. தினமும் பலவிதமான வேலைகளிலும் ஈடுபட அவருக்கு எப்படி நேரம் கிடைக்கிறது? பத்திரிகை வேலைகள், மற்றப் பத்திரிகை களுக்கு எழுதுவது, தாம் லீகல் அட்வைஸ ராய் உள்ள கம்பெனி விவகாரங்களைக் கவ னிப்பது, ஜனதாக் கட்சிப் பணி, நாடகம், சினிமா என்று பெரிய லிஸ்ட்!

அடுத்தது சோவின் அரசியல் பிரவேசம் பற்றி: பத்திரிகையாளர்கள் வெளியில் இருந்து கொண்டு, அரசியலை விமர்சிப்பது சுலபமான விஷயம். ஆனால் 'சோ' அரசிய லில் புகுந்து, அதை ஒழுங்குபடுத்த முயல் கிறார். அதேசமயம் கட்சிக் கட்டுப்பாடு காரணமாகத் தமது சிந்தனை, எழுத்துச்சுதந் திரங்களை இழந்து விடாமல் பாதுகாத்துக் கொள்ளவும் முயல்கிறார். இவ்விரண்டில் அரசியலில் முன்னேறுவதை விட பத்திரிகை சுதந்திரத்தையே அவர் முக்கியமானதாகக் கருதுகிறார். இதனால் அவரிடம் எனக்கு மதிப்பு அதிகரிக்கிறது.

அனிதா பிரதாப் சொல்ல

எஸ். சந்திரமௌலி

# கல்கி

தீபாவளியின் குதூகலம்;
வண்ணங்கள்; அதன் தெய்வீகம்
முதலியவற்றைப் பிரதிபலிக்கும்
உன்னதத் தயாரிப்பு


மிகப்பிரபலமான எழுத்தாளர்களின் கதைகள்
கட்டுரைகள், கவிதைகளுடன் முதல்தர
ஓவியர்கள், புகைப்பட நிபுணர்களின்
ஒத்துழைப்புடன் வண்ணக் களஞ்சியமாக
உருவாகிறது. காலமெல்லாம் போற்றிப்
பாதுகாக்கக்கூடிய பொக்கிஷம்.

விலை ரூ.: 20/- தபால் செலவு: ரூ. 5/-


இன்றே உங்கள் ஏஜெண்டிடம் பதிவு செய்து
கொள்ளுங்கள்.




## 1984 தீபாவளி மலர்


ஆந்திர மக்கள்


இந்த ஆள் நகர்ந்துட்டார்னு ஆச்செடி நல்லா வளருங்க!
சீக்கிய மக்கள்
சமரச உணர்வு


பாரதம்
கச்சத் தீவில்
ராணுவப்



கல்கி

1984 செப்டம்பர் 30
மலர் : 43. இதழ் : 9
ரக்தாக்ஷி புரட்டாசி 14



# தெலுங்குத் தாய்க்கு மலர் மாலை!

தோல்வி நிச்சயம் என்று தெரிந்த பிறகேனும் அதைப் பெருந்தன்மையாக ஏற்றுக் கொண்டிருக்கலாம் பாஸ்கரராவ் கும்பல். ஆனால் இத்தகைய ஜனநாயகப் பண்பாடு அவர்களுக்கு இருக்குமேயானால் என். டி. ஆரின் பதவி நீக்கமே நிகழ்ந்திராதே! எனவே அவர்கள் மறுபடி மைக்குகளை உடைத்ததும் மேஜைகளைப் பிளந்து பலகைகளை வீசியதும் அமளி செய்து சட்டசபை நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுத்து விட முயன்றதும் வியப்பளிக்க வில்லை. இந்த சகுனிகளும், துச்சாதனர்களும் இருக்கும்வரை குருக்ஷேத்திரப் போர் தொடரும். என். டி. ஆரின் தெலுங்குதேசம் கணப்போதும் அயர்ந்து விடாமல் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம்.

இந்திய ஜனநாயகத்துக்கே இழுக்குத் தேடித் தருவதாக ஆரம்பித்து அதே ஜனநாயகத்தின் மாபெரும் வெற்றியாகவும் முடிந்த இந்த நிகழ்ச்சியி லிருந்து இ. காங்கிரஸும் அதன் தலைவர்களும் பாடம் கற்பார்களா என்றால் அவ்வாறு தோன்றவில்லை. அக்கட்சித் தலைமையில் ஜனநாயக விரோதச் செயல் களும் எதேச்சாதிகாரப் போக்குகளுமே நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. உட்கட்சி ஜனநாயகத்தை வளர்த்து மாவட்டங்களிலும் மாநில அளவிலும் நல்ல தலைமைகள் உருவாக வழி வகுத்து அவர்கள் சுயேச்சையாக முடி வெடுக்க அனுமதிப்பதே நல்லது. எங்கோ டில்லியில் இருந்து கொண்டு ஹைதராபாத் நிலவரங்களை அரைகுறையாகத் தெரிந்து கொண்டு ஆணைகளைப் பிறப்பிக்கப் போக அது திருடனுக்குத் தேள் கொட்டிய கதையாக முடிந்தது. இ. காங்கிரஸ் தலைமைக்கு பாஸ்கரராவின் பலவீனங்களும் புரியவில்லை; ஆந்திர மக்களின் மனமும் தெரியவில்லை. ஜனநாயகத்தில் மக்களைப் பகைத்துக் கொண்டு எதைச் சாதிக்க முடியும்?

பாஸ்கரராவ் கும்பலில் பலர் கண்டனத்துக்கு மட்டுமின்றித் தண்ட னைக்கும் உரியவர்கள். பெருந்தன்மை காட்ட வேண்டியதுதான். ஆனால் என். டி. ஆரை ஒரு ஸி. ஐ. ஏ ஏஜெண்ட் என்றும், தேசத்துரோகி என்றும் அவதூறுகளைப் பரப்பியவர்களுக்குத் தண்டனை இல்லை என்றால் இவர்களுக்கு மட்டுமின்றி இதர சமூக விரோத சக்திகளுக்கும் துணிவெடுத்துப் போகும். இவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும். சட்டசபைக்குள்ளே தொடர்ந்து தாறுமாறாக நடந்து கொள்பவர்களை இனி சபாநாயகர் வேங்கட ரத்தினம் தக்கபடி கவனித்துக் கொள்வார்.

முதல்வர் ராமராவின் பொறுப்பு முன்னிலும் அதிகமாகிறது. மக்களின் அமோகமான ஆதரவை அன்றும், இன்றும் என்றும் பெற்றிருப்பதா லேயே அவர் அடக்கத்துடனும் அதிவிவேகத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். எல்லாப் பொறுப்புக்களையும் தாமே சுமக்காமல் அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும். உட்கட்சி ஜனநாயகத்தை அடி மட்டத்திலிருந்து வளர்க்க வேண்டும். மேலவை ஒழிப்பு போன்ற அதிதீவிரமான காரியங்களை மனம் போன போக்கில் மளமளவென்று நிறைவேற்றிக்கொண்டு போகக் கூடாது. நிதானப் போக்கையும் கலந்தாலோசிக்கும் மனப்பான்மையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பிரதமருக்குப் போன் செய்து தாம் மறுபடி பதவியில் அமர்வதைத் தெரிவித்து அவரது வாழ்த்தைக் கோரிப் பெற்ற விதத்திலும், ஒரு சோதனைக் கட்டத்தில் தம்மை ஆதரித்த மாற்றுக் கட்சியினருக்கு அமைச்சரவையில் இடம் அளிக்க முன்வந்ததிலும், பழி வாங்கும் உணர்வின்றி நடந்து கொள் வோம் என்று கூறிய வகையிலும் அகம்பாவத்தை ஒதுக்கிப் பெருந்தன்மை காட்டியிருக்கிறார் என். டி. ஆர். இந்தக் கண்ணியமும், பரந்த மனப்பான்மை யும் தொடரட்டும். ஆந்திர மாநிலம் அமைதியும், வளர்ச்சியும் கண்டு பாரத நாட்டுக்கே எடுத்துக் காட்டாகத் திகழட்டும். அண்டை மாநிலத்தை வாழ்த்து வோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.

## தெய்வ தரிசனம்

சேலத்திலிருந்து ஓமலூர் தொப்பூர் வழியாகத் தர்மபுரிக்குப் போக வேண்டும். வழியில் அதியமான் கோட்டை இருக்கிறது. கோட்டை இருந்த தடம் தெரிகிறது என்று அந்தப் பிரதேச ஜனங்கள் கூறுகிறார்கள். ஔவையாருக்கு நெல்லிக்கனி கொடுத்த அதியமான் அரசாண்ட இடம். ஔவையாருடைய கவிதையினால் அமரனான சிற்றரசன். அநியாயமாக இந்தப் பிரதேசத்தை அதமன் கோட்டை என்கிறார்கள். இந்த இடத்தில் ஒரு அதிசயமான கோவில் இருக்கிறது என்பதை யாராவது சொன்னால் தான் தெரியும். நல்ல காலமாக இதை மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வு இலாகா பாதுகாத்து வருகிறது.

கோவிலை அடைந்த போது 'இது என்ன சின்னக் கோவிலாக இருக்கிறதே' என்று தோன்றியது! கோவில் சுத்தமாக இருப்பதைக் கண்டு சந்தோஷமும் உண்டாயிற்று. எதிரே கூப்பியகரங்களுடன் கருடாழ்வாரைப் பார்த்ததும் பெருமாள் கோவில் என்று தெரிந்து விட்டது.

கருவறையில் வீற்றிருப்பவர் அருள்மிகு சென்ன கேசவப் பெருமாள். ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக ஸேவை சாதிக்கிறார். இந்தக் கோவிலைப் பாதுகாத்து வரும் நல்ல பணியைச் செய்கின்ற ஸ்ரீ குணசேகரன் கோவிலைப் பற்றிய சுவையான செய்திகளைக் கூறினார்.

அர்த்த மண்டபம் வரையில் ஹொய்சாள மன்னர்கள் கட்டியது. 9—ஆவது நூற்றாண்டு. தொல்பொருள் ஆராய்ச்சியாளருக்கு இந்தக் கோவில் மகா மண்டபத்திலுள்ள விஜயநகர மன்னர்கள் காலத்துச் சித்திரங்களைப் பாதுகாப்பதில் சிரத்தை ஏற்பட்டிருக்கிறது.

மகாமண்டபம் முழுவதும் ஓவியங்கள் அழிந்தும் அழியாமலும் விளங்குகின்றன. முந்தைய நிர்வாகத்தினர் ஓவியங்கள் மீது சுண்ணாம்பு அடித்து விட்டார்களாம். இப்போது அதைச் சுரண்டி மிகுந்த பிரயாசைப்பட்டு ஓவியங்களைப் பாதுகாத்து வருகிறார்கள். மேல் விதானத்தில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் விசுவரூபம், கருவறைக்கு நேர் எதிரில் காணப்படுகிறது.

இன்னும் ராமாயண மகாபாரத ஓவியங்களும் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. பதின்மூன்றும் நூற்றாண்டில் வரையப்பட்ட சித்திரங்கள். வேறு தேசமாக இருந்தால் இந்த ஓவியங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் தடபுடல் பட்டிருக்கும். பல புத்தகங்கள் வெளியாகியிருக்கும். கல்விச் சிறந்த தமிழ் நாடானபடியால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை. கோவிலை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்தினால் சுண்ணாம்படித்துச் சுத்தம் செய்து விட்டார்கள். அவர்களைக் குறை சொல்வதற்கில்லை.



× காமாக்ஷி

அதமன் கோட்டையைப் பற்றிய இன்னொரு சுவாரஸ்யமான செய்தி. இந்த இடத்திலிருந்து ஒரு சுரங்கப்பாதை தர்மபுரி கோவில் வரையில், சுமார் எட்டு கிலோ மீட்டர் தூரம், செல்கிறது என்று கூறுகிறார்கள். தர்மபுரி கோவிலில் சுரங்கப் பாதை தொடங்கும் இடத்தைப் பார்க்கலாம். இறங்கிப் பார்க்கத் தைரியம் இல்லை.

அதமன் கோட்டையிலிருந்து தர்மபுரி கோட்டைக் கோவிலுக்குச் செல்கிறோம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இயற்றிய பாடல் ஒன்று கோவிலில் காணப்படுகிறது. அதனால் இந்த ஊரை வைப்புத்தலம் என்று கருத இடமிருக்கிறது. இந்த ஊருக்குத் தகடூர் என்ற பெயர் வழங்கி வந்ததாகவும் இதுவே சங்க நூல்களில் குறிக்கப்படும் தகடூர் என்றும் கூறுகிறார்கள். தர்மபுரியிலிருந்து சற்றுத் தூரத்தில் 'தர்மராஜா' கோவில் இருப்பதாகவும் அதனாலேயே தர்மபுரி என்ற பெயர் வந்ததாகவும் கேள்விப்படுகிறோம்.

கோட்டைக் கோவிலின் உள்ளே சில அற்புதச் சிற்ப வடிவங்களைக் காண்கிறோம்.

தேவாரப் பாடலில்

'தாழையூர் தகடூர் தக்களூர் தருமபுரம்
வாழைக்காய்க் கும்வளர் மருகல் நாட்டு
மருகலே.'

என்று தகடூர் குறிக்கப்படுகிறது.

# தருமபுரி காமாக்ஷி

அருள்மிகு மல்லிகார்ஜுன ஸ்வாமியின் ஸந்நிதி. அதிகக் கூட்டம் இல்லை. குருக்கள் இளைஞர். நிதானமாகக் கோவிலைப் பற்றி எடுத்துச் சொல்கிறார்.

முதலில் நமது கவனத்தை ஈர்த்தது சுவாமி சந்நிதியில் உள்ள பெரிய தூண். இரண்டு டன் எடையுள்ள இந்தத் தூண் மேலேயிருந்து தொங்குகிறது என்று நிரூபிக்க ஒரு நூலை எடுத்துத் தூணின் அடியில் விட்டு இரண்டு பக்கமும் பிடித்து இழுத்துக் காட்டினார். கிட்டத்தட்ட கடைசி வரை வந்த நூல் தடைப்பட்டது. ''சிலநாட்களுக்கு முன்வந்த இளைஞர்கள் கனமான சணலை விட்டு இழுத்து உள்ளே அறுந்து போய் விட்டது!'' என்று கூறினார்.



✖ பரவாஸுதேவர்

அதன் பிறகு மகாமண்டப விதானத்தில் உள்ள அஷ்டதிக் பாலகர்களைக் காட்டினார். அரிய வேலைப்பாடு. அவர் கூறிய இன்னொரு விஷயத்தைக் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது. சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தூண்களைக் காரையால் பூசியிருந்ததாகவும், பின்னால் அவற்றை மெள்ள இடித்து அகற்றித் தூண்களை வெளியே தெரியும்படியாகச் செய்ததாகவும் சொன்னார்.

அடுத்ததாக மத்தியில் உள்ள அம்பாள் கோவிலை அடைகிறோம். இது எல்லாவிதத்திலும் ஒரு புதுமையான கோவில். தேவியின் சந்நிதியைப் பதினெட்டுப் படிகள் ஏறித்தான் அடைய வேண்டும். மத்தியில் தேவியின் சந்நிதி. இடது பக்கம் ஸோமேச்வரர். வலது பக்கம் மல்லிகார்ஜுனர். எல்லாமே கிழக்குப் பார்த்த ஸந்நிதி. அம்பாள் கோவில் உயரமாக இருப்பதற்குக் காரணம் அடியில் சக்தி பீடமாகிய மேரு இருப்பது தானாம்.

சந்நிதியில் நின்று அன்னையின் திருநாமம் காமாட்சி என்று அறிந்து கொண்ட போது ஒரு உள்ளக் கிளர்ச்சியே உண்டாயிற்று.


## ஆனந்தி

சேலத்திலிருந்து வரும் வழியில் ஏதோ ஒரு ஊரில் ரோஜாமாலைகள் புத்தம் புதிதாகக் கட்டப்படுவதைப் பார்த்து ஒரு மாலையை வாங்கிக் கொண்டு வந்திருந்தேன். அந்தப் பட்டு ரோஜா மாலையை காமாக்ஷியம்மனுக்கு அணிவித்துத் தீபாராதனை செய்த போது நித்ய யௌவன ஸௌந்தர்யவதியாய் நித்ய கல்யாணியாய், நித்யகன்னியாய், நித்ய சுமங்கலியாய் விளங்கும் தேவியைத் தரிசிக்க என்ன புண்ணியம் செய்தோம் என்று தோன்றியது. திருமாங்கல்யம் துலங்க, கிரீடத்தில் வெண்மை நிற மல்லிகைச் சரமணிந்து ஆடம்பர அலங்காரங்கள் இல்லாமல் ரோஜா மாலையே ஆபரணமாகக் காட்சியளிக்கிறாள். பத்ம பீடம், திருவாசி முற்றிலும் வேறு விதமாக இருக்கிறது.

இங்கே துர்க்காதேவியின் சந்நிதியும் இருக்கிறது. நீல நிறச் சேலையணிந்து சங்கு சக்கரம் ஏந்தி மகிஷன் மீது பிரயோகம் செய்யும் நிலையில் சூலத்தைப் பிடித்துக் கொண்டு நிற்கும் கோலம். அஷ்ட கஜங்கள் தாங்குவது போலக் கட்டிய அமைப்பு. யானையின் தந்தம் வரை மண் மேடிட்டு மறைத்திருக்கிறது. பிராகாரத்தை இடமாகச் சுற்றி வந்தால் ராமாயணக் காட்சிகள் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இந்தக் கோவிலுக்குத் திருப்பணிகள் செய்ய முயற்சிகள் நடந்து வருகிறது. அப்போது பிராகாரத்தைச் சுற்றியுள்ள சிற்பங்கள் தெரியும்படியாகச் செய்வதற்குத் தரையின் மட்டத்தை இறக்கி கஜங்களும்

✖ மல்லிகார்ஜுனேஸ்வரர்



முழுதும் தெரியும்படி செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். நல்ல காரியம்.

ஸ்ரீ ஷண்முகசுந்தர குருக்கள் கோவில் திருப்பணியில் மிகவும் ஊக்கத்துடன் இருக்கிறார்.

மல்லிகார்ஜுன சுவாமி கோவிலில் உள்ள பள்ளியறை நாயகியின் பிம்பம் எந்த சிற்பியால் செய்யப்பட்டதோ! ஊன்றிய கரத்துடன், தாமரை மலர் மீது பாதத்தை ஊன்றிக் கொண்டு சற்றுச் சாய்ந்து அன்பர் வரவு நோக்கிக் காத்திருக்கும் பாவம் இருக்கிறதே. அபிநயக் கலையில் தேர்ந்தவர்கள் கூட அவ்வளவு நயமாக அந்த பாவத்தைக் காட்ட முடியுமோ என்னவோ? அத்தனை நளினம்.

அருகிலேயே உள்ள பெருமாள் கோவிலை அடைந்தோம். இங்கும் எதிர்பாராத இன்ப அதிர்ச்சி. ஏழுதலையுடைய நாகணையின் மீது உயரமான திருமுடி தாங்கி அழகான சக்கரமும் சங்கும் தாங்கி, மடியில் திருமகளைத் தாங்கி இன்புருவமாக வீற்றிருக்கிறார் பரவாஸுதேவர்.

பகவானுடைய முகவிலாஸத்தைப்பார்த்து மகிழ்வதா? ஏழு சிரங்களையுடைய ஆதிசேஷனைச் செதுக்கிய சிற்பியின் திறத்தைக் கண்டு வியப்பதா? பரவாஸுதேவரின் இரு மார்பில் இலங்கும் மணியாரங்களை எப்படித் தான் அத்தனை அழகாய்க் கோத்தமாதிரி செதுக்கினாரோ? தாயாருடைய இடதுகரம் டோலாஹஸ்தமாகஅமைந்திருக்கும்அழகைப் பார்த்து ஆனந்தப்படுவதா? ஒன்றும் புரியவில்லை. தீர்த்தம், திருத்துழாய் வாங்கிக் கொண்டு சடாரியினால் அனுக்கிரகிக்கப்பட்ட பிறகும் வெளியே வர மனமில்லை. அவர்கள் மீதிருந்து கண்களை அகற்ற முடியவில்லை!



# இளமைதான் கண்ணே!

அன்று
உன் பெற்றோர் அருகிருக்க
என்உற்றோர் ஒரு புறமிருக்க
நான் உன்னைப்பார்க்க
நீ மண்ணைப் பார்க்க
உன்
விழிஇமைத் திரைகள்
ஏன்
மூடிமூடித் திறந்தன?

நாணம் என்னும்
நாடகம் நடந்ததாலா?
அன்றி
உன் கண் ஒளி கண்டு
கதிரவன் கண்கள்
கூசிடும் என்றோ?


• • • •

உன்
விரல்களின் நாட்டியம்
எனக்கு
வியப்பைத் தந்தது!

நீ
எண்ணியது
என் எண்ணங்களையா வயதையா?
இரண்டும் இளமைதான் கண்ணே!

நீ
அன்று மௌனத்தை நேசித்ததால்
உன்
குரலை எங்கெங்கோ தேடுகிறேன்
காற்றில் அனுப்பி வைத்தால்
என்
காதுகள் திறக்கும்
கற்பனை வளரும்!

சே. நாச்சியப்பன்



சின்னஞ்சிறு காயத்தில்கூட அழுக்குப் புகுந்துவிடும்
இதனால் காயம் பெரிதாகும், கஷ்டம் உருவாகும்.

# உடனடியாக பாண்ட்-எய்ட் உபயோகியுங்கள்

உலகில் உள்ள தாய்மார்கள் நம்புவது பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்—அது, காயங்களில் அழுக்குப் புகாமலும், தொற்றிலிருந்தும் காயங்களைப் பாதுகாக்கிறது.

ஆகவேதான் பாண்ட்-எய்ட் முழுப் பாதுகாப்பானதாகும். பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்கில் உள்ள நிருபணமான ஆண்டிஸெப்டிக், காயத்தை ஆற்றுவதற்கு உதவுகிறது. அதிலுள்ள நுண்துளைகள் காயங்களை விரைந்தாற்றிட உதவுகின்றன. ஒட்டிக்கொள்ளாத வசதிமிக்க ஒப்பற்ற அடுக்கு.

காயங்களின் வெவ்வேறு வடிவம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வருகின்றன பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள். பெரிய புண்கள், சிறிய வெட்டுக் காயங்கள், கட்டுப்போட முடியாத இடங்கள், கொப்புளம் மற்றும் சிராய்ப்புகளுக்கு எப்போதும் உங்கள் கைவசமிருக்கட்டும் பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.




**கைவசம் வைத்திருங்கள் பாண்ட்-எய்ட்**
**ஏனென்றால், காயங்கள் எங்கும் எந்நேரமும் ஏற்படலாம்.**

OBM/2514/TM

Johnson & Johnson

BAND-AID and JOHNSON & JOHNSON are trademarks of JOHNSON & JOHNSON USA. © J & J '84

# நெருப்பு மலர்

9

**இந்துமதி**

ஒரு பெரிய கண்ணாடி டம்ளர் நிறைய புதிதாய் ஆரஞ்சு ஜூஸ் வைக்கப்பட்டது. அதைக் குடிப்பதா வேண்டாமா என்பதில் கூடக் கிருத்திகாவிற்குச் சந்தேகம் வந்தது. சாதாரணமாக அப்படியெல்லாம் சந்தேகப் படாதவள் அவள். எதையும் நல்லவிதமாக எடுத்துக் கொள்பவள். ஆனால் விஷ்ணு பிரசாத்தைப் பொறுத்த வரை தன் மனம் இப்படியெல்லாம் அலைபாய்வதை நினைத்த போது அவளுக்கே அவமானமாக இருந்தது. 'நான் ஏன் இவரைப் பற்றி இப்படியெல்லாம் நினைக்க வேண்டும்? அர்ஜுன் சொன்ன மாதிரி இவர் நல்லவராக இருந்தால் தான் இப்படி நினைப்பது எவ்வளவு பாவம்? அதனால் என் நினைவைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருக்கிற கொஞ்ச நேரம் நல்லபடியாகப் பேசிவிட்டு எழுந்து போய் விட வேண்டும்...'

ஆனால் தொடர்ந்து அவளை அந்த மாதிரி நினைக்க விடாமல் தன் பேச்சாலும் செய்கையாலும் ஈடுபட்டுப் போனான் விஷ்ணு பிரசாத். தானே கண்ணாடித் தம்ளர் ஜூஸை எடுத்து அவள் கையில் தருகிற சாக்கில் மெல்ல அவள் விரல்களை வருடினான். அதை எதேச்சையாகக் கைபட்ட மாதிரி ஒரு பாவனையில் செய்து விட்டுக் கேட்டான்.

''என்ன நீ... புவனேஸ்வரி மாதிரி கலகலப்பாகப் பழக மாட்டேன் என்கிறாய்... வெறும் ஜூஸ் சாப்பிடக் கூடத் தயங்குகிறாய். புவனாவானால் இத்தனை நேரம் தன் சிரிப்பாலும், பேச்சாலும் வீட்டை இரண்டாக்கி விடுவாள். வந்ததும் வெறும் ஜூஸா கேட்பாள்? தானே எழுந்து போய் ஷாம்பெயின் பாட்டிலை உடைத்துக்கொண்டு வந்திருக்க மாட்டாளா...?''

ஷாம்பெயினா...

அம்மாவே உடைத்துக் கொண்டு வருவாளா...? மிகுந்த அதிர்ச்சியுடன் அவள் விஷ்ணு பிரசாத்தைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் 'நீ சொல்வதெல்லாம் நிஜம் தானா...?' என்ற கேள்வி தொக்கி நின்றது. விஷ்ணுபிரசாத் அவளுடைய அதிர்ச்சியையும், முக மாறுதலையும் கவனிக்காதவனாக மிக இயல்பாகச் சிரித்துக் கொண்டே பேசினான்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? நீ அதெல்லாம் சாப்பிடுவதில்லையா...?''

சட்டென்று தன் கையில் இருந்த டம்ளரை எதிர் டீபாயில் வைத்து விட்டுச் சுள்ளென்று அவனைப் பார்த்தாள் கிருத்திகா.

''ஐயாம் ஸாரி மிஸ்டர் விஷ்ணுபிரசாத். சாப்பிடுவது மட்டுமில்லை. இந்தப் பெயரையெல்லாம் கேள்விப் பட்டது கூடக் கிடையாது. அம்மா சாப்பிடுவாள் என்பதே என்னால் நம்ப முடியாத ஒரு விஷயமாக இருக்கிறது...''

ஏதோ பெரிதான ஹாஸ்யம் ஒன்றைக் கேள்விப்பட்ட மாதிரி ஹோஹோ என்று சிரித்த விஷ்ணுபிரசாத்.

''பி. ஏ. படிக்கிறாய். இந்தப் பெயரையெல்லாம் கேள்விப்பட்டது கூட இல்லை என்கிறாயே... அதுவுமில்லாமல் புவனா சாப்பிடுவதே நம்ப முடியாத ஒரு விஷயமாக இருக்கிறது என்கிறாய். ஏன் கிர்த்தி. ஆர் யு எ சைல்ட்...? ஐ வாண்ட் மீ டு பிலீவ் இட்...''

கிருத்திகாவின் முகம் வெந்துபோயிற்று.

''நம்புவதும் நம்பாததும் உங்கள்இஷ்டம் மிஸ்டர் விஷ்ணு பிரசாத். இதற்குமேல் இங்கே நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. வருகிறேன்...''

சடாரென்று எழுந்து கொண்ட அவளின் கையைப் பற்றிய விஷ்ணுபிரசாத். ''என்ன அவசரம்? உட்கார். அர்ஜுன் இதற்குள் வந்திருக்க மாட்டான்...'' என்றார்.

''என்ன... என்ன...''

''என்ன அப்படிப் பார்க்கிறாய்...? இதெல்லாம் எனக்கு எப்படித் தெரிந்தது என்றா...? ஏன் கிருத்திகா, உன்னிடம் என்னை வந்து பார்க்கச் சொன்ன மாதிரி என்னிடம் உன்னைப் போய்ப் பார் என்று புவனா சொல்லியிருக்க மாட்டாள் என்று நினைக்கிறாய்...?''

கிருத்திகா பேசாமல் அவனையே பார்த்தாள். திடீரென்று அவளுக்குள் சொல்லமுடியாத ஒரு தைரியம் ஏற்பட்டது. தன்னை இந்த விஷ்ணுபிரசாத் ஒன்றும் செய்துவிட முடியாது என்று தோன்றியது. அப்படி எதற்காவது அவன் முயன்றாலும் தனக்குள் இருக்கிற ஆன்ம பலமும், மனோபலமும் தன்னை நிச்சயம் காப்பாற்றும். அதனால் நிதானமாகப் பேசி இவனுக்கும் அம்மாவிற்கும் என்ன உறவு அல்லது எந்தவகை நட்பு என்பதைத் தெரிந்து கொண்டுவிட வேண்டும் என்கிற உந்துதல் ஏற்பட மீண்டும் சோபாவில் அவனைவிட்டுச் சற்றுத் தள்ளி உட்கார்ந்து கேட்டாள்:

''அம்மா உங்களுக்கு என்னைப் பற்றி எழுதியிருந்தாளா...?''

''எழுதுவது மட்டுமா...! நீ இங்கே வர தமிழ்நாடு எக்ஸ்பிரஸில் ஏறியதும் என்னை



டெலிபோனில் கூப்பிட்டும் சொன்னுன். நீங்கள் ஸ்டேஷனுக்குப் போய் முதலில் அவனை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்றும் சொன்னுன்...''

''ஆனுல் நீங்கள் ஸ்டேஷனுக்கு வரவில்லையே...?''

''யார் சொன்னது நான் வரவில்லையென்று...?''

''என்னைக் கண்டுபிடிக்க முடியாமல் திரும்பி விட்டீர்களா?''

''ம்ஹூம். அதுவுமில்லை. உன்னை நான் சுலபமாகக் கண்டுபிடித்து விட்டேன்...''

''எப்படி...?''

''கொஞ்சம் இருக்கிறயா...? கொண்டு வந்து காட்டுகிறேன்...?''

விஷ்ணுபிரசாத் வேலையாட்கள் யாரையும் கூப்பிடாமல் தானே எழுந்து போவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் கிருத்திகா. அடி வயிற்றில் சங்கடமாக ஒன்று புரள எதைக் கொண்டு வரப் போகிறுனே அவன் என்கிற பயம் ஏற்பட்டது. தன் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்துகிற எதையும் அவன் கொண்டு வந்து விடக் கூடாதே என்று வேண்டிக் கொண்டாள். அம்மா மீது அளவற்ற அன்பும், மரியாதையும் வைத்திருக்கிறுன். ஒரு ஆதர்ச அம்மா என்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறுன். அது கலைந்து போய் விடக் கூடாது. கலைகிற எதையும் இந்த விஷ்ணு பிரசாத் சொல்லி விடக் கூடாது. அப்படி ஏதும் கேள்விப்பட்டால் கூட அவனால் தாங்கிக் கொள்ள முடியாது. தாங்கிக் கொள்ள முடியாது என்பது சாதாரண வார்த்தையாக இருக்கலாம். ஆனுல் அதற்கு மேற்பட்ட வார்த்தை எதுவும் அவனுக்குக் கிடைக்கவில்லை. உள்ளுக்குள் உடைந்து சிதறிப் போவான். அதன் பின்பு அம்மாவை அவனால் நிச்சயம் பார்க்க முடியாது; பேச முடியாது; மனத்தாலும் உடம்பாலும் வெகு தூரம் அவனை விட்டு விலகிப்போய் விடுவான். அப்படி எதுவும் நேரிடக் கூடாது

என்று மீண்டும் கடவுளை வேண்டிக் கொண்டிருந்த போது விஷ்ணு பிரசாத் சிலபுகைப் படங்களுடன் திரும்ப வந்து உட்கார்ந்து அவைகளில் ஒரேஒரு புகைப்படத்தை மட்டும் கிருத்திகாவிடம் கொடுத்து ''உன்னை இப் படித்தான் அடையாளம் கண்டுபிடித்தேன்'' என்றுன்.

சில நாட்களுக்கு முன் ஏதோ பத்திரிகைக் காரர்கள் அம்மாவைப் புகைப்படம் எடுக்க வந்த போது அம்மா அவளையும் அன்று எடுக்கச் சொன்னுள். என்ணெய் தேய்த்துக் குளித்துத் தன் அறையில் தலையைக்காய வைத்துக் கொண்டிருந்த போது வேண்டாம் என்று சொல்லியும் கேட்காமல் அம்மா அந்தப் புகைப்படக்காரரை எடுக்கச் சொன்ன படம். மிக இயற்கையாக வந்திருந்த படம். அது எப்படி இவனிடம் வந்தது என்ற கேள்வியைக் கேட்கவில்லை. அம்மா கொடுத்திருக்க வேண்டும்... எதற்காகத் தன் புகைப்படத்தை அம்மா இவனுக்குக் கொடுக்க வேண்டும் என்ற மௌனமான கோபத்துடன் படத்தைத் திருப்பிக் கொடுக்க, விஷ்ணு பிரசாத் அவளையே பார்த்தபடி கேட்டான்.

''இந்தப் படத்தை புவனு என்னிடம் கொடுத்த போதே 'உன் பெண் உன்னைவிட அழகாக இருப்பாள் போல இருக்கிறதே புவனு' என்றேன். நேரில் பார்க்கிறபோது தான் உனக்கு முன் புவனு ஒன்றுமே இல்லை என்பது தெரிகிறது. யூ ஆர் வெரி ப்யூட்டிஃபுல் கிருத்திகா...''

வேண்டுமென்றே அதைக் ரஸிக்காத மாதிரி பேச்சைத் திருப்பினுள் அவள்.

''அப்படியானுல் அன்று ஏன் என்னைப் பார்க்காத மாதிரி திரும்ப வந்து விட்டீர்கள்...''

''நீ அந்த அர்ஜுனுடன் பேசிக் கொண்டே ரயிலை விட்டு இறங்குவதைப் பார்த்தேன். என்னைத் தேடுகிறயா, அல்லது எனக்காகக் காத்திருக்கிறயா என்றுல் அதுவுமில்லை... அவனேடு நெடுநாள் பழகியவளைப் போல் அவன் வண்டியில் ஏறிக் கொண்டு போவதைப் பார்த்து விட்டுத் தான் பேசாமல் வந்து விட்டேன்...''

''அப்படியானுல் அர்ஜுனை உங்களுக்கு முன்பே தெரியுமா...''

''ம்ஹூம். அவனையெல்லாம் எனக்கு எதற்காகத் தெரிய வேண்டும்? நான் ஏன் தெரிந்து கொள்ளப் போகிறேன்... பட்டாளத்துக்காரனெல்லாம் பொல்லாதவன்கள் கிருத்திகா...''

அதையும் பெரிது படுத்தாமல் கேட்டாள் அவள்.

''அப்படியானுல் அவர் பெயர் எப்படித் தெரிந்தது...''

''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறய் நீ என்னை...? டில்லிக்கு வந்து இத்தனை நாட்கள் ஆகியும் நான் யார் என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறயே... இந்த விஷ்ணு பிரசாத் சாதாரண மனிதனில்லை கிருத்திகா. என் விரல் அசைந்தால் மந்திரிகள் ஓடி வந்து வரிசையில் நிற்பார்கள். அப்படி ஒரு செல்வாக்கும், சொல்

ஏராளமான பணத்தை இந்தக் காலத்துச் சர்க்கார்கள் செலவழிக்கின்றனவே. இதுபற்றி இரண்டே இரண்டு விஷயங்கள் தான் நமக்குப் புரியவில்லை: ஒன்று, இந்தப் பணம் எங்கேயிருந்து வருகிறது என்ற விஷயம்; மற்றது, இது எங்கே போகிறது என்ற விஷயம்!

''க்ரிட்'' கோ.வீ. ராஜேந்திரன்.



வாக்கும், பணபலமும், படைபலமும் பொருந்திய எனக்கு அர்ஜுனைப் பற்றிய விவரங்களைச் சேகரிப்பதா கஷ்டம்? அவனைப் பற்றி மட்டுமில்லை, இந்த நிமிடம் வரை உன்னைப் பற்றிய அத்தனை விவரங்களும் எனக்குத் தெரியும். அந்த அர்ஜுன் உன்னோடு பழகுவது, நான் தவறாமல் ஹாஸ்டலுக்கு வந்து சந்திப்பது, நீங்கள் இரண்டு பேரும் ஊர் சுற்றுவது, கல்யாணம் பண்ணிக் கொள்ள முடிவு செய்திருப்பது எல்லாமே தெரியும். இப்படிப்பட்ட என் திறமையும், செல்வாக்கும் தெரிந்ததால்தானே உன் அம்மா என்னோடு இப்படி ஒரு தொடர்பை வைத்துக் கொண்டிருக்கிறாள்... இல்லாவிட்டால் வைத்துக் கொண்டிருப்பாளா...?''

''இப்படி ஒரு தொடர்பு என்றால்எப்படிப் பட்ட தொடர்பு...'' — இதயத் துடிப்பு அதிகமாக — இதற்கு அவனிடமிருந்து என்ன பதில் வரப் போகிறதோ என்கிற பயம் கலந்த எதிர்பார்ப்புடன் காத்திருந்தபோது சற்று இகழ்ச்சியான புன்னகையுடன் தொடர்ந்தான் அவன்.

''நிஜமாகவே தெரியாதா இல்லை, தெரியாத மாதிரி கேட்கிறாயா?''

''எதைச் சொல்கிறீர்கள்...?''

''உங்கம்மாவிற்கும் எனக்கும் உள்ள தொடர்பைத்தான் சொல்லுகிறேன்...''

''தெரியாது...''

''புவனா உன்னிடம் சொல்லவில்லை...?''

''இல்லை...''

''பின் என்னதான் சொல்லி அனுப்பினாள்...?''

''உங்களைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று மட்டும் தான் சொன்னாள்...''

''வேறு எதுவுமே சொல்லவில்லையா...?''

''இல்லை...''

''உன் அம்மாவைப் பற்றிய சங்கதி எதுவுமே உனக்குத் தெரியாதா...?''

''தெரியாது...''

''நிச்சயமாய்...?''

''சத்தியமாய்...''

''வீட்டில் கூட நீ எதையும் பார்த்ததில்லை...?''

''எதையும் என்றால்...?''

''டோண்ட் ட்ரை டு பீ இன்னொஸெண்ட் உங்கம்மா நடத்தை பற்றி...''

கீழ் உதட்டை இறுகக் கடித்து உள்ளுக்குள் பொங்கிய கோபத்தையும், துக்கத்தையும் அடக்க முயன்றாள். ஆனாலும் குரல் நடுங்கிற்று. வார்த்தைகள் இறுகி மெதுவாக வெளிப்பட்டன.

''நோ...எதுவுமே எனக்குத் தெரியாது!''

''உங்கம்மாவிற்கு என்னை மாதிரி நிறைய நண்பர்கள். நண்பர்கள் என்றால் வெறும் நட்பில்லை. அர்ஜுனும் நீயும் பழகுகிறீர்களே — நோ, அந்த உதாரணம் கூட சரியில்லை. நீ அர்ஜுனுடன் மட்டும்தான் பழகுகிறாய். அவள் அப்படியில்லை. இங்கே வந்தால் நான், பம்பாய் போனால் இன்னொரு விந்திக்காரங். கல்கத்தாவில் ஒரு பெரிய மார்வாடி, பெங்களூரில்''—

விருட்டென்று எழுந்து கொண்டாள் அவள். முகமும் கண்களும் ஜிவுஜிவுவென்று சிவந்து போயிருந்தன. உதடு துடித்துக் கண்ணீர் முட்டிக் கொண்டு நின்றது. ஆத்திரமும், அவமானமும் மனத்தைத் தாக்க—

''நோ... நான் இதை நம்பமாட்டேன். நீங்கள் பொய் சொல்கிறீர்கள்...'' என்று கத்தினாள்.

அவள் கத்தலினால் சிறிதும் பாதிக்கப்படாத விஷ்ணு பிரஸாத் ''நான் சொன்னதை நம்பாமற் போகலாம். ஆனால் இந்தப் புகைப்படங்களை நம்பித்தானே ஆகவேண்டும்...''

அவன் நீட்டிய புகைப்படங்களைக் கைநடுங்க வாங்கிக் கொண்டாள் கிருத்திகா.

(தொடரும்)


இப்போது விற்பனையாகிறது...

# கோகுலம்

அக்டோபர் இதழ்

16 பக்க வண்ணப் படக்கதை

## மதுபுரத்தின் மன்னன்



கதை: ஆனந்தி * சித்திரம்: வினு

96 பக்கங்கள் * விலை: இரண்டே ரூபாய்தான்!

கதைகள் • கவிதைகள் • சிரிப்புத் துணுக்குகள் • அறிவியல் விஷயங்கள்

# இந்தியாவின் ஒரே பிரச்சினை இந்திராவா ?

**திரு. எம். வி. காமத் கூறியது நூற்றுக்கு நூறு சரி என்று வாதாடுகிறார் வி. வரதராஜன்**

"இந்தியாவின் ஒரே பிரச்சினை இந்திரா காந்திதான்" என்று திரு. எம். வி. காமத் கூறியிருப்பது நூற்றுக்கு நூறு சரியானதே! இன்றைய பெரும்பான்மையான அரசியல் வாதிகளின் சீர்கேடுகளுக்கு முக்கிய மூல காரணமாய் இருப்பவர் இந்திராதான்.

மகாத்மா காந்தியடிகள் காலத்திலிருந்த அரசியல் கோட்பாடுகளை உருத்தெரியாமல் தலைகீழாக மாற்றிவிட்ட 'பெருமை' இந்திரா காந்தியையே சாரும். மகாத்மா காலத்து அரசியலில் தேச நலம்தான் ஒரே குறிக்கோள்; சுய நலத்திற்கு அங்கே அறவே இடமில்லை. நேருவின் காலத்தில் இது சற்றே உரு மாறி, தேச நலம் தான் பிரதானம் என்றாலும், ஆங்காங்கே சுயநலத்தையும் சற்றுக் கவனித்துக் கொள்வது தவிர்க்க முடியாதது என்று வளர்ந்தது. இந்த 'வளர்ச்சி', இந்திராவின் காலத்தில், அரசியலில் சுயநலம் தான் பிரதானம், தேசநலம் கடைசி பட்சமே என்று முழுமை பெற்றுவிட்டது.

வி. வி. கிரியை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்ததன் மூலம் 'மனச்சாட்சி' என்ற பதத்திற்கே களங்கம் கற்பித்தவர் இந்திரா. அடுத்து அவர் செய்த காங்கிரஸ் பிளவிலிருந்து அவரது அரசியல் சுயநல வியாபாரம் மொத்த விற்பனையாகத் தொடங்கியது. அலகாபாத் நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு அடிபணியாமல், தான் ஆட்சிப் பீடத்தில் தொடர்ந்து கோலோச்ச, அரசியல் சட்டத்தை உடைக்கும் அளவுக்கு வளைத்தது. எதிர்ப்புகளை அடக்க எமர்ஜென்ஸி அவதாரம் எடுத்தது. சிறு பிள்ளைத்தனமும் முரட்டுத்தனமுமே குணங்களாய்க்கொண்ட சஞ்சய் காந்தியை, 'செயல் வீரம்' மிக்க இளந்தலைவனாக உருவகப்படுத்தியது.... அப்பப்பா, சொல்லில் அடங்குமா அவரது சுயநலச் சாதனைகள்!

கோடிக்கணக்கான மக்கள் இங்கே வறுமைக் கோட்டுக்குக் கீழே அல்லாடிக் கொண்டிருக்க, கோடி கோடியாய்ப் பணத்தை ஏவி யாடியும், கூட்டுசேராக் கூத்திலும் அள்ளிக் கொட்டுவார் இந்திரா — உலக அரங்கில் தன்னைத் தனிப்பெரும் தலைவராகக்காட்டிக் கொண்டு நோபல் பரிசுக்கு அடிபோட! நாட்டில் என்பது சதவீத மக்களுக்கு வாழ வழி செய்யாவிட்டாலும் பரவாயில்லை. அவர்கள் பிரச்னைகளை மறந்து 'அன்னையின்' முகதரிசனத்தைத் தினம் தினம் கண்டு உய்ய டெலிவிஷனைப் பரப்பியே தீருவதில் தீவிரமாய் இருப்பவர் இந்திரா.

எங்கோ ஒரு ரயில் கவிழ்ந்ததற்காக, அமைச்சர் தம் பதவியைத் துறப்பது அந்தக் காலம். ஜனநாயக முறையில் அமைந்த எதிர்க்கட்சி அரசுகளைக் கவிழ்க்க கவர்னர்களைக் கைக்கூலிகளாய்ப் பதவியில் அமர்த்தும் காலம் இந்திராகாலம்.

ஏறிவந்த ஏணியை உதைப்பது அவரது பிறப்புரிமை — உதாரணம் காமராஜர். அரசியல் ஆதாயத்துக்காகப் பாம்புக்குப் பால் வார்ப்பது அவரது காருண்யம் — உதாரணம் பிந்தரன்வாலே. அரசியல் பிரச்சினைகள் நெருப்பாய் எரியும்போது, குளிர் காய்வதோடு நிற்காமல் நெருப்பில் சுருட்டு பற்ற வைத்துக் கொள்வதும் அவரது பழக்கம் — உதாரணம் அஸ்ஸாமில் ஆட்சி பீடம். சுருட்டு பற்ற வைத்துக்கொள்ளும் போது உடுத்திய துணியே பற்றிக்கொண்டு விட்டால், அலறி அடித்துக் கொண்டு ஊரைக் கூட்டித் தீயை அணைப்பது அவரது தேசசேவை — உதாரணம் பஞ்சாப் பிரச்சினை.

தலைவர்மேல் தணியாத பக்தி கொண்ட அந்துலேக்களும், அதிக்குகளும், மிஸ்ராக்களும், தாங்கள் பிறந்த இடத்தின் புகழ்பாடும் கொசுக்கள்!

உடம்பில் இருக்கும் எல்லா வியாதிகளுக்கும், என்றோ ஒருநாள் விரல் நுனியில் சிற்றெறும்பு ஒன்று கடித்ததுதான் காரணம் என்று சொல்வதைப் போல், இந்திராவைப் பொறுத்தவரை நாட்டிலிருக்கும் வறுமை, வேலையின்மை, பணவீக்கம், ஒற்றுமைக் குலைவு எல்லாவற்றிற்கும் மூலகாரணம் நான்கு வருஷங்கள் முன்பு கொஞ்சநாள் ஆண்ட ஜனதா அரசுதான்!

போதும், போதும். ஒருமுறை அவரை மன்னித்து ஆட்சிப் பொறுப்பை மீண்டும் கொடுத்தது. அது, நமது ஜனநாயகத்தில் ஏற்பட்ட விபத்து!

சென்னை—61. வி. வரதராஜன்.

**எம். வி. காமத் கூற்றுக்கு மறுப்பு தெரிவிக்கிறார் விமலாபால்:**

திரு. எம். வி. காமத் சொன்னால் அது சரியாகி விடுமா? 2 × 2 = 4 என்று கூறிவிட அவ்வளவு எளிய விஷயமல்ல இது.





77—78 ஆண்டுகளில் ஜனதா கட்சி ஆட்சி பீடமேறிய போது, திருமதி காந்தி, 'மீண்டும் இந்தியாவின் ஒப்பற்ற ஒரே தலைவி' யாக மறுபிறப்பு எடுக்க முடியும் என்று யாராவது கனவு கண்டிருக்க முடியுமா? அவரது அரசியல் வாழ்வுக்குச் சமாதிகட்டி, நினைவுத் தூணும் எழுப்பப்பட்டது. சமாதியைத் தோண்டி எடுத்து அதற்கு உயிர் கொடுத்தது யார்? மக்கள்! இந்தியாவின் பிரச்சினைகள் அப்போது திருமதி காந்தியின் அரசியல் வாழ்விற்கு வெளியேயும் இருந்தன. இவை திரு. எம். வி. காமத்துக்குத் தெரியாதா? திருமதி காந்தி சந்தித்த தாக்குதல்கள்தாம் எத்தனை? வாழ்க்கையின் அத்தனை அடிகளுக்குப் பிறகும் இன்று ''இந்தியாவின் ஒரே தலைவியாக'' அவர் வளர்ந்திருக்கிறார் என்றால்... இந்தியாவின் பிரச்சினைகளை அவரால் தான் சமாளிக்க முடியும் என்று மக்கள் கருதுவதால் தான்.

70 கோடி மக்களைத் தாங்கிக் கொண்டு பாரதத்தாய் விழி பிதுங்குகிறாள். 60சதம் மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே தொங்கி கொண்டிருக்கிறார்கள். நிர்வாகச் சீர்கேடும், வன்முறைகளும், கலாச்சாரச் சீரழிவும் இந்தியாவைத் தின்று கொண்டிருக்கின்றன.

இவைகளுக்கெல்லாம் காரணம்... மூலப் பிரச்சினை இந்திரா, திருமதி இந்திரா மட்டுமே என்பதை ஏற்றுக் கொண்டால்,

இன்று

இந்தியா கோதுமை உற்பத்தியில் இரண்டாம் இடம் வகிக்கிறது. அணுமின் நிலையம் அமைத்ததில் ஆறாவது நாடாக இருக்கிறது. பாதுகாப்பு வன்மையில் ஏழாவது பெரிய நாடாக இருக்கிறது. இன்னும் எத்தனை எத்தனையோ பெருமைகளை நவீன இந்தியா தன்னகத்தே கொண்டிருக்கிறது. இந்தப் பெருமைகளுக்கெல்லாம் காரணம் திருமதி காந்தி ஒருவரே என்றும் நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

இரண்டும் உண்மையல்ல என்பதே உண்மை.

திருமதி இந்திரா தான் இந்தியாவின் ஒரே தலைவியுமல்ல; ஒரே தலைவலியுமல்ல.

அறை இருட்டாயிருந்தால் பல்பின் மீது பழி சுமத்த வேண்டாம்.

ஒருவேளை மின்சாரமே இல்லாமலிருக்கலாம்.

இன்று இந்தியாவின் பிரச்சினை யார்?

நாம் போராடித் தீர்க்க வேண்டிய பிரச்சினை எது?

ஒழிக்கப்பட வேண்டிய சக்தி எது?

திருமதி இந்திராகாந்தியா?

இல்லை. இல்லவே இல்லை.

அவர் திருவாளர் அறியாமை.

பட்டுக்கோட்டை திருமதி. விமலாபால்.



மனைவி: ''நான் வீட்டிலே இல்லாத சமயம் எங்க மாதர் சங்கத் தலைவி எனக்கு போன் பண்ணினாளாமே!''

கணவன்: ''ஆமா! 'நீங்க சொல்ல வேண்டிய வதந்தி ஏதாவது இருந்தா என்னிடம் சொல்லுங்க... அவ வந்தவுடன் சொல்லி விடுகிறேன்' னு சொன்னேன்... லைன் கட்டாயிடுத்துடி!''

''ஒரு கருமி தன் பேரக் குழந்தையின் ஆண்டு நிறைவையொட்டி அவனுக்காகத் தான் வாங்கியிருந்த சட்டையைத் தபால் பார்சலில் அனுப்பினார்.

தனியாக ஒரு கடிதமும் எழுதினார். அதில்—

இன்று பேரனுக்கு ஒரு சட்டை வாங்கி அனுப்பியிருக்கிறேன். தபால் சார்ஜ் குறைவாக இருக்க வேண்டுமே என்பதற்காகச் சட்டையின் பொத்தான்களை வெட்டி எடுத்து விட்டேன். பொத்தான்கள் சட்டையின் கீழ்ப்பக்க இடது பாக்கெட்டில் இருக்கிறது.

—ஆர். எஸ். சுப்பிரமணியன்.



# என்னதான் முடிவு



## மாலினி சேஷாத்ரி

"அவர்களை எல்லாம் தூக்கில் போட வேண்டும்!" என்று ஆத்திரத்துடன் இரைந்தார் ராஜகோபாலன், மேசையை முஷ்டியால் குத்திக் கொண்டே. அதிர்ச்சியில், மேசை மேலிருந்த தம்ளரிலிருந்து நீர் தளும்பிச் சிதறியது.

அஞ்சலி பெருமூச்சுடன் எழுந்தாள், துடைக்க ஒரு துணி எடுத்து வர. கணவரின் இதுமாதிரியான திடீர்க் குமுறல்கள் இப்போது எல்லாம் அவளுக்குப் பழக்கமானவை தாம்.

"யாரை அப்பா?" என்று கேட்டாள் ரஞ்சிதா, இன்று சாப்பாட்டு வேளை சுவாரஸ்யமாயிருக்கும் என்று ஊகித்தவாறு.

சற்றும் குறையாத ஆத்திரத்துடன், "இந்த விமானக் கடத்தல்காரர்களைத் தான்..." என்றார் ராஜகோபாலன். "மரண தண்டனைதான் அளிக்க வேண்டும் இவர்களுக்கு!"

விவேக்குக்கு வியப்பாய் இருந்தது. "எதற்கு உங்கள் சக்தியை வீணாக்குகிறீர்கள் அப்பா" என்றான். "அவர்கள் சிறைக்குக் கூடப் போக மாட்டார்கள் பாருங்கள்!"

"அவர்களைத் தூக்கிலிடத்தான் வேண்டும்!" என்று உஷ்ணமாகச் சொன்னார் ராஜகோபாலன் மறுபடியும். "அப்போது தான் மற்றவர்களுக்கு எச்சரிக்கையாய்இருக்கும். இல்லையென்றால் மாதத்துக்கு ஒரு விமானக் கடத்தல் நடந்து கொண்டேதான் இருக்கும்!"

"அப்படியானால் பத்திரிகைகளுக்குயோகம் தான்" என்றாள் ரஞ்சிதா குறும்பாக. "பத்துப் பத்திரிகையில் பத்துவிதமாகக் கதையைச் சொல்லுவார்கள்: விமானக்கடத்தல்காரர்கள் ஆறு பேர் இருந்தார்கள்... எட்டுப் பேர் இருந்தார்கள்..., பன்னிரண்டு பேர் இருந்தார்கள்... அவர்கள் தாடி வைத்திருந்தார்கள்.... அவர்கள் மழுங்க சவரம் செய்திருந்தார்கள்... பாதிப்பேர் தாடி வைத்திருந்தார்கள்... எதை நம்புவது என்று குழம்பிப் போய் விடுவீர்கள்!"

"பாக்கிக் கதையை விட்டு விட்டாயே ரஞ்சிதா—" என்றான், விவேக். "பயணிகளிடம் அன்பாக இருந்தார்கள்... பயணிகளிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டார்கள்...... அமெரிக்காவுக்குப் போக வேண்டும் என்பதைத் தவிரவேறுகோரிக்கை எதுவும் அவர்கள் வைக்கவில்லை..... அவர்களுக்கு ஏராளமான கோரிக்கைகள்..... அவர்கள் தலைவன் தன் பெயர் கான் என்றான்... அவன் தன் பெயர் சிங் என்றான்...."

"அவர்கள் வெடிகுண்டை எப்படி உள்ளே எடுத்துச் சென்றார்கள் என்று ஆச்சரியப் படுகிறேன்" என்றாள் ரஞ்சிதா.

"அது தனி புராணம்!" என்றாள் அஞ்சலி. "முதலில் அவர்களிடம் கத்தி மட்டுமே இருந்தது.... அப்புறம் பேப்பரில் வெடிகுண்டு சுற்றிக் கட்டப்பட்டிருந்தது... இல்லை, இல்லை, வெடிகுண்டுகள் துணியில் சுற்றப்பட்டிருந்தன... இல்லை இல்லை, ஒரு பாட்டிலும் அதற்கு ஒரு திரியும் மட்டுமே இருந்தன...."

"இந்தச் சர்ச்சைகளால் இப்போது என்ன பிரயோசனம்?" இரைந்தார் ராஜகோபாலன். "எல்லோருக்கும் தெரியும், அவர்கள் விமானத்தைக் கடத்திவிட்டார்கள் என்று. அவர்களுக்கு மரண தண்டனைதான் தர வேண்டும்."

"இப்போது அதுவா முக்கியம்?" என்றாள் அஞ்சலி, "கொலைக் குற்றத்துக்கு மரண தண்டனை இருக்கிறது. அது கொலைகளைத் தடுக்கிறதா என்ன? விமானக் கடத்தல்






## விவாத மேஜை

களையே நாம் அறவே தடுக்கவேண்டும். அதிக அளவு பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலமாக. மரண தண்டனையினால் அல்ல!''

''அம்மா சொல்வது தான் சரி'' என்றாள் ரஞ்சிதா. ''மரண தண்டனைதான் முடிவு என்றால், இனி விமானக் கடத்தல் செய்பவர்கள் சரணடையவே மாட்டார்கள். தங்கள் நிபந்தனைகள் நிறைவேறா விட்டால் எல்லாரையும் கொன்று விட்டு பிளேனைத் தகர்த்து விடுவார்கள். அவர்கள் தான் எப்படியும் சாகப் போகிறார்களே''

''சரியாகச் சொன்னாய் ரஞ்சிதா!'' என்றான் விவேக். ''அவர்களுக்கு ஆதரவாக ஆஜராகவோ, இல்லை அவர்களை விடுவிக்க முயலவோ யாரும் முன்வர மாட்டார்கள். இல்லையா அப்பா? அதனால் எந்த விசாரணையிலும் அவர்கள் குற்றவாளிகளாகவே நிரூபிக்கப்பட்டு விடுவார்கள். எனவே மரண தண்டனை நிச்சயம் என்னும் போது எதற்கும் அவர்கள் துணிந்து விடுவார்கள்.''

ராஜகோபாலனுக்குத் திருப்தியாகவில்லை. ''விமானக் கடத்தல் என்ன தமாஷ் விஷயமா? வீரம் என்று அபத்தமாக அவர்கள் நினைக்கிறார்கள். எல்லா விமானக் கடத்தல்காரர்களையும் தூக்கில் போடத்தான் வேண்டும்!''

''பயணிகளின் உயிரைப் பணயம் வைப்பதை விட, அவர்களுக்கு விட்டுக்கொடுத்து



விடலாம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.'' என்றாள் அஞ்சலி.

ரஞ்சிதாவுக்கு இது பிடிக்கவில்லை. ''இது என்ன விபரீதமான யோசனை அம்மா? விமானக் கடத்தல்களைப் பொழுதுபோக்கு நிகழ்ச்சியாக்கி விடுவது உன் எண்ணமா என்ன? அவர்கள் கோரிக்கைகளுக்கு மட்டும் இணங்கவே கூடாது!''

அஞ்சலிக்கு என்னவோ இன்னும் கஷ்டமாகவே இருந்தது. ''நல்லவேளை நான் இதுவா – அதுவா என்று முடிவு எடுக்கும் நிலைமைக்குத் தள்ளப்படவில்லை. அப்படி நேர்ந்தால், திண்டாடித் திணறி அதிலேயே திக்கு முக்காடி இறந்து போய்விடுவேன்!'' என்றாள்.

''என்னை முடிவு எடுக்கச் சொன்னால் துளி கூடத் தயங்க மாட்டேன்'' என்றார் ராஜகோபாலன், மீண்டும் அழுத்தம் திருத்தமாக. ''அவர்களைத் தூக்கில் போடச் சொல்லுவேன்!''

---

இஞ்ஜினியர்களுக்கு என்று சிறுபத்திரிகைகள் பல உண்டு. அவைகளிலிருந்து சில கேள்விகள் தந்திருக்கிறேன்.

1. சராசரி மனிதனுக்கு எத்தனை பிறந்த தினம்
2. முப்பதைப் பாதியால் வகுத்துப் பத்தைக் கூட்டினால் எத்தனை?
3. என்னிடம் இரண்டு நாணயங்கள் இருக்கின்றன. அவைகளின் மொத்த மதிப்பு 30 பைசா. ஆனால் அதில் ஒரு நாணயம் 25 பைசா அல்ல. இது எப்படி சாத்தியம்?
4. நீண்ட சதுர வடிவில் வீடு கட்டினேன். வீட்டில் இரண்டு பக்கங்களும் தெற்கு நோக்கின. ஒரு கரடி வந்தது. அதன் நிறம் என்ன?
5. காவேரிக்கு வடபுறம் வசிப்பவனை ஏன் தஞ்சாவூரில் புதைக்க முடியாது?
6. காலை ஒன்பது மணிக்கு அடிக்கும் படியாக ராத்திரி எட்டுமணிக்கு அலாரம் வைத்தால் எத்தனை மணி நேரம் தூங்க முடியும்



விடை:

1. ஒன்றே ஒன்று.
2. 70.
3. 25; 5; ஒரு நாணயம் தான் 25 பைசா இல்லை. மற்றது?
4. வெள்ளை. வட துருவத்தில் தான் இது சாத்தியம்.
5. அவர் உயிருடன் இருப்பதால்.
6. ஒரு மணிதான் அலாரத்திற்குக் காலையாவது. மாலையாவது...

பிரச்னையைப் பற்றிச் சிந்திப்பதற்கு இருப்பது ஒரு வழி மட்டும் அல்ல எத்தனையோ சாத்தியங்கள் உள்ளன. அவைகள் எல்லாவற்றையும் அலசிப் பார்ப்பது தான் லாட்டரல் திங்கிங். சம்பிரதாய சிந்தனைகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் புதிய கண்டுபிடிப்புகள் ஏற்பட முடியும் என்று நம்புகிற சித்தாந்தம் அது.

நன்றி '':சுஜாதா''வின் சலவையா பூமியில் கடைசிபக்கங்கள்...

அனுப்பியது: ராஜிராதா

## போட்டிக்கதை: 5



# ஒரு சத்தியப் பிரவேசம்

ஜெரா

இந்தத் திடீர்ப் பிரவேசத்தை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. சற்றுத் தூரத்தில் இருக்கும் போதே அவர்களின் இயக்கங்கள் பதற்றத்தால் தாறுமாறாகத் தவறிழைப்பது வெளிப்படையாகத் தெரிந்தது. பானைகளை அடுக்கிக் கொண்டிருந்தவன் ''டேய் — போலீஸ்டா'' என்று உரக்கக் கத்திக் கொண்டு ஓடத் தலைப்பட்டான்.

அடுப்பைக் கிளறிக் கொண்டிருந்தவன் பானைகள் சரிவதைப் பார்த்துத் துள்ளி எழுந்து, அங்குமிங்கும் பார்வையைச் சிதற விட்டு ஒளிந்து கொள்ள இடம் தேடினான். தயாரான ஊறலை வைத்துக் கொண்டிருந்த ஓரிருவரும் தப்பித்துக் கொள்ளத் தவித்தனர்.

''சீக்கிரமா வாங்க'' என்று எங்களைத் துரிதப்படுத்தி விட்டு ஏட்டு ராமையா முன்னால் பாய்ந்தார். அதட்டலாகக் கெட்ட வார்த்தைகளை இறைத்துக் கொண்டு பாய்ந்து வந்த ராமையாவைக் கண்டதும் அவர்கள் ஆளுக்கொரு பக்கம் சிதறினார்கள்.

கோழிக் குஞ்சை அமுக்குவதைப் போல் கையில் கிடைத்தவனின், பின்னங்கழுத்தைப் பிடித்து இழுத்து வலுவாக அறைந்த ராமையா, அவனை என்னிடம் தள்ளி, ''ஜாக்கிரதையாப் பார்த்துக்க கணேசா'' என்று சொல்லிவிட்டு எஞ்சி இருந்த நான்கு பேர்களோடு ஓடியவர்களைத் துரத்தினார்.

நான் பிடிபட்டவனைப் பார்த்தேன். வெட வெடவென்று நடுங்கிக் கொண்டிருந்த அவனுக்கு நிச்சயமாக ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். இடையில் அழுக்கேறி, காவி படர்ந்திருந்த ஒற்றை வேட்டியைத் தூக்கிக் கட்டி இருந்தான். கையிலிருந்த துண்டால், வாயைப் பொத்திக் கொண்டு, உடம்பைச் சற்று வளைத்துக் கூனிக் குறுகி பவ்யமாக நின்று கொண்டிருந்தான். மேலே வெற்றுடம்பில் புசுபுசுவென்று வளர்ந்திருந்த நரை உரோமங்களைத் தவிர வேறொன்றுமில்லை.

எனக்கு மகா எரிச்சலாய் இருந்தது. இவனுக்கெல்லாம் எதற்கு இந்த வேலை? குப்பென்று அடித்த கள்ளச் சாராய வீச்சம் வேறு என் எரிச்சலுக்கு அமிலம் சேர்க்க, சற்று ஒதுக்குப்புறமாக நின்றேன். அவனும் என்னைத் தொடர்ந்தான்.

இவனால் நிச்சயமாகத் தப்பித்து விட முடியாது. அதற்கான உடனடித் துணிவும், அதைச் செயல்படுத்தும் உத்வேகமும் இவனிடம் இல்லை. தளர்ந்து போன இவன் உடம்பும் அதற்கு ஒத்துழைக்காது. அதனால்தான் இவன் ராமையாவிடம் மாட்டிக் கொண்டான்.

இந்த ராமையா எப்போதும் இப்படித்தான். சப் — இன்ஸ்பெக்டர் இல்லாத நாட்களில் இவருக்குக் கடமை உணர்வு சட்டவிழ்ந்து விடும். என்னவோ இவர் ஒருவர் தான் இந்தத் தேசத்தையே கட்டிக்காப்பது போல மாய்ந்து போவார். கிடைத்த குறுகிய நேரத்தில் அப்படி இப்படி என்று ஏதோ , ஒரு கேஸை ஜோடித்து விடுவார். யாராவது அவரைப் பாராட்டிக் கொண்டே இருக்க வேண்டும்! அதற்காக எத்தனை கர்ணமடிக்கவும் அவர் தயார்!

இன்றும் அப்படித்தான் —, பாலமலை அடிவாரத்தில் ஒரு கும்பல் கள்ளச் சாரா



யம் காய்க்கிறது என்ற செய்தி சாற்று வாக்கில் வந்தது தான் தாமதம். மனுஷன் காற்றுசச் செயல்பட ஆரம்பித்து விட்டார். சும்மா சொல்லக் கூடாது. யார் யாரை எங்கெங்கே வளைத்துப் பிடிப்பது என்ற தொழில் நுணுக்கங்கள் ராமையாவுக்கு அத்துப்படி! ஆனல் அவசரம்! அது ஒன்று தான் அவர் சாதனைகளைச் சமயத்தில் காலொடியச் செய்து விடுகிறது!

ஓடிவந்த களைப்பும், சுற்றுப்புறத் தனிமையும் உடம்பின் அசதியை அதிகப்படுத்த, கால்கள் கெஞ்சின. உட்கார இடம் இருக்கிறதா என்று துழாவிக் கருங்கல் ஒன்றை ஆசனமாக்கிக் கொண்டேன். தொப்பியைக் கழற்றிக் குறுகுறுத்த தலையைக் கர்சீப்பால் துடைத்துக் கொண்டேன்.

அவன் இன்னும் நின்று கொண்டே இருந்தான். பார்க்கப் பரிதாபமாக இருந்தது. தோற்றத்தில் இவன் கிட்டத்தட்ட அப்பாவைப் போலவே இருந்தான். கண்களில் வழியும் இந்த அப்பாவித் தன்மை ஒன்று போதுமே இந்த ஒற்றுமையை உறுதிசெய்ய!

இந்த விசித்திரமான நினைப்பு விழிசளை சரப்படுத்த, எதிரே நிற்பவன் மேல் இனந் தெரியாத பச்சாதாபம் பொங்கியது.

''ஏய்யா நிக்கறே! அப்பிடி உட்காரேன்.''

என் அக்கறை அவன் கண்களில் ஆச்சரியத்தை வடியச் செய்தது. ஒரு போலீஸ்காரனிடம் இந்த உபசரிப்பை எதிர்பார்க்காத வியப்பு அவன் முகத்தில் வெளிச்சமாகத் தெரிந்தது. பாதி பயமும், பாதி சந்தேகமுமாகச் சன்னக் குரலில் முனகினன்:

''இல்லீங்க சாமீ – நிக்கறேனுங்க.''

''இந்த வயசான காலத்துலே ஏய்யா இப்படி புத்திக்கெட்டு அலையறே. உனக்கு இந்தத் தொழிலு சரிப்படுமாய்யா?''

''சாமி... நான்...''

சொல்ல வந்ததைப் பாதியிலேயே நிறுத்தி எதையோ வெளியிடத் துடிப்பதை அவன் கண்கள் சூசகமாகத் தெரிவித்தன. உதடுகளின் மெல்லிய அசைவு மனக்குமுறலை வடித்துவிட முயற்சி செய்தது.

''என்னய்யா! சொல்லு.''

இயல்பிலேயே சற்று கரகரப்பான என்குரல் இப்போது அதட்டலாக வெளி



வர, அவன் சட்டென்றுஎன் கால்களைப் பற்றிக் கொண்டான். எனக்கு நெருப்புத் துண்டங்களால் உடம்பை வர்ஷித்ததைப்போல் இருந்தது. விருட்டென்று எழுந்து கொண்டேன்.

''என்னை விட்டுடுங்க சாமீ! சத்தியமா நான் சாராயம் காய்ச்சறவனில்லே! மலையிலே கள்ளி உடைத்து எடுத்துக்கிட்டு வர்ரேன். இதைக் கொண்டு போய் ஊருக்குள்ளே வித்தாத்தான் நாளைக்கு வூட்லே அடுப்பு புகையும். பெரிய குடும்பமுங்க— சரியா வேலை இல்லாம காண்ட்ராக்ட்லே கூலி வேலை செய்யற என் பசங்க எல்லாம் வீட்டிலே குந்திக்கிட்டாங்க. ஒரு வாய் கஞ்சி குடிக்கிறதே கஷ்டமா இருக்குங்க.''

அவனுடைய கெஞ்சல் மனத்தில் சூடு போட, மௌனமாக அவன் சுட்டிக்காட்டிய திசையைப் பார்த்தேன். புகைந்து கொண்டிருந்த அடுப்புக்குப் பக்கவாட்டில், சரிந்து கிடந்த பானைகளுக்கு அப்பால், கனமான விறகுக் கட்டு ஒன்று மல்லாந்து கிடந்தது!

அடேயப்பா! இவ்வளவு பெரிய விறகுச் சுமையை இவனால் தாங்க முடியுமா? முடியும்! கனமான துயரங்களை ஏந்தி, ஏந்தி, மரத்துப் போன மனதிற்கு இந்தப் பௌதிக பாரம் வெறும் பஞ்சு போலதான்!

''வெறகை எடுத்துக்கிட்டுப் போகவேண்டியதுதானேய்யா! சாராயம் காய்ச்சற எடத்துல என்ன பராக்குப் பாக்க வந்தியா?''

அவன் குற்ற உணர்வோடு மீண்டும் தலை குனிந்து கொண்டான். ''தப்பு செஞ்சுப் போட்டேன் சாமீ. ஒரு ரூபாய்க்கு கொஞ்சம் ஊத்திக்கிட்டுப் போயிடலாம்னு இந்தப் பக்கமா எறங்கினேனுங்க! எம் புத்தியை ஜோட்டால அடிக்கணும் சாமீ.''

கண்மூடித்தனமான கோபம் எனக்கு! என்ன நெஞ்சழுத்தம் இவனுக்கு — கஞ்சி குடிக்கக் காசில்லை என்று ஒப்பாரி வைத்து விட்டு 'தண்ணி' போட வந்ததை மட்டும் வக்கணையாக விளக்குகிறான்!

நான் பேசவில்லை — கிழவன் என் முகத்தில் கருணை வழியாதா என்ற ஏக்கத்தோடு காத்திருப்பது புரிந்தது. அவன் விரித்துப் பரத்தி இருந்த நாளங்கள் வெளித்தெரியும் கைகளைப் பார்த்தேன்! மனம் கொதித்தது. கையெல்லாம் காய்ப்புக் காய்த்து சுண்ணாம்பாய் இருந்தது. முழங்கை வரை ஆங்காங்கே இளம் சிராய்ப்புகள் ஜனித்திருந்தன. என் மௌனம் அவனை வெகுவாக வதைத்திருக்க வேண்டும்.

''சாமி, குத்தம் கட்டறதுக்குக் கூட வசதி இல்லீங்க! நான் இல்லாட்டா கொழந்தைங்க வவுறு காஞ்சி போயிடுங்க! இனிமே இந்தப் பக்கமே வரமாட்டேனுங்க — வுட்டுடுங்க சாமி.''

சட்டத்தைக் காப்பாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட ஒரு போலீஸ்காரனுக்கு வரக்கூடாத தர்ம சிந்தனையும், இரக்க குணமும் என்னுள் பொங்கிப் பிரவகித்தன.

புரொபேஷன் பீரியடில் கூட எனக்கு ஒரு இனந்தெரியாத மதர்ப்பு இருந்தது. ஏதோ அக்கிரமங்களை அழித்து, நீதியை நிலைநாட்டுவதற்காகவே நான் இந்த பதவிக்கு வந்தது போலச் சிலிர்த்துப் போனேன்... ஆனால்...

சட்டமானவும் சரியில்லாத சட்டிடத்தைக் காவல்காரன் தாங்கிப் பிடிக்க முடியுமா என்ன? இந்தச் சமுதாய அமைப்பு ஒரு கடமை தவறாத அதிகாரியைக் கூட சருங்காளியாக்கி விடும். சட்டத்தைத் தூக்கி நிறுத்த நாங்கள் மூச்சுத் திணறிக் கொண்டிருப்போம் -- ஒரு மூலையில் 'பசையுள்ள' குற்றவாளி நைசாக நழுவிக் கொண்டிருப்பான்.

ஆள் பலமும், பண பலமும் முஷ்டியை உயர்த்தும் போது ஆரோக்கியமற்ற அப்பாவிசனான நீதியும், நேர்மையும் நெடுஞ்சாண் கிடையாகப் படுத்துவிடும்.

இதோ இப்போது ராமையா விரட்டிக் கொண்டு போயிருக்கிறாரே அவர்கள் கூட எவனோ ஒரு பலம் வாய்ந்த பெரிய மனிதனுக்காகக் கழுத்தை நீட்டப் போகும் பலியாடுகள்தான் — வரத்தை எவனுக்கோ கொடுப்பதற்காக இவர்கள் தங்கள் வாழ்க்கையோடு விளையாடுகிறார்கள்!' வயிற்றுப்பாட்டுக்காக இவர்கள் 'வேலை' என்று நினைத்து ஈடுபடுவது ஒரு சமுதாய துரோகம் என்று அறியாமலே அடிபடுகிறார்கள்!

எனக்குத் திடீரென என் உத்தியோகம் மறந்து போனது — அரசாங்க ஊழியன் என்ற நிர்ணய வரம்பைக் கடந்து மனிதாபிமானம் கைகளைப் பரப்பிக் கொண்டு எட்டிப் பார்த்தது. இந்த அப்பாவிக் கிழவனை சட்டத்தின் பெயரால் கைது செய்தால் ஏற்படும் விளைவுகள் ஒரு குடும்பத்தின் எதிர்காலத்தையே குழி தோண்டிப் புதைத்து விடுமோ?

---

சுவாமி ராமதீர்த்தர் ஒருமுறை ஜப்பானுக்கு சென்றிருந்த போது, பழங்கள் வாங்க நினைத்து கடைகளில் விசாரிக்க, பழங்கள் கிடைக்காததால், ''ஜப்பானில் பழங்கள் கிடைக்காது போலிருக்கிறது'' என்று கூறியிருக்கிறார்.

அதைக் கேட்டு, ஒரு இளைஞன் ஓடிச் சென்று ஒரு கூடை நிறைய பழங்கள் கொண்டு வந்தான். மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டு, பழத்திற்கான விலையை கேட்டதற்கு, அவ்விளைஞன், ''நீங்கள் பழத்திற்கு விலை தர வேண்டாம். உங்கள் நாட்டில் போய், ''ஜப்பானில் பழங்கள் கிடைக்காது' என்று சொல்லாமலிருந்தால் அதுவே போதும்'' என்றான்.

—எம். கிறிஸ்து பாலன்.



# தேவேந்திரா சாரீஸ்

(மிக மிக உயர்ந்த பட்டும் நூலும் கலந்து தயாரிக்கப்பட்டது)

27, ஏலா கந்தப்பன் தெரு, (முதல் மாடியில்)

(வால்டாக்ஸ் ரோடு, ப்ளூ ஸ்டார் இன்டர்நேஷனல் ஹோட்டல் அருகில்)

சென்னை-600 003 போன்: 33113

இடைக்கும் இடங்கள்:

❊ "திருஹலக்ஷ்மி" மாதர்கள் கூட்டுறவு அமைப்பு, B-39, சௌத் மோதிபாக், நானக்புரா, புதுடெல்லி-110 021. ❊ M/s. காமாட்சி ஸில்க் ஹவுஸ், 5/38, W.E.A. அஜ்மல்கான் ரோடு, கரோல்பாக், புதுடெல்லி-110 005. ❊ திருமதி உமா சுப்பிரமணியம், D-106, ஈஸ்ட் ஆப் கைலாஷ், நியூடெல்லி-65. போன்: 647276. ❊ பங்கஜம் சுந்தரராஜன், C 6/A D.D.A. Flats, முனிர்கா புதுடெல்லி-67. ❊ Mrs. சாரதா, 16/449, விரம் பில்டிங், மாதுங்கா, பம்பாய்-19. ❊ சுசிலாமணி, 22, காந்தி மஹால், தேஜோ கோயா பார்க், வின்சென்ட் ரோடு, மாதுங்கா, பம்பாய்-19. ❊ லக்ஷ்மி நாராயணன், 5, வாணி கோ-ஆபரேடிவ் ஹவுசிங் சொஸைட்டி, வல்லபாக் ரோடு, காட்கோபர், (கிழக்கு) பம்பாய்-77. ❊ நல்லீஸ் ஸில்க் சாரீஸ் சென்டர், 401, டெலாங் ரோடு, மாதுங்கா, பம்பாய்-19. ❊ சௌத் இந்தியன் கன்ஸர்ன், 401, டெலாங் ரோடு, மாதுங்கா, பம்பாய்-19. ❊ லதா கிருஷ்ணன், பிளாட் நெ. 20, காமதேனு கோ. ஆப். பெஸ்டம் சாகர், செம்பூர், பம்பாய்-89, (கிளாஸ் பாக்டரி அருகில்). ❊ ஜெயஸ்ரீ, 2-A, தேசப்பிரியா பார்க் ரோடு, கல்கத்தா-26. ❊ S. பொன்னப்பன், 8-2-61, 2-வது பஜார், செகந்திராபாத். ❊ திருமதி T. S. சகுந்தலா சீனிவாசன், 18/1-A, லால்பாக் போர்ட் ரோடு, (மினர்வா & பஸப்பா சர்க்கிள் மத்தியில்) பெங்களூர், போன்: 224357. ❊ திருமதி துர்காம்பாள், 5-A, ராமச்சந்திர புரம், தென்னூர், திருச்சி. ❊ திரு S. சேதுராமன், 9, பாணாதுரை சன்னதி தெரு, கும்பகோணம்-612 001. போன்: 972. ❊ ராணி ஸில்க், 13, மஹால் 4-வது தெரு, மதுரை-1, போன்: 26295. ❊ S. லெட்சுமி, 24, சீனிவாசா தெரு, சேலம்-1. (டவுன் ரயில்வே ஸ்டேஷன் அருகில்) ❊ ஸ்ரீ காமேஸ்வரி ஏஜன்சீஸ், 6/175, திருச்சி ரோடு, (ஆல் இந்தியா ரேடியோ அருகில்), ராமநாதபுரம், கோயம்புத்தூர்-641 018. ❊ மகாலட்சுமி ஸில்க் சென்டர், தீன் பில்டிங், (உள்புறம்) 175/11, மேல வீதி, சிதம்பரம். ❊ ஹேமாவதி ஏஜென்ஸீஸ், 2711, நாணயக்கார செட்டி தெரு, தஞ்சாவூர். ❊ பாகீரதி மூர்த்தி, 100, ஸ்ரீ வராஹபுரம் தெரு, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி. ❊ M/s. சீதாராம் வேர் ஹவுஸ் ஸில்க் எம்போரியம், M.O. ரோடு, திருச்சூர்-680 002. ❊ S. சுந்தரம், 9, சாத்தான் கோவில் தெரு, வடிவீச்வரம், நாகர்கோவில்-2. ❊ திருமதி K. சீதாலட்சுமி, 41, 4-வது டிரஸ்ட் கிராஸ்தெரு, மந்தைவெளிப்பாக்கம், சென்னை-28, போன்: 73244. ❊ திருமதி சாவித்திரி பாலசுப்பிரமணியம், 2, 7-வது தெரு, நங்கநல்லூர், சென்னை-61, (பிள்ளையார் கோவில் அருகில்) போன்: 433737. ❊ திருமதி சரோஜா கிருஷ்ணமூர்த்தி, A9/386, புதிய குடியிருப்பு (முதல் மாடி) குடிசை மாற்று வாரியம், திருமங்கலம், அண்ணா நகர் மேற்கு, சென்னை-600 107. (திருமங்கலம் பஸ் நிலையம் அருகில்).

---

குறிப்பு: சென்னை நகரில் எந்தக் கடைகளுக்கும் எங்கள் புடவைகள் சப்ளை கிடையாது. மற்ற இடங்களில் வாங்குவது எங்களுடைய தயாரிப்பு அல்ல.

## பட்டுப் புடவைப் பரிசுத் திட்டம்

# விதியை வெல்லலாம்



**போட்டி: 22**

. விதியை மதியால் வெல்லலாம் என்பதற்கு உதாரணமாய் உங்கள் வாழ்வில் நடந்த ஏதேனும் ஒரு சம்பவத்தை கவைபட கீழே சுருக்கமாய் எழுதி இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. குலுக்கலில் ஒருவருக்குப் பட்டுப்புடைவை. உறை மீது ''விதியை வெல்லலாம்'' என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி: **15-10-84**

**31 பட்டுப் புடவைகளுள் ஒன்றைப் பெற வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள்.**

என் பெயர் : ..........................

விலாசம் : ..........................

..........................

'ஏய் கெழவா!''

கிழவன் திடுக்கிட்டுப் பார்த்தான்.

''இத பாரு – இந்தப் பக்கமா ஓடிப் போயிடு. திரும்பச் சன்னுலபடக்கூடாது!''

கிழவன் பதில் பேசாமல் நின்றான் – எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

''ஏய்யா நிக்கறே ''

''சாமி – போகச் சொல்லிப்புட்டு தூரத்திப் புடிச்சு அடிப்பீங்க சாமீ – என்னால தாங்க முடியாதுங்க.''

அடக்கடவுளே! இப்படிப்பட்ட அப்பாவிகள் இருப்பதால்தானே எத்தனையோ சமூகத்துரோகிகள் இவர்களை எரித்துவிட்டு, அந்த வெப்பத்தில் குளிர் காய்கிறார்கள்!

''நெஜமாத்தான்யா சொல்றேன்-போய்த் தொலை!''

என் பேச்சில் தொனித்த உறுதியைப் பார்த்து 'இவன் பைத்தியமோ' என்று எண்ணமிடுவது போல யோசித்த கிழவன் அவசரமாகத் தன் மடியைத் துழாவி அழுக்கான இரண்டு ரூபாய்த் தாளை எடுத்து என்னிடம் நீட்டினான்.

எனக்கு அவன் நோக்கம் புரிந்தது – என் இரக்கத்துக்குக் கூட இவன் விலை போடுகிறான்! இது இவன் தவறல்ல! இதை இப்படியே பயிர் செய்து விட்ட இந்த மண்ணுக்கு ஏற்பட்டிருக்கும் சாபக்கேடு! இதற்கு விமோசனம் தேட இன்னும் வெகுதூரம் பயணப்பட வேண்டும்.

''ஏய் – இப்ப நீ ஓடறியா – இல்லே லத்தியை எடுக்கட்டுமா?''

கிழவன் சந்தேகத்தோடு கையை இழுத்துக் கொண்டு, அந்த அவசரத்திலும் விறகுச் சுமையை மறக்காமல் தூக்கிக் கொண்டு நழுவினான்.

நான் சட்டென எழுந்து அவசரமாக ஒரு தேடல் உணர்ச்சியை முகத்தில் பாவவிட்டு அங்குமிங்கும் அலைந்தேன். ராமையா கொஞ்ச நேரத்தில் கோஷ்டியில் இல்லாத யாரோ ஒருவனின் கைகளைக் கட்டி இழுத்துக் கொண்டு வந்தார் – மற்றவர்கள் யாரும் சிக்கவில்லை போலும்! மாட்டிக் கொண்டவன் திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தான். என் பரபரப்பைப் பார்த்துத் திடுக்கிட்ட ராமையா ''எங்கேய்யா அந்தக் கிழவன்?'' என்றார்.

''ஒண்ணுக்குப் போறேன்னு இப்பிடி ஒதுங்கினான் – ஆளு 'டாவு' கட்டிட்டான் போல இருக்கு.''

விலுக்கென்று நிமிர்ந்த ராமையா என் விழிகளை நேருக்கு நேராகப் பார்த்தார் – அவர் இதழ் கடையில் குறும்புப் புன்னகை குமிழியிட்டது – பதில் பேசாமல் அருகிலிருந்த கான்ஸ்டபிளை அழைத்து ''நம்ம கணேசனைப் பொழைக்கத் தெரியாதவன்னு சொன்னியே – இப்ப அவன் பொழைக்கக் கத்துக்கிட்டான்'' – என்றார். எல்லோரும் 'கொல்' லென்று சிரித்தார்கள். ராமையா சொன்னதன் பொருள் எனக்கும் புரிந்தது– ஆனால் சிரிக்கவில்லை – உள்ளே அழுது கொண்டு வெளியே சிரிப்பதற்குத் தேவையான பக்குவம் எனக்கு இன்னும் ஏற்படவில்லை.





# ராகமாலிகா பட்டு சேலைகள்

சுகன் ஆர்கேட்,

நெ. 12பி, நாகேஸ்வரராவ் ரோடு, பனகல் பார்க் எதிரில்

தியாகராய நகர், சென்னை-600 017

(ஞாயிறு கடை உண்டு)

## தன் கையே தனக்குதவி

குடும்பத்திற்குத் தேவையான ஆடைகளை நானே தைத்து விடுவேன். துணிகளை இஸ்திரி போடுவதும் வீட்டில் தான். ஆனால் இவற்றுக்கான கூலியை மட்டும் உண்டியலில் போட்டு விடுவேன். இப்படிச் சேர்த்த பணம், மொட்டைமாடி தண்ணீர்தொட்டிக்கு நீர்ஏற்றும்மோட்டார் ரிப்பேராகி 500ரூபாய் செலவு வைத்த போது கைகொடுத்தது.

**ஜெயா வெங்கட்ராமன், சென்னை-20**

## சிறுதுளி பெருவெள்ளம்!

அன்றன்றைய செலவுக்குப் பின் மிஞ்சும் ஒரு ரூபாய்க்குக் குறைவான சில்லறையை உண்டியலில் போட்டு வைப்பேன். ஒரு முறை மாதக் கடைசியில் அம்மாவுக்குக் கண்ணாடி வாங்க 75 ரூபாய் பணம் தேவைப்பட்டது. உண்டியலைத் திறந்து பார்த்த போது சரியாக ரூபாய் 75.50 சேர்ந்திருந்தது!

**எஸ். பாலாஜி, காஞ்சீபுரம்-3**

## சமூக வழக்கம் விளைவித்த நன்மை

கல்யாணம் மற்றும் விசேஷங்களுக்குப் பிளாஸ்டிக் வாளி, டப்பா போன்றவற்றில் பழம் அல்லது பிஸ்கட் வகையறாக்களைப் போட்டுக் கொடுக்கும் பழக்கம் எங்கள் ஊரில் (செட்டி நாடு) உண்டு. என் பெண் பள்ளியில் சுற்றுலா போக பணம் கேட்ட



கிறார்! காபி குடிக்கும் தேவையற்ற பழக்கமும் விட்டுப் போயிற்று..

**இரேவதி சேது, நெய்வேலி**

## இனி லாட்டரி அடிக்க வேண்டாம்

கல்கியில் 'லாட்டரி என்னும் லாகிரி' படித்ததிலிருந்து லாட்டரிச் சீட்டு வாங்குவதை விட்டு விட்டேன். இதனால் மாதாமாதம் மிச்சமான ரூபாய் 75–ஐ சேமித்து வருகிறேன். சில தினங்களுக்கு முன் என் மகன் பள்ளியில் சுற்றுலாப்போக முப்பது ரூபாய் கேட்ட போது தயங்காமல் கைச்செலவுக்கும் சேர்த்து நாற்பது ரூபாயாகக் கொடுக்க முடிந்தது.

**தங்க குஞ்சிதபாதம், சிதம்பரம்-1**





போது என் கணவர் பிடிவாதமாக மறுத்து விட்டார். ஏராளமாகச் சேர்ந்து போயிருந்த பிளாஸ்டிக் சாமான்களை விற்று அவளை அனுப்பி வைத்தேன்.

**மஞ்சுளா ரெங்கன், வளையப்பட்டி**

## கை கொடுக்கும் காபி காசு

காபி சாப்பிடாதவர்களுக்கு அதனால் மிச்சமாகும் பணம் ஐம்பது ரூபாயை ஒவ்வொரு மாதமும் தந்து விடுவதாக அப்பா கூறினார். உடனே என் சகோதரியும் நானும் காபியை விட்டோம். கிடைத்த பணத்தைச் சிறு சேமிப்பில் கட்டி வருகிறோம். இதர செலவுக்கு அப்பா எங்களிடம் கைமாற்று வாங்கு

## காலத்தால் செய்த நன்றி

எங்களுக்கு இக்கட்டில் உதவியது ஒரு வாயில்லாப் பிராணி என்றால் நம்புவீர்களா? தக்க சமயத்தில் எங்கள் அல்சேஷியன் மில்லி நான்கு அழகான குட்டிகளைப் போட்டது. ஒவ்வொன்றையும் 300 ரூபாய் வரை கொடுத்துப் போட்டி போட்டுக் கொண்டு வாங்கிச் சென்றார்கள்.

**ஆர். ஸ்ரீநிவாஸன், சென்னை-17**

## சிகரெட் சேமிப்பு

எவ்வளவு சொல்லியும் கணவரின் புகை பிடிக்கும் பழக்கத்தை மாற்ற முடியாததால்

**பங்கு**



ஒருநாளைக்குச் சிகரெட்டுக்குச் செலவாகும் பணம் எவ்வளவோ அதே அளவு எனக்கும் தரவேண்டும் என்றேன். ஒப்புக் கொண்டார். சில வருடங்களுக்குப் பின் சிகரெட்டை விட்டு விட்டார். ஆனால் சேமிப்பு தொடர்ந்தது. ஒரு சமயம் வீடு வாங்கிய புதிதில் அவர் தம்பி 5000 ரூபாய் பணம் உதவி கேட்டு எழுதினார். அப்போது சிகரெட் பணம் ஞாபகம் வர, எடுத்துப் பார்த்த போது 3568 ரூபாய் சேர்ந்திருந்தது!

**சரோஜா கணேசன், சென்னை-50**

**சமயோசிதம்**

150 ரூபாய்க்கு மின் கட்டண பில் வந்த போது செய்வதறியாது தவித்தேன். திடீ





ரென்று அடுத்த வீட்டுக்காரருக்கு டெரிகாட் பாண்ட், சட்டை தேவை என்று சொன்னது ஞாபகம் வர, நான் கணக்கு வைத்திருந்த கடையில் அவருக்குத் துணி எடுத்துக் கொடுத்து விட்டு உடனே பணத்தைப் பெற்று மின்சார கட்டணத்தைச் செலுத்தினேன்.

**எஸ். ரவீந்திரன், சிகந்தராபாத்-361**

**தந்தி மணி ஆர்டர்**

திடீர் ஜுரம் என்றால் ஐம்பது ஜலதோஷம் இருமலுக்கு 30 அல்லது 40 என்று அவ்வப்போது ஊருக்குத் தந்தியடித்து தந்தி மணி ஆர்டரில் பணம் வரவழைத்து விடுவேன். விடுமுறைக்கு வீட்டுக்குப் போன போது தர்ம சங்கடமாக அம்மா கேட்டார். 'உன் தந்தி வந்தபோதெல்லாம் புதுப்படம் ரிலீஸ் ஆகியிருக்கே?'

**ஜி. டி. முருகன், சென்னை-14**

**சமயம் அறியாத சமையல் காஸ்**

சமையல் காஸ் வர ஒரு மாதம் ஆகும் என்று கூறவே அதற்காக வைத்திருந்த பணத்தில் மண்ணெண்ணெய் வாங்கி விட்டேன். திடீரென்று காஸ் சிலிண்டர் வந்த போது ஒரு கணம் விழித்து விட்டு பக்கத்து வீட்டில் கெரஸின் கேட்டது நினைவுக்குவர, அவர்களிடம் அதை விற்று காசு பெற்று காஸ் சிலிண்டருக்குப் பணம் கொடுத்தேன்.

**பாமா சத்யமூர்த்தி, சேலம்**

**வண்ணான் தவறால் வரவு**

லாண்டரி கடையில் கொடுத்த என் விலையுயர்ந்த பாண்டைத் தவற விட்ட கடைக்காரர் அதற்கு பதிலாக கணிசமான தொகையைக் கொடுத்து விட்டார். என் மனைவியின் பிரசவ பிரயாண செலவுக்கு அது பயன்படும் என்று கனவிலும் நினைக்கவில்லை.

**கே. ஆறுமுகம், கோவை**

**சிக்கனம் பார்த்தால் தீர்ந்தது பிரச்னை**

போன டிசம்பரில் எதிர்பாராத விருந்தாளிகள் கூட்டம். அரிசி முதல் காய்கறி வரை எல்லாவற்றையும் தரமும் விலையும் ஆராய்ந்து வாங்கி, கூடிய வரை எண்ணெய் குறைவாகச் செலவாகும் சமையல் முறைகளைக் கையாண்டு, சமாளித்தேன். காலனியில் உள்ள பெண்கள் பத்து பேர் சேர்ந்து ஏலச் சீட்டு விட்டோம். மாதா மாதம் கடனை அடைத்து வருகிறேன்.

**ஜெயந்தி, சென்னை-17**

**சமய சஞ்சீவி**

என் மாமனாரின் வைத்திய செலவுக்கு திடீரென்று 3000 ரூபாய் தேவைப்பட்ட போது சமய சஞ்சீவியாகக் கைகொடுத்தது எல். ஐ. ஸி. பத்திரம் தான். ஆயுள் பாது

காப்பு, வரிவிலக்கு இவற்றுடன் கடனும் வழங்கும் எல்.ஐ.சி.யின் அருமையை அப்போது தான் புரிந்து கொண்டேன்.
**எல். பத்மாவதி, திருச்சி-3**

### சிக்கலை விடுவித்த விமான நிலையம்

சமீபத்தில் விடுமுறைக்கு (காஷ்மீர்) போயிருந்த போது டிராவல்லர்ஸ் செக்குகள் எடுத்துச் சென்றேன். அங்கு ஏதோ பண்டிகையை ஒட்டி வங்கிகளை நான்கு நாட்களுக்கு மூடி விட்டார்கள். கையிருப்பு வெகுவாகக் குறைந்திருந்தது. யோசித்துப் பார்த்து ஏர்லைன்ஸ் ஆபீஸ் சென்று மறுநாள் அமிர்தசரஸ் செல்ல டிக்கட் எடுத்தேன். அவர்கள் டிராவல்லர்ஸ் செக் பெற்றுக் கொண்டு 70 ரூபாய் சில்லறை கொடுத்தார்கள். அன்று மாலையே டிக்கட்டை கான்சல் (Cancel) செய்து பத்து ரூபாய் பிடிப்பு போக மீதிப் பணத்தை 'காஷாக' கொடுத்து விட்டார்கள்.
**தியாக. இராசகோபாலன், ராஜ்கோட்-1**

### தானத்தில் சிறந்தது...

இரண்டு மாதங்களாகத் தொடர்ந்து விருந்தாளிகள் வந்ததால் ஒரே செலவு. திடீரென்று உறவுக்காரர் குடும்பத்தோடு வருவதாகக் கடிதம் வந்ததும் அதிர்ச்சி அடைந்தோம். யோசித்துப் பார்த்து என் கணவரும், மகனும் ரத்த தானம் செய்து பணம் பெற்று வந்தார்கள். ஓரளவுக்குச் சமாளிக்க முடிந்தது.
**சீதா சங்கரன், ஜெய்பூர்-4**

### அன்புடன் உங்கள்...

மாதக் கடைசி. திடீரென்று ஒரு திருமணத்துக்கு அழைப்பு வந்தது. பரிசு வாங்கப் பணமில்லை. வீட்டில் புதிய பாத்திரங்கள் பல இருந்தாலும் எல்லாவற்றிலும் J.K. என்று பொறித்திருந்தேன். மின்னல்போல் ஒரு யோசனை. நேராகப் பாத்திரக்கடைக்கு ஒரு பாத்திரத்தை எடுத்துச் சென்று J.K. என்ற எழுத்துக்களுக்கு முன்னால் 'அன்புடன்' என்று பொறிக்கச் சொன்னேன். ஒரே ரூபாய் செலவில் கல்யாணப் பரிசு தயாராகி விட்டது.
**ஜானகிகுமாரி, இரணியல்**

### ஒரு சின்ன பரிமாற்றம்

என் அண்ணா பெண்ணுக்கு டில்லியில் கல்யாணம் என்று எதிர்பாராத நேரத்தில் கடிதம் வந்தது. பிரயாணச் செலவுக்கு என்ன செய்வது என்று யோசிக்க ஆரம்பித்தேன். பரிசுக்கு வெள்ளி சாமான் வாங்கலாம் என்று சீட்டுக் கட்டி வந்த நகைக் கடைக்குப் போன போது என் தோழி பணம் கொடுத்து நகை வாங்க வந்திருந்தாள். சீட்டுத் தொகையில் அவளை நகை வாங்கிக் கொள்ளச் சொல்லிவிட்டு அவளிடமிருந்து பணத்தைப் பெற்றுப் பிரயாணத்துக்கு உபயோகித்தேன்.
**ஆர். பாக்கியலக்ஷ்மி, சென்னை-58**

### நினைத்ததும் நடந்ததும்

கணவரும் நானும் முதல் மகனின் ஆண்டு நிறைவை விமரிசையாகக் கொண்டாட பணம் சேர்த்து வந்தோம். பிறந்த நாளுக்கு சில நாட்கள் முன்னதாகப் பல நாட்களாய் தட்டிப் போய்க் கொண்டிருந்த என் நாத்தனாரின் கல்யாணம் நிச்சயமாகி விட்டது. ஆண்டு நிறைவுக்குச் சேர்த்த பணம் கல்யாணத்துக்குச் செலவாயிற்று. எளிமையாய்ப் பிறந்த நாளைக் கொண்டாட மன நிறைவுடன் முடிவு செய்தோம்.
**லட்சுமி சந்திரமோகன், சென்னை-5**

### கற்றதனால் ஆய பயன்

'அப்பாடா' என்று ஒருவழியாக ஜூன் மாதச் செலவைச் சமாளித்து விட்டு நிமிர்ந்த போது சின்னவன் கண்ணில் அடிபட்டுக் கொண்டதால் மருத்துவச் செலவு 500 ரூபாய்க்குக் குறையாமல் தேவைப்பட்டது. கூச்சத்தைப் பாராமல் எங்கள் கட்டடத்திலிருந்த ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கி டியூஷன் எடுக்க இருப்பதாக அறிவித்தேன். அடுத்த இரண்டு நாட்களில் நான்கு குழந்தைகள் முன் பணத்துடன் வந்த போது அப்போதைய செலவைச் சமாளிக்க முடிந்ததோடு, பிற்காலத்திலும் உதவியது.
**லக்ஷ்மி ராமன், பம்பாய்-71**

### நண்பர்கள் வேலி

நாங்கள் நண்பர்கள் பதினொரு பேர் சேர்ந்து பாங்கில் தனித்தனியாக அவரவர் பேரில் 100 ரூபாய் சிறு சேமிப்பு அக்கவுண்டு தொடங்கினோம். எங்களில் ஒருவருக்குத் திடீர்ச் செலவு ஏற்பட்டால் யாரேனும் ஒருவரிடம் பாஸ் புத்தகத்தைக் கொடுத்து விட்டு அவர்கள் தம் கணக்கிலிருந்து எடுத்துத் தரும் பணத்தைப் பெற்றுக் கொள்வோம். மாதம் 50 ரூபாயாகத் திருப்பித் தருவோம். அபராதமாகத் தன் கணக்கில் ஒவ்வொரு மாதமும் 10 ரூபாய் கட்டியாக வேண்டும் என்பது நிபந்தனை.
**ஜி. சத்யகிரி ராஜன், திருப்பராய்த்துறை**

ராகமாலிகா வழங்கும் பட்டுப்புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

**திருமதி ஜானகி குமாரி**
ஆனந்த நிலயம்,
இரணியல்,
நெய்யூர் தபால்,
குமரி மாவட்டம்.




உடனே தடவுங்கள்
பர்னல்—சுட்ட புண்களுக்குச்
சிறந்த சிகிச்சை.




தீப்புண்கள் வித்தியாசமானவை. தீவிரச் சுட்ட புண் தீவிர வேதனை தரும்; கொப்புளங்கள் ஆகும். அவற்றுக்குத் தேவை சிறந்ததொரு மருந்து. அதுவே பர்னல். பர்னல் குளுமை தருகிறது. இதமாக ஆற்றுகிறது. கொப்புளமேற்படுவதை உடனே தடுக்கிறது. பர்னல் ஆன்ட்டிஸெப்டிக் க்ரீம்—தீப்புண்கள் விரைவில் ஆறத் தேவையானதைக் கொண்டது.

வீட்டில் எப்போதும் வைத்திருங்கள் பர்னல்.

**பர்னல்**

தீப்புண்களுக்குச்
சிறந்த சிகிச்சை.




# தேவை

தவத்திரு மகரிஷி மகேஷ் யோகி அவர்களால் நடத்தப்பட்டு வரும் மகரிஷி வேத பாடசாலைக்கு 7 வயது முதல் 12 வயதுக்குட்பட்ட உபநயனம் ஆன ரிக், யஜுர், சாமவேதம் பயில பிராமண சிறுவர்கள் தேவை. மேலும் இங்கு சமஸ்கிருதம், சிவ ஆகமம் மற்றும் பொதுக் கல்வியும் போதிக்கப்படுகிறது. உணவு, தங்குமிடம் இலவசம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,

முதல்வர்,
மகரிஷி வேத பாடசாலை,
28, டாக்டர் குருசாமி சாலை,
சேத்துப்பட்டு.
சென்னை-600 031

போன்: 665842

ஜெய் குரு தேவ்

# வேங்கை வனம்

வேங்கைமார்பன் புரவியை விரட்டிக் கொண்டு பாய்ந்தோடி வந்து கொண்டிருக்கிறான். பின்னே கானப்பேரெயில் அரசியல் அதிகாரிகள்...

ராஜரதத்திலிருந்த பாண்டிய மாமன்னரைக் கண்ட அடுத்த கணம்—

புரவியை விட்டு ஒரே தாவில் இறங்கிய வேங்கைமார்பன் கரம் கூப்பி, ''எங்கள் மீனவத் தலைவ, பாண்டிய குலாதிபதி, மாமன்னர் பெரும, கானப்பேரெயிலே களிப்பு கொண்டு மகிழ்கிறது. உள்ளே வாருங்கள்...!'' என்று கூறித் தலைபணிந்து நிற்க...



## அத்தியாயம் 23

## நான் தமிழனுக்குப் பிறந்தவன்!

**வா**னவீதியில் அக்கினி ரதம் வலம் வரத் தொடங்கும் பூபாள நேரத்தில்...

வேங்கை வீதியில் உக்கிரரதம் வந்து நிற்கிறது.

எதிரே பிரம்மாண்டமான கோட்டை. ஆ! இது கோட்டையா?

உக்கிரப் பெருவழுதிப் பாண்டிய மாமன்னர் அண்ணாந்து கவனித்து அரை நாழிகைப் போது வரை மலைத்து, சிலைத்து, பின்னர் நிலைத்துச் சிந்திக்கிறார்.

சிறகு ஜீவன்கள் காலைப் போதுக்குச் சூரிய கீதம் பாட...

கிழக்குதயோன் பின்னணியில் அந்தக் கோட்டை செம்மை படர்ந்த நிழற்காட்சியாகத் தெரிந்தாலும், அதன் ஆழமான அஸ்திவாரம் புயல் காட்சியாய்ப் புரிபடுகிறது.

கோட்டை வாசலில் மீனக் கொடி பறக்க வந்து நின்ற ரதம் யாருடையது என்றறிய கோட்டையின் நடுப்பிரிவுப் பாலம் இறங்க, வீரர்கள் வந்து கவனிக்கின்றனர்.

ஆ! பாண்டிய சாம்ராஜ்யாதிபதி...

அடுத்தகணமே...

முரசங்கள் முழங்குகின்றன...

சங்கங்கள் ஆர்க்கின்றன...

எக்காளமும் துந்துபியும் எக்காளமிடுகின்றன...

இத்தனை அட்டகாசங்கள் நடந்தும், பாண்டிய மாமன்னரை உள்ளே வரலாம் என்று அழைக்க யாருக்கும் துணிவு வரவில்லை.

பெரிய இடத்து வருகை...

வேந்தன் வேங்கைமார்பன் என்ன சொல்வாரோ...

ஒருநாழிகைப் போதுக்குள்...

அனைவரும் அவ்வாறே தலைபணிய...

அடுத்து முப்பிரிவுப் பாலங்களில் ஏனைய இருபிரிவுப் பொருத்த பாளங்கள் கடகட வென்று சத்தமெழுப்பி இறங்குகின்றன.

சூரியக் குளியலில் சொப்பனம் கண்டு கொண்டிருந்த ஆழி முதலைகள் சரக் சரக் கென்று நீரில் பாய்ந்து ஓடுகின்றன.

ராஜரதம் கானப்பேரெயிலுள் நுழைகிறது.

தொடர்ந்து வீரர்கள் நுழைகிறார்கள்.

கோட்டையை நோட்டம் விடுவதற் கென்றே வந்த யவனர்களும் சோனகர் களும் தத்தம் கண்களைத் தவளைகளாக்கித் தெற்றித் தெற்றித் தேர்வு செய்கின்றனர்.

ரதம் அரண்மனையை அடைந்ததும் மங்கல வாத்தியங்கள் ஒலிக்கின்றன.

அரண்மனையுள் பிரவேசிக்கிறார்கள்.

ஓ... என்னே அற்புதமான அரண்மனை! தனது பொன்னாசனத்தைக் காட்டி அமரச் சொல்கிறான் வேங்கைமார்பன்.

பாண்டிய மன்னர் அவ்வாறு அமராது எதிரே இருந்த இருக்கையில் அமருகிறார். வேங்கைமார்பனும் மரியாதை வேண்டித் தனது பொன்னாசனத்தில் அமராமல், மாமன்னர் பக்கத்திலிருந்த ஆசனத்தில் அமருகிறான்.



''மன்னர் பெருமானே! வந்த விஷயம் பற்றி ஓய்வு கண்டு பேசலாம் அல்லவா?''

கனன்ற கண்களுடன் வேங்கைமார்பனைக் கவனிக்கிறார் கயற்கொடிக் காவலர் உக்கிரப் பெருவழுதி.

''எங்கே என் மகள்?''

கேள்வியில் எரிமலை தெரிகிறது.

''நலமாக இருக்கிறாள்.''

''அது தெரியும்; எங்கே என் மகள்?''

''வேங்கைவனத்தில் இருக்கிறாள்.''

''வேங்கைவனமா? அசோக வனமா?''

''நான் திருமேனிக்கென்றே கட்டிய அந்த வனத்துக்கு நீங்கள் அப்படி ஒரு பெயரை வைத்தால் நான் பொறுப்பாக முடியாது.''

''கடத்தி வந்தது மட்டும் பொறுப்பான செயலோ?''

''ஓய்வு கொண்டு பேசலாம் பாண்டியர் பூபதி.''

''நான் ஓய்வு காண வரவில்லை. இரண் டில் ஒன்று காண வந்திருக்கிறேன். அதுவும் தைரியமாக உனது கோட்டையில் வந்திருக் கிறேன்.''

''மன்னிக்கவேண்டும்; இது உங்கள் கோட்டை...''

''நீ எனது கோட்டை என்பதால் நான் இதனை அழிக்காமல் விட்டு விடுவேன் என் கிற சமாதானமா?''

வேங்கைமார்பனுக்கு இப்போது தான் காலில் சுரீர் என்று தீப்பற்றுகிறது.

''பாண்டிய மாமன்னு! வேங்கைமார்பன் இதுவரை எவரிடமும் சமாதானம் கோரிய

கோ வி. மணிசேகரன்

இல்லை; இனியும் கோர மாட்டான். எனது கோட்டையை அழிக்க வேண்டுமானால் அது என்னால்தான் முடியுமேயொழிய வேறு யாராலும் முடியாது. இதோ உங்களை உள்ளே அனுமதித்த இரக்கமும் எனது கோட்டையை நானே அழிப்பதற்குச் சமானம்தானே?''

''ஒரு பேரரசரின் மகளைக் கடத்துவது தவறில்லை?''

''இல்லை; ஏனெனில் நான் அவளை எனக்குரியவளாக்கிக் கொண்டவன்.''

''சம்மதியாத ஒருத்தியை மனைவியாக அடைவது ஜடத்தை மணப்பதற்குச் சமானம் என்பது தெரியவில்லை?''

''திருமேனி இந்த வேங்கைவனத்தைக் கோபுரமாகவும் உயர்த்தலாம், குழிதோண்டியும் புதைக்கலாம்! இரண்டுக்கும் நான்சம்மதித்து ஆய் விட்டது. உங்களது இரண்டில் ஒன்றைச் சொல்லலாம்!''

''திருமேனியை என்னுடன் அனுப்பி வைக்கிறாய்!''

''தாராளமாக அனுப்பி வைக்கிறேன்; ஆனால் ஒரு நிபந்தனை!''

''என்ன நிபந்தனை?''

''இந்தத் திருமணத்தை நான் மதுரையில் தான் கோலாகலமாக நடத்தவேண்டும். அவன் என்னை மணாளனாக ஏற்றுக்கொள்வதாகச் சத்தியம் செய்ய வேண்டும். அந்தச் சத்தியம் தமிழ் பேரில் இருக்க வேண்டும்.''

''இது அவசியமா?''

''என் சபதம் நிறைவேற இது மிகமிக அவசியம்!''

''அது என்ன உன் சபதம்?''

''அவளை நான் மணக்கவில்லையென்றால் நான் தமிழனுக்குப் பிறந்தவனல்ல; தமிழனல்ல; தமிழ் வீரனல்ல!''

''வேங்கைமார்பா!''

''இந்த எனது சபதத்துக்காக நான் என்ன செய்வேன்? திருமேனியை மதுரை அரண்மனையில் சந்தித்த நாளன்று எடுத்த சபதமிது! இதற்காக வேங்கைவனத்தையே அழிப்பதானாலும் நான் சம்மதிப்பேன். அவமானக் கவிதை எழுத, இந்த அலங்கார காவப் பேரெயில் எதற்கு? நீங்களே சொல்லுங்கள் மன்னர்பெருமானே?''

''நான் திருமேனியிடம் பேசிப் பார்க்க வேண்டும்!''

''தாராளமாகப் பேசலாம். தடையேதுமில்லை. ஆனால் வந்ததும் வராததுமாக...''

''வந்த காரியம் சுமுகமாக முடிந்தால் தங்கி இருப்பேன்; இல்லை...''

''பொங்கி எழுவீர்கள்! உங்களை அன்போடு போக விடுகிறேன். அடுத்த முறை வருகிற போது பொங்கி எழுந்தே வரலாம்!''

என்ன செருக்காக மறுமொழி கூறுகிறான் இவன்?

''திருமேனிக்கு மாங்குடி மருதனார் இறந்த செய்தி தெரியுமா?''

''நான் சொல்லவில்லை; அவளது கண் கலங்கி விடும். அவளை எனது கண் போலக் காத்து வருகிறேன்.''

''நல்லது! திருமேனியைப் பார்க்கப்புறப்படலாம்!''

அனைவரும் வேங்கைவனம் நாடிச் செல்கிறார்கள்...

இதற்குள் திருமேனிக்குச் செய்தி எட்டி விடடது!

ஆ! அப்பா! என்னை மீட்டுச் செல்ல வந்திருக்கிறார்.

வேங்கைவனத்துள் பிரவேசிக்கிறபோதே மாமன்னருடைய கண்கள் சிலையை மொய்க்கின்றன.

ஆ! எவ்வளவு தத்ரூபமாக வடித்திருக்கிறான்... பொன்னைக் கொட்டியல்லவா கௌரவித்திருக்கிறான்...!

ஆமாம்; அது என்ன சிலையின் கழுத்தில் தொங்குவது?

மாங்கல்யம்; திருமாங்கல்யம்...

ஓ... எங்கோ மீறிப் போய் விட்டான் வேங்கைமார்பன்.

தந்தையைக் கண்டதும் 'கோ'வென்று கதறியழுது ஓடிவருவாள் திருமேனி, என்று எதிர்பார்க்க, மாறாகக் கண்கள் சிவக்கத் தந்தையாரை நோக்குகிறாள்...

ஆயினும் அங்கே இருதுளி நீர் மறைந்து எட்டிப் பார்ப்பதன் மர்மம் புரிகிறது.

''மகளே! நலமா?''

''தந்தையே! தமிழ் நலமா?''

அதிர்ந்து போனார் ஆலவாய் மன்னர்.

''தமிழுக்கு என்னம்மா குறைச்சல்?''

''அது மதுரையில் செத்து விட்டதாமே! திருமேனி வாராது தமிழ்மேனிக்கு விமோசனம் கிடையாது என்று எனது ஆசான் கடைசியாகச் சொன்னாராமே!''

வேங்கைமார்பன் வெலவெலத்துப் போனான். எவ்வாறு, இவளுக்கு இச்செய்தி தெரியும்?

ஓ... காளிங்கன் வேறெங்குமில்லை; அவன் இங்கேதானிருக்கிறான்...!

''வேங்கைமார்பா! உன் கோட்டையிலிருக்கும் பலவீனம் உனக்குப் புரியும் என்று நினைக்கிறேன். நான் என் மகளுடன் தனித்துப் பேச விரும்புகிறேன்.''

வேங்கைமார்பன் நாணித் தலையசைத்து ஒப்புக் கொண்டு அவ்விடத்தை விட்டகல, தியாகவல்லியும் பின் சென்றாள்.

கோபம் கொள்வது, பிறர் குற்றத்திற்காகத் தன்னையே தண்டித்துக் கொள்வதாகும்.

—லட்சுமி சிவம்.



''திருமேனி! இனியும் அடம் பிடித்துப் பயனில்லை; அதோ பார்! உனது சிலையின் கழுத்தில் திருமாங்கல்யம்!'', என்றார் உக்கிரப்பெருவழுதி.

சற்றே தந்தையாரைக் கூர்ந்து கவனித்த திருமேனி, ''சிலைக்குப் புடவை கட்டினால் பெண் போலவே தெரியும்! ஆனால் ஒரு சிலையைக் கூட அது பிரசவித்துத் தர முடியாது. இப்படிக் கோரமான உதாரணம் கூறியதற்கு மன்னிக்கவும் அப்பா!''

''இனி தனித்து உன்னால் வாழ முடியும் என்கிறாயா?''

''தனித்து நான் எங்கே வாழப் போகிறேன்? தமிழோடு அல்லவா வாழப் போகிறேன்!''

மலைத்துக் கவனிக்கிறார் மாமன்னர்.

''திருமேனி! மனம் திறந்து கேட்கிறேன்! வேங்கைமார்பன் விஷயத்தில் மறுபரிசீலனை செய்ய முடியாதா?''

''மறுபிறவியில் இதுகுறித்துப் பேசுவோமே! இப்போது எனது ஆசான் சாகிற போது சொன்ன தமிழ்ச்சங்கம் செயல்பட வேண்டும். அதற்காக என்னை மீட்டுச் செல்ல உங்கள் வீரம் உதவுமேயானால் மகிழ்ச்சியடைவேன். இல்லை, வேங்கைவனத்துடன் எனது வாழ்வு பிணமாகத்தான் முடிய வேண்டுமானால் முடிந்து விட்டுப் போகட்டும்.''

''உனக்கு மாங்குடியார் மறைவுகுறித்து யார் சொன்னது?''

''காளிங்கன்!''

''அவனை நான் பார்க்க வேண்டுமே!''

''உங்களை அவர் பார்க்க மாட்டார். ஒரு கால் படை திரட்டி வந்தால் உதவி செய்யலாம்.''

''அவனை நீ நம்புகிறாயா?''

''உங்களையே என்னால் நம்ப முடியவில்லையே?''

''திருமேனி!''

''பின் என்னப்பா! என்னை மீட்டுச் செல்வதை விட்டு, எனது கைகளுக்கு மாங்கல்யத்தால் பூட்டுப் போடத் தூது வந்திருக்கிறீர்களே! நான் வேங்கைவனத்துக்குரியவளல்ல; தமிழ் வனத்துக்குரியவள்! எனது மூச்சு, பேச்சு எல்லாமே இனி தமிழ், தமிழ், தமிழ்...''

ஆவேசமாகக் கூறிய திருமேனி, அடுத்து அங்கே நிற்க விரும்பாது, மாளிகையுள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள். அவளது மடை கட்டி வைத்திருந்த துயரம் மடை திறந்த வெள்ளமாகக் கண்களில் பாய, குமுறிக் குமுறி அழுகிறாள்...

வேங்கைவனத்தை விட்டு வெளியே வருகிறார் உக்கிரப் பெருவழுதிப் பாண்டிய மாமன்னர்.

வேங்கைகள் உறுமுகின்றன.

திரும்பிப் பார்க்கிறார்.

கொழுத்து மதர்த்த வேங்கைகள்.

எவரையும் சட்டை செய்யாது நேரே ரதம் நாடிச் செல்கிறார், உக்கிரப்பெருவழுதிப் பாண்டியர்.

''நான் புறப்படுகிறேன் வேங்கைமார்பா!''



''ராஜேந்தர் ரசிகரான உன் அப்பா உன்னை எப்படித் திட்டினார்?''

'' 'வாடா ஹீரோ... வாங்கறது ஜீரோ... உன்னைத் திருத்தறது யாரோ'ன்னு!''

—எம். பாஸ்கர்.

உறுக்கத் தக்க உக்கிர வார்த்தைகள்.

''சுமுகமாக முடியவில்லை; புரிகிறது; புறப்படுங்கள். ஏதேனும் ஒரு முடிவுவேண்டுமல்லவா?''

''முடிவா? சொல்கிறேன் கேள்! நீ எப்படி என் மகளைக் கடத்தி வந்தாயோ அப்படியே கொண்டு வந்து மதுரையில் விட வேண்டும். அவள் உன்னை எவ்வழியிலும் ஏற்க மாட்டாள்! அவள் தமிழ்மீது காதல் கொண்டு விட்டாள்! நாற்பது நாள் தவணை தருகிறேன். தவறினால்...''

''யுத்தம்! எதிர்பார்ப்பது தானே? மன்னவா! இதற்கு நாற்பது நாள் தேவையில்லை. நாளையே யுத்த பேரிகை கொட்டலாம். ஆனாலும் நான் வலிய சண்டைக்கு வரமாட்டேன்; வந்தாலும் விடமாட்டேன். போய் வாருங்கள்.''

''வேங்கைமார்பா! விளையாடுகிறாய்!''

''வேங்கைக்கு விளையாடத் தெரியாது; பதினாறு அடி பாயத் தெரியும். ஒன்று வேங்கைவனத்தை அழித்து உங்கள் மகளை மீட்டுச் செல்லுங்கள். இல்லை, உங்கள்படையெடுப்புக்குப் பிறகு பாண்டிய சாம்ராஜ்யத்தையே குலைத்து மாலையிட வைக்கிறேன்! நான் அசல் தமிழனுக்குப் பிறந்தவன். போய் வாருங்கள்!''

உக்கிரப் பெருவழுதியின் கனன்ற கண்களில் போர்முரசம் உக்கிரமாக முழங்குகிறது.

கோட்டைக் கதவங்கள் திறக்கின்றன; பாலங்கள் இறங்குகின்றன. ரதம் முன்னே செல்ல, வீரர்கள் பின்னே செல்கிறார்கள். குறிப்பாக அழைத்து வந்த யவனர்களிலும் சோணகர்களிலும் சிலர் கானப்பேரெயிலில் கலந்து விட்டனர்.

கோட்டைக் கதவங்கள் மூடுகின்றன.

வேங்கைமார்பன் நெஞ்சில் வெந்தழல் எரிகிறது.

(தொடரும்)

# காதலாவது! கத்தரிக்காயாவது!

கோவை அனுராதா



## காட்சி 1

இடம்: கடற்கரை. (படகு மறைவில் மாலதியின் காதலன் பரமசிவம், அவள்மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டிருக்கிறான்.)

பரமசிவம்: மாலக்கண்ணு... மாலக்கண்ணு.. இப்படியே எத்தனை நாள் வேணும்னாலும் உன் மடியிலேயே படுத்துட்டு இருக்கலாம் போல இருக்கு.

மாலதி: ஆமா, இதென்ன பஞ்சு மெத்தைன்னு நினைச்சிங்களா...? எழுந்திருங்க தொடையெல்லாம் ரத்தம் கட்டிக்கிச்சு... அப்பா... ஒரே வலி...

பரமசிவம்: இந்த பாரத்தையே தாங்கமுடியலையே! நாளைக்கு எப்படி நீ குடும்ப பாரத்தைத் தாங்கப் போறே மாலக் கண்ணு...

மாலதி: ம்... ரொம்ப வெயிட்டா இருந்தா ரெண்டு இரும்பு ஆங்கிள் கொடுத்துத் தாங்கிக்குவேன்.

பரமசிவம்: கள்ளி, தமாஷாப் பேசறே...? (கன்னத்தைப் பிடித்துக் கிள்ளுகிறான்.)

மாலதி: போதும்... அந்தக் சட்டம் போட்ட சட்டைக்காரன் நம்மையே பார்க்கறான்.

பரமசிவம்: ஐயையோ, உனக்கு விவரமே தெரியலே. பீச்சுக்கு வர காதலர்கள் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளணும். மத்தவங்க அதை வேடிக்கை பார்க்கணும். இது சங்க காலத்திலே இருந்தே பீச்சோட இலக்கணம். மாலக்கண்ணு...

மாலதி: இங்க பாருங்க... எங்க அப்பா எனக்கு மாலதின்னு அழகாய் பேர் வச்சிருக்காரு. அதைப் போய் அசிங்கமா மாலக்கண்ணுன்னு... என்னவோ எனக்கு நீங்க அப்படிக் கூப்பிடறது பிடிக்கலே!... கல்யாணத்துக்கு வழியைப் பாருங்க.

பரமசிவம்: நான் மட்டும் என்ன கல்யாணம் வேண்டாம்னு சொல்றேன்? எங்கப்பா கிட்டே சொல்ல வெக்கமா இருக்கு. உங்கப்பா கிட்ட வந்து கேக்கப் பயமா இருக்கு.

மாலதி: இப்படிப் பயந்துக்கிட்டே இருந்தா ஒரு நாளைக்கு நானே வந்து உங்களுக்குக் கல்யாணப் பத்திரிகை குடுப்பேன்.

பரமசிவம்: மாலதி... மாலதி... நான் உன் மேல உயிரையே வைச்சிருக்கேன் தெரியுமா? அப்படி ஏதாவது நடந்தா உப்புக் கரிக்குமேன்னுகூட பார்க்காம இந்தக்கடல்லேயேவிழுந்து உயிரை விட்டுடுவேன். ஜாக்கிரதை...

மாலதி: உயிரையே விட்டுடற அளவுக்குத் தைரியம் இருக்கு. ஒரு வார்த்தை எங்கப்பாவை வந்து கேக்கக் கூடாதா? நானுக் கேட்டா அசிங்கமா இருக்கும்.

பரமசிவம்: உங்கப்பாவோட அரிவாள் மீசையைப் பார்த்தாலே பயமா இருக்கு மாலு.

மாலதி: ஐயையோ... முகத்துலதாங்க அப்படி... மனசுல ஒண்ணுமே இல்லே...

பரமசிவம்: இன்னும் மனசலயும் மீசை மொளைக்சணுங்கறே?

மாலதி: அதைச் சொல்லலே. நல்லவர்னு சொன்னேன். நீங்க மட்டும் வர்ற ஞாயிற்றுக்கிழமை அதாவது நாளைக்கு எங்க வீட்டுக்கு வந்து தைரியமாப் பொண்ணு கேளுங்க... அப்புறமா எங்கப்பா உங்க வீட்டுக்கு வந்து சம்பிரதாயமா உங்கப்பாகிட்ட ஜாதகம் கொடுப்பாரு.

பரமசிவம்: உங்கப்பா பேரு என்ன...? தர்மராஜன்... எமதர்மராஜன்னு வச்சிருக்கணும். ஆளைப் பார்த்தா அப்படித் தான் இருக்கு.

மாலதி: நீங்க எங்கப்பாவையா கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க... இங்கபாருங்க. நாம முன்னயே பழகினதை அவர்கிட்ட சொல்ல வேண்டாம். திடீர்னு வந்து பொண்ணு கேக்கற மாதிரி கேளுங்க...

பரமசிவம்: அதெப்படி மாலு... வாடகைக்கு வீடு கேக்கற மாதிரி வந்து கேக்க முடியுமா? உன்னை எனக்கு முன்னாலயே தெரியும்னு சொன்னா என்ன?

மாலதி: போச்சு... காரியமே கெட்டுடும்... எங்கப்பாவுக்குக் காதல்னாலே அலர்ஜி.

பரமசிவம்: நான் என்ன உங்கப்பாவையா காதலிக்கப் போறேன்?

மாலதி: பிடிவாதம் பிடிக்காதீங்க... உங்களுக்கு கை, காலோட என்னை கல்யாணம் பண்ணிக்க ஆசை இருக்கா இல்லையா?

பரமசிவம்: இருக்கு... இருக்கு... அப்படியே செய்யறேன்... மாலக்கண்ணு...

## காட்சி—2

தர்மராஜன் வீடு: பாத்திரங்கள்: தர்மராஜன் மனைவி லலிதா, மகள் மாலதி.

(கையைக் கட்டிக் கொண்டு அங்கும், இங்கும் நடந்து கொண்டிருக்கிறார் தர்மராஜன்.)

தர்மராஜன்: லலிதா... லலிதா... பெண்ணை நல்ல விதமா வளர்த்திருக்க வேண்டாம்? மணி ஒன்பது ஆச்சு. ஆபீஸ்ல இருந்து வர வேண்டிய மாலதி இன்னும் காணோம்.

லலிதா: ஏதாவது பிரண்டு வீட்டுக்குப் போயிட்டு வருவோ... வீணு ஏன் மனசைப் போட்டு அலட்டிக்கறீங்க?

தர்மராஜன்: இந்த தர்மராஜன் ஒண்ணும் இளிச்சவாயன் இல்லடி.. யார் எதைச் சொன்னாலும் நம்பறதுக்கு... என் நண்பர் சுவாமிநாதன் நம்ம மாலதியைத் தினமும் பீச்சல சந்திக்கறாராம்...

லலிதா: கர்மம்... கர்மம்... இந்த வயசுலஅவருக்கு இப்படி ஒரு ஆசையா?

தர்மராஜன்: அறிவு கெட்டவளே... நம்ம மாலதியை இன்னொரு பையனோட பார்த்ததாச் சொன்னாருடீ...

(அப்போது மாலதி உள்ளே நுழைகிறாள்.)

மாலதி: என்னப்பா கோபமா இருக்கீங்க...

தர்மராஜன்: ஆமா... வயசுக்கு வந்த பொண்ணு ஆபீஸ் முடிஞ்சி நேரா வீட்டுக்கு வராம, பீச்சல சண்ட பசங்ககூட சுத்தினு கோபம் வராம, சந்தோஷமா வரும்?

மாலதி: சண்டவங்க கூட இல்லப்பா... அவர் கூடத்தான்... அதுவும் சுத்தலே... ஒரே இடத்துலதான் உட்கார்ந்திருந்தோம்.



லலிதா: யாருடி... அவர்... இழுக்கறே?...

மாலதி: அவர்தாம்மா... பரமசிவம்..., டெல்லியில இருந்து டிரான்ஸ்பர் ஆகி வந்திருக்கார்.

தர்மராஜன்: அவன் கைலாயத்துல இருந்து வந்தாலும் சரி... என்னைக் கேக்காம எப்படி நீ அவனை லவ் பண்ணலாம்...?

லலிதா: என்ன உளர்றீங்க? உங்களைக் கேட்டா அவ லவ் பண்ண முடியும்?

தர்மராஜன்: நீ பேசாதடி... உனக்குக் காதலும் தெரியாது... கத்தரிக்காயும் தெரியாது.

லலிதா: ஆமா... ஆமா... எனக்கும் காலா காலத்துல காதலிக்கத் தெரிஞ்சிருந்தா உங்களை ஏன் கல்யாணம் பண்ணிண்டு இருக்கப் போறேன்?

தர்மராஜன்: லலிதா... நடந்த விஷயத்தைப் பத்திப் பேசறதை விட நடக்கப்போற ஆபத்தைத் தடுக்க வழியைப்பாரு.

மாலதி: இது ஒண்ணும் ஆபத்து இல்லேப்பா... பரமசிவம் ரொம்ப நல்லவர். பெரிய வேலையில இருக்கார். எல்லாத்துக்கும் மேல என்னை ரொம்ப விரும்பறார்.

லலிதா: கையில ஜாதகக் கட்டை தூக்கிண்டு அலையறது மிச்சம்... நல்லபையனு இருந்தாப் பார்த்து முடிச்சு விடுங்களேன்...

தர்மராஜன்: ஹூம்... நாளைக்கு அவன் இங்க வரட்டும்... பேசிக்கறேன்...

(உள்ளே போகிறார்.)

## காட்சி 3

(தர்மராஜன் தோட்ட வேலை பண்ணிக் கொண்டிருக்க, கேட்டைத் திறந்து கொண்டு, பரமசிவம் உள்ளே நுழைகிறான்.)

பரமசிவம்: சார்.... சார்... இங்கே தர்மராஜன்னு...

தர்மராஜன்: சாட்சாத் நானேதான்... சென்ட்ரி கணக்கா நான் ஒருத்தன் இங்கே இருக்கேன்... என்ன துணிச்சல் இருந்தா வீட்டுக்கே வந்து மாலதியைப் பார்க்க வருவே!

பரமசிவம்: வெரிகுட்... மாலதி உங்கிட்ட எல்லாம் சொல்லிட்டாளா?... என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க மாமா...

தர்மராஜன்: மாமாவா? யாரைப் பார்த்து மாமாங்கறே... வெறும் பயலே!

பரமசிவம்: சார்... நான் ஒன்றும் வெறும் பயல் இல்லே... பிரபல பழனியாண்டி ஹேர் டை கம்பெனியில பர்சேஸ் மானேஜர். மாசம் 15 நூறு ரூபாய் நோட்டு, சில சமயம் 30 ஐம்பது ரூபாய் நோட்டு சம்பளம்... என்னைக்காவது உங்க மீசை வெளுக்கும்... அப்போ எங்க கம்பெனி டை வேணும்னுதான் அலையப் போறீங்க...

தர்மராஜன்: சம்பாதிச்சாப் போதுமா? ஒரு அப்பா, அம்மா இல்லாத அனாதைக்குப் பொண்ணு கொடுக்க நான் ஒண்ணும் பிளாட்பாரம் இல்லே.. போ...

பரமசிவம்: யார் சார் அனாதை? எங்கப்பா வெண்ணைக்கடை வேலாயுதம்...சுதந்திரம் கிடைச்சதுல இருந்து கடைவீதியில கடை வச்சிருக்காரு... அடுத்த மாசத்துல இருந்து நெய் வியாபாரம் வேற ஆரம்பிக்கப் போறாரு...

தர்மராஜன்: நீ என்ன சொன்னாலும்சரி... இந்தச் சம்பந்தத்துல எனக்கு இஷ்டம் இல்லே... நீ போகலாம்...

## காட்சி 4

இடம்: கடற்கரை. பாத்திரங்கள்: மாலதி, பரமசிவம்.

(மாலதி கண்ணில் வழியும் நீரைத் துடைத்துக் கொள்கிறாள்.)

பரமசிவம்: நீ என்ன அழுது என்ன...? உங்கப்பன் மனசு இளகப் போறது இல்லே...

மாலதி: ஏங்க... அன்னைக்கு நீங்க என்னைக் கொஞ்சின போது அத்தனை பேரு வேடிக்கை பார்த்தாங்களே... இன்னிக்கு பார்த்தீங்களா?... அழுதுக்கிட்டு இருக்கோம்... யாரும் திரும்பிக் கூடப்பார்க்க மாட்டேங்கறாங்க...

பரமசிவம்: வருத்தப்படாதே மாலதி.... ஒரு காதல் கதைக்கு எப்படியும் க்ளைமாக்ஸ் சோகம்தான்னு பாரதிராஜா இலக்கணம் வகுத்துட்டாரு! நாமமட்டும் அதுல இருந்து தப்பிக்க முடியுமா?

மாலதி: எங்கப்பா பேசினதுக்கு எல்லாம் என்னை மன்னிச்சிடுங்க...

பரமசிவம்: சீ... சீ... நீ என்ன பண்ணுவே...? இன்னைக்கு உனக்கு என்ன ஆசையோ கேளு... வாங்கித் தரேன்... நைட் கரெக்டா ஒன்பது மணிக்கு இதே இடத்துல கடல்ல குதிச்சுச் சங்கமமாயிடுவோம்.

மாலதி: வேண்டாங்க... இந்த இடம் ரொம்ப ஆழம்னு சொன்னாங்க...

பரமசிவம்: அதுதான் நானும் யோசனைபண்றேன்... எங்கப்பாகிட்ட கூட ஜாடையா

---

திருநெல்வேலியில் ஒரு சுவரில் நான் கண்ட வாசகம்: ''தூக்கத்திலிருந்து எங்களை எழுப்பும் கொக்கரே, தூங்கும் இந்த நகராட்சியை எழுப்புவது எப்போது?''

—ஜெயின். சேகர்.



சொல்லிச் சம்மதம் வாங்கிட்டேன்... ஆனா உங்கப்பா இப்படிப் பேசுறாரே! வேற என்ன பண்ணலாம்...

மாலதி: ஏங்க... இப்படிச் செஞ்சா என்ன? நாம ஏன் சாகணும்?... பேசாம ஒரு போலீஸ் ஸ்டேஷன்ல போயி நம்ம காதலைச் சொல்லுவோம். இப்பவெல்லாம் போலீஸ்காரங்கதான் ஒழிஞ்ச நேரத்துல புரோகிதரா இருந்து, இந்த மாதிரி கல்யாணங்களை நடத்தறாங்களாம்..... பேப்பர்ல படிச்சிருக்கேன்...!

பரமசிவம்: அப்போ... முதலிரவு... லாக்-அப் ரூம்லயா நடக்கும்?

## காட்சி 5

இடம்: தர்மராஜன் வீடு. பாத்திரங்கள்: தர்மராஜன், லலிதா.

(பேப்பர் படித்துக் கொண்டிருக்கும் தர்மராஜன் உள்ளே திரும்பி லலிதாவைக் கூப்பிடுகிறார்.)

தர்மராஜன்: லலிதா... லலிதா...

லலிதா: (உள்ளேயிருந்து கண்ணைத் துடைத்துக் கொண்டே வருகிறாள்.) கூப்பிட்டீங்களா?

தர்மராஜன்: இப்படிச் சதா அழுதுகிட்டே இருந்தா ஓடிப்போன பொண்ணு வந்துருவாளா? நான் சொன்னதைச் செய்...


லலிதா: என்னைக் கொன்னு வேணும்னாலும் போடுங்க... என் கையால செய்யமாட்டேன்... பெத்த வயிறு எரியுதுங்க... நீங்க பிடிவாதம் பிடிச்சீங்க... வீட்டை விட்டே ஓடிட்டா மாலதி... அதைக் கொண்டாடறதுக்கு இன்னைக்கு பால் பாயசமும், ஸ்வீட்டும் பண்ணச் சொல்றீங்களே... தெய்வத்துக்கே அடுக்காதுங்க... நீங்க வேணும்னு அவளைத் தலை முழுகலாம்... ஆனா... ஆனா... தொப்புள் கொடி அறுத்துக் கீழே போட்டிருக்கேன். ஞாபகம் வச்சுக்குங்க... (அழுகிறாள்.)

தர்மராஜன்: அசடு... ஏன் ஒப்பாரி வைக்கிறே... நான் ஒண்ணும் மாலதியைத் தலை முழுகி உன்னைப் பாயசம் வைக்கச் சொல்லலே... இன்னைக்கு பொண்ணும், மாப்பிள்ளையும் நம்ம வீட்டுக்கு வர்றதாக ஆபீசுக்கு டெலிபோன் வந்தது... அதனாலதான்...

லலிதா: நீங்க... என்ன சொல்றீங்க...?. நிஜமாவா...?

தர்மராஜன்: ஆமா... லலிதா... நம்ம மாலதிக்கு போன செவ்வாய் கிழமையே திருவல்லிக்கேணி போலீஸ் ஸ்டேஷன்லே கல்யாணம் நடந்தாச்சாம்! இப்போ நட்சத்திர ஓட்டல்ல அவங்க தேன்நிலவு அனுபவிக்கிறாங்க... அம்மாவைப் பார்க்கணும்னு பொண்ணு பர்மிஷன் கேட்டா.. புறப்பட்டு வா... நானும் ஆசீர்வாதம் பண்றேன்னு சொல்லிட்டேன்... உடனடியா... விருந்து ஏற்பாடு பண்ணு.

லலிதா: ஏங்க... எனக்குத் தெரியாம தாலி கட்டிட்டு வீட்டுக்குள்ள நுழைஞ்சா காலை வெட்டிப்பிடுவேன்னு சொன்னீங்க... தலை கீழா மாறிட்டீங்களே...!



தினசரி வாழ்க்கையில் அமெரிக்கர்கள், ஏகப்பட்ட இயந்திரங்களையும், உபகரணங்களையும் பயன்படுத்துகின்றனர். அவை இல்லை என்றால்? அதை ஈடுகட்ட, ஒவ்வொரு அமெரிக்கருக்கும் 80 வேலைக்காரர்கள் தேவைப்படுவார்களாம்!

ஆதாரம்: 'மிர்ரர்'.

—ஆர். மார்க்கண்டன்.

தர்மராஜன்: லலி... பரமசிவத்தோட அப்பன் வெண்ணைக்கடை வேலாயுதத்தை எனக்கு ரொம்ப நாளாப் பழக்கம். அவன் ஒரு வரக் கஞ்சன். நான் அன்னைக்கே இவங்க காதலுக்குப் பச்சைக் கொடி காட்டியிருந்தா, அப்புறமா சம்பிரதாயமாப் பேசலாம்னு பேசி, சீர் வரிசை, வரதட்சிணை எல்லாம் எக்கச்சக்கமாப் பிடுங்கியிருப்பான்... அதுவும் இல்லாம, நம்ம பொண்ணு பேரில இந்தப் பையனுக்கு எத்தனை தூரம் பிடிப்பு இருக்குன்னு டெஸ்ட் பண்ணத்தான் என் மனசைக் கல்லாக்கிகிட்டு, நடிச்சேன்... அந்தப் பையன் யோக்கியன்னு தெரிஞ்சுதான் பொண்ணையும் பழகவிட்டேன்...

லலிதா: என்ன இருந்தாலும் நீங்க செஞ்சது சரியே இல்லீங்க...

தர்மராஜன்: நான் மனசாரக் காதலிச்ச பையன்... வரதட்சணை கொடுக்க முடியாம கல்யாணம் நின்னுப் போச்சன்னு.. அது எவ்வளவு கொடுமை... கண்ட இடத்துல கடனை வாங்கிக்கிட்டு, அப்புறம் காலம் பூரா கஷ்டப்படறதுக்கு இது எவ்வளவோ தேவலே... இன்னிக்கு நம்ம வீட்டுல அவங்களுக்கு கொடுக்கிற வரவேற்பு... கல்யாணத்தை விடச் சிறப்பா இருக்கும் பாரேன்... நான் போயி ரெண்டு மாலை வாங்கிட்டு வரேன்... நீ மத்த ஏற்பாடுகளைக் கவனி..

(தர்மராஜன் வெளியே போகிறார்.)

லலிதா: இவ்வளவு வருஷம் இந்த மீசையோட பழகி, அந்தத் துடிப்பு ஒரு நடிப்புன்னு என்னால புரிஞ்சிக்க முடியாம போச்சே...

(தர்மராஜன் போவதையே ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டு நிற்கிறாள் லலிதா.)

## சினிமாப் பாடகனாக முடியுமா?

'நான் பாடகனாக ஆசைப்படுகிறேன். அதற்கான ஆலோசனைகள் சொல்ல முடியுமா?' என்று ஆரம்பித்து இது சம்பந்தமான தமது கேள்விகளையும் இணைத்திருந்தார் கல்கி வாசகர் ஒலைக்குளம் வி. நாராயணமூர்த்தி.

இந்தக் கடிதத்தைப் பாடலாசிரியர், இசையமைப்பாளர், டைரக்டர் கங்கை அமரனிடம் தந்து அறிவுரை கேட்டபோது:

இன்றைய சூழ்நிலையில் பாடகனாய்ப் பிரபலமடைவது, சம்பாதிப்பது எல்லாமே கஷ்டம்தான். மெல்லிசைப் பாடகனாய், வர விரும்பினாலும், இசைக்கல்லூரி மூலமோ, தனிப்பட்ட முறையிலோ முதலில் கர்நாடக இசை சற்றுக் கொள்ள வேண்டியது அடிப்படைத் தேவை.

பாட்டுத் தொழிலில் கும்பல் அதிகமா என்று கேட்டால் என் பதில் 'ஆம்!' ஆனால் வாய்ப்புகள் குறைவு.

இன்றைக்கு ஃபீல்டு ரொம்ப வேகமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. யாருமே ரிஸ்க் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. பாபுலர் பாடகரையோ, பாடகியையோ போட்டால் எந்தவிதமான பிரச்னையுமின்றி முடிந்து விடும். டாப் பாடகரைப் போட்டால், ஒரு மணி நேரத்தில் முடிகிற ரெக்கார்டிங், புதுப் பாடகரைப் போட்டால் இரண்டுநாள் கூட இழுத்து விடும். இதற்கு ஆகிறசெலவு, பிரபல பாடகருக்குத் தரப்படுவதைவிடப் பல மடங்கு. புதுப் பாடகர்களுக்கு சான்ஸ் குறைவாய் இருக்கக் காரணமென்ன என்று மியூஸிக் டைரக்டரைக் கேட்டால், டைரக்டரைச் சொல்லுவார். டைரக்டர், தயாரிப்பாளரைச் சொல்லுவார். அவர் விநியோகஸ்தரைச் சொல்லுவார். அவர் ரசிகர்கள் மேல் பழிபோடுவார்.

பத்து, பதினைந்து பாடல்கள் பதிவானால், ஓரிரு பாடல்களே புதியவர்களுக்குத் தரப்படுகிறது. இங்கே புதியவர்கள் என்பது அவ்வளவு பாப்புலர் இல்லாத பாடகர்களைக் குறிக்கிறது. முற்றிலும் புதியவர்கள் என்பது ரொம்ப ரொம்பக் குறைச்சல்!

ஒருநாள் தீபன் சக்கரவர்த்தி என் நிகழ்ச்சியில் பாடினார். "இளையராஜாவிடம் அறிமுகம் செய்துவைக்கிறேன். நாளைவாருங்கள்" என்றேன். வந்தார். அண்ணனிடம் அறிமுகம் செய்ததும், ஒரு கஸல் பாடினார். ரொம்பப் பிடித்து விட்டது அவருக்கு. மறுநாளே பாட வாய்ப்புத் தந்து விட்டார்.

ஆனாலும் என்னதான் திறமை இருந்தாலும் நேரம் என்று ஒன்று வரவேண்டும் என்று நான் நம்புகிறேன். நாங்கள், அந்தக் காலத்தில், டேப்பில் பாட்டுக்களைப் பதிவு செய்து வைத்துக் கொண்டு, ஏறி, இறங்காத படக்கம்பெனிகள் இல்லை; பார்க்காத டைரக்டர்கள் இல்லை. ஒருத்தரும் சான்ஸ் தரவில்லையே!

வறுமையின் பிடியில் நாங்கள் பட்ட கஷ்டங்கள் அப்பப்பா! நாங்கள் மெட்ராஸில்

# கங்கை அமரன் அறிவுரை



ஏதோ, ரொம்ப சௌகரியமாய் இருப்பதாக அங்கே கிராமத்தில் (பெயர் பண்ணைபுரம்) அம்மா நினைத்துக் கொண்டிருப்பார். இங்கே எத்தனை இரவுகளைப் பிளாட்பாரங்களில் கழித்திருக்கிறோம் தெரியுமா? ஊரிலிருந்து யாராவது வந்தால் அம்மா கொடுத்தனுப்புகிற எள்ளு உருண்டைகளை மட்டுமே சாப்பிட்டுக் கடத்திய நாட்கள் பல. இரண்டு ரூபாய்க்கு, ஒரு எடுப்புச் சாப்பாட்டை எடுத்து வந்து, நாங்கள் நாலு பேரும் (நான், இளையராஜா, பாரதிராஜா, பாஸ்கர்) பங்கு போட்டுச் சாப்பிட்ட அந்த நாட்களை மறக்கவே முடியாது.

எங்களுக்கு நேரம், பஞ்சு அருணாசலம் உருவத்தில் வந்தது. அன்னக்கிளி, வசந்தத்தை அழைத்து வந்தது.

என் பெரிய பையன் (பிரேம், வயது 9) இசையில் ஆர்வம் கொண்டிருக்கிறான். இப்போது மிருதங்கம் சற்றுக் கொள்கிறான். 'நன்றாய்ப் பாடக் கற்றுக் கொள். ஆனால் முழு நேரப் பாடகனாய் வர ஆசைப்படாதே' என்பதே அவனுக்கு என் அட்வைஸ்!

சந்திப்பு: எஸ். சந்திரமௌலி

# சேலையே வேணும்!

வெயிலம்மையின் கோபம் வேலுவுக்குப் புரியவில்லை. பத்து வயது மகள் சாமந்திப்பூவிற்குப் பாவாடை சட்டை எடுத்து வந்தது முதல் பொரிகிறாள்.

கடுகுகூட இப்படி வெடிக்காது.

ஆனால் வெயிலம்மை வெடிக்கிறாள்.

திண்ணை மீது அமர்ந்து பீடி ஒன்றைப் பற்ற வைத்தபடியே, யோசனையுடன் தலையைச் சொறிந்து விட்டுக் கொள்ளும்போதே உள்ளிருந்து சரவெடிகள் வெடிக்கின்றன.

''சொன்னா ஒரு மனுஷனால புரிஞ்சுக்க முடியாமலா போயிடும். வெலாவாரியாய் வௌக்க வேணுமாக்கும். தீவாளிக்குத் துணி எடுக்கப் போகும் போதே சொல்லத்தானே செய்தேன். நம்ம சாமந்திப்பூவுக்கு இனிமேல் பாவாடை சட்டை வேணாம். சீலை தான் எடுக்கணும். அம்பாசமுத்திரம் போனா சீலை எடுத்துட்டு வாங்கன்னு மறுகி மறுகிச் சொன்னேனே. மனுஷன் காதிலயே வாங்காமப் போயிட்டாரே. தீவாளிக்குப் பாவாடை, சட்டைன்னு வாங்கி வந்துட்டார். தொலையுது அப்படின்னு நினைச்சிட்டு, இப்ப நான் சுருக்கப்பிள்ளையூர் அக்காக்கிட்டே இருபது ரூபாய்க் கடன் வாங்கிக் குடுத்துச் சீலை எடுத்தாரச் சொன்னால் இப்பவும் பாவாடை சட்டையோட வந்து நின்னா என்ன அர்த்தம்?'' பொரிந்தாள் வெயிலம்மை.

எரிச்சலாக இருந்தது வேலுவிற்கு.

சாமந்திப்பூ பத்து வயதுச் சிறுமி. பாவாடை சட்டை போட்டாலே போதும். தாவணி கூடத் தேவையில்லை. அப்புறம் ஏன்



அவளுக்குப் புடவை எடுக்கச் சொல்கிறான் என்று யோசனை பண்ணினான்.

எனவேதான் மறுபடியும் பாவாடை, சட்டைக்கே துணி எடுத்து வந்தான்.

இப்போது வெயிலம்மை சாடுகிறாள்.

பத்து வயதுச் சிறுமிக்கு ஐந்து மீட்டர் புடவை கட்டினால் எப்படி இருக்கும்?

திருஷ்டிப் பொம்மை போல் இருக்கும்.

தாவணியே தேவைப்படாத சிறுமிக்குப் புடவை ஏன்?

அவனிடம் கோபம் பிறந்தது.

"இப்ப ஏன் இவ்வளவு ஆத்திரம் உனக்கு? சின்னப் பிள்ளைக்கு சேலை எதுக்கு? அவளே தேஞ்சு தேஞ்சு போய் இருக்கா. உருவமும் சின்னது தான். மரப்பாச்சி போல இருக்கிறா. அவளுக்குப் போய்ச் சேலை எடுத்தாரேன்னு அலர்றியே ஏன்?" கேட்டான்.

"ஏன் எதுக்குன்னு ஏழு கேள்வி கேளுங்க. சொன்னதை மட்டும் செய்யாதீங்க."

சிரித்தான்.

"ஒங்களுக்கு வேடிக்கையாய் இருக்காக்கும். சிரிங்க... சிரிங்க... என்னடா ஒரு மனுஷி மறுகி மறுகிச் சொல்றாளே, சொன்னதைக் கேட்போம்னு கிடையாது. சிரிப்பாணி அள்ளிக்கிட்டுப் போகுது" என்றபடி ஒரு டம்ளரில் சூடான டீயைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

இரசித்துப் பருகலானான்.

வரப்பு வெட்டிவிட்டு வந்த களைப்பிற்கு அந்த டீ இதமாக இருந்தது.

போன வாரத்தில் வேலையே கிடைக்கவில்லை. இப்போது பருவமழை துவங்கி விட்டதால் வயல் வேலைகள் கிடைக்கத் துவங்கியிருக்கின்றன.

வெயிலம்மை நாற்று நடப் போகிறாள்.

நான்காம் வகுப்பில் மூன்று வருடங்கள் தங்கிய சாமந்திப்பூ வீட்டோடு ஒதுங்கிக் கொண்டாள்.

கைக்குழந்தையைப் பார்க்க, விறகு பொறுக்க, வீடு பெருக்க, ஏனம் கழுவ என்று உதவிகள் பண்ணலானாள்.


மறவாதீர்கள்!

இன்றிரவு செப்டம்பர் 27ல 9-30க்கு



கல்கி வழங்கும்

நேரம் நல்ல நேரம்

விவிதபாரதி சென்னை, திருச்சி வானொலி ஒலிபரப்பு

பூர்ணம் விசுவநாதன் அளிக்கும்



நடிப்புக்குப் பின்னால் சில நாடகங்கள்

ஒவ்வொரு விநாடியும் ரசித்து சிரித்து மகிழலாம்

பிரதி வியாழன் இரவு 9-30க்கு இந்நிகழ்ச்சியைக் கேட்கத் தவறாதீர்கள்!

தயாரிப்பு: எஸ். வி. ரமணன்

## அருள்வாக்கு

ஸ்வயம்பாகத்தை நான் சொல்வதற்குக் காரணங்கள் பல இருக்கின்றன. நாமே சமைத்துக் கொள்ளும் போது தான் சமைக்கிற நேரம் பூராவும் நாம் தெய்வ ஸம்பந்தமாகவே நாமாவைச் சொல்வது அல்லது ஸ்தோத்திரமோ ஸுக்தமோ சொல்வது என்று வைத்துக்கொண்டு பதார்த்தத்திலுள்ள ஸாத்விகமாக உள்ள அந்த ஆஹாரம் அதோடு ஸம்பந்தப்படும் மனுஷ்யாளின் தப்பான எண்ணத்தால் கெட்டுப் போகாமல் மேலும் ஸாத்விகமாக ஆகும்படி செய்து கொள்ள முடியும்.

அடுப்பிலே உலை வைத்து விட்டு அன்னம் பக்குவமாகிறவரை அதன் பக்கத்திலேயே நின்று பார்த்துக் கொண்டுதான் இப்படி நாமாவோ ச்லோகமோ சொல்லிக் கொண்டிருக்கணும் என்பதில்லை! அரிசியைக் களைந்து போட்டுவிட்டு நாம் பாட்டுக்கு ஜபமோ பாராயணமோ பண்ணிக் கொண்டிருக்கலாம். இந்த ரஸம் தானே அன்ன ரஸத்தில் சேரும். அப்புறம் கால் மணியோ அரை மணியோ எப்போது அது பக்குவமாகுமோ அப்போது போய் இறக்கி வைத்துக் கொள்ளலாம். ஆனால் 'வெந்திருக்குமா, வெந்திருக்குமா' என்று அதுவே ஜபமாக உட்கார்ந்திருக்கக் கூடாது! ஆரம்பத்தில் அந்த எண்ணம் வந்து கொண்டுதானிருந்தாலும் நாளா வட்டத்தில் தானாக ஒரு 'டயம் ஸென்ஸ்' உண்டாகி, அந்த நினைவு இல்லாமல் கால் மணியோ அரைமணியோ ஜபத்திலேயே கான்ஸென்ட்ரேஷனோடு இருக்க முடியும்.

பதார்த்த சுத்தியும் சமைக்கும்போது பகவத் ஸ்மரணத்தால் உண்டான சுத்தியும் சேர்ந்த ஆஹாரத்தை அப்புறம் பகவானுக்கு நைவேத்தியம் பண்ணி இன்னம் சுத்தமானதாக ஆக்க வேண்டும். கடைசியில் சாப்பிடும் போது 'கோவிந்த, கோவிந்த' என்று சொல்லிக் கொண்டே சாப்பிடணும். "மௌனேன போக்தவ்யம்" — பேசாமல் சாப்பிட வேண்டும் என்பது விதி. பேசாமல் என்றால் 'அதைப்போடு, இதைப் போடு' என்னாமல், எது இலையில் விழுகிறதோ அதைச் சாப்பிட வேண்டுமென்று அர்த்தம். மனஸுக்குள் கோவிந்த நாமோச்சாரணத்துடன் இப்படி போஜனம் பண்ண வேண்டும். கோவிந்த ரஸமாக உள்ளே போகிற அன்னத்தை, அங்கே ஜாடராக்னியாக இருக்கும் அவனே ஜீரணிந்து தேஹ புஷ்டியோடு, சித்த சுத்தியும் அருள்வான்.

—ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்



எனவே அவளின் படிப்பின் மீது எவருக்கும் அக்கறை இருக்கவில்லை.

காலி டம்ளரை எடுத்துக் கொண்டு கோபம் மாறாமல் அவனை முறைத்துவிட்டுத் திரும்பினாள்.

அவன் மீண்டும் சிரிக்கவே அவளிடம் கோபம் பொங்கியது.

"இப்ப எதுக்குச் சிரிப்பாணியும் சிரிப்பாணியும்? எரிச்சல் வருது!" என்று பொரிந்தாள்.

"சாமந்திப்பூவுக்கு சேலை தான்வேணும்னு நீ கேட்டது ஏன்னு புரிஞ்சு போச்சு எனக்கு!" என்றான்.

"என்ன புரிஞ்சு போச்சு?"

"ஒனக்கு ஆசை வந்துருச்சு."

"என்ன ஒளர்றீங்க?"

"விதவிதமாய் உடுத்துப் பார்க்கணும்கிற ஆசை வந்தாச்சு உனக்கு."

"ஆமா, நான் பதினாறு வயசுக்குமரிப் பொண்ணு. நீங்களும் பட்டுப் புடைவையா வாங்கிட்டு வந்து அடுக்கப் போறீங்க. நான் வேளைக்கு ஒண்ணாய் உடுத்திக்கிட்டு உலாத்தப் போறேன்."

"அப்படின்னு நீ... ஜவுளிக் கடைக்காரனுக்கில்ல வாக்கப்பட்டிருக்கணும்?"

"ஆமா... சொல்லுங்க..."

"சாமந்திப் பூவுக்கும் சேலையாய் எடுத்தாச்சு, அதுகளை நீயும் உடுத்தலாம்னு ஆசைப்படுறே. அவளோட பாவாடைகளை உடுத்த முடியாதே. அதானே..." என்று கேட்டு நமட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"ஆமா... அப்பிடித்தான். வெளங்காத மனுஷருக்குப் புத்தி இப்படிப் போகுதே. இப்ப எனக்கு அப்பிடி ஆசைகள் இல்லே."

"பின்னே... சின்னப் பிள்ளைக்குச் சேலை எதுக்காம்?"

அவளின் முகம் தீவிரப்பட்டது.

அக்கம் பக்கம் ஒரு முறை பார்த்தாள். பிறகு தாழ்வான குரலில்,

"இப்ப பருவ மழை ஆரம்பிச்சாச்சு. விவசாய வேலைகள் துவங்கிடுச்சு. நாற்று நடப் போனால் பத்து ரூபாய் சம்பளம். நாம சாமந்திப்பூவையும் கூட்டிக்கிட்டு போகலாம். பாவாடை சட்டையிலே போனால் சின்னப் பிள்ளைன்னு அரைச் சம்பளம் போட்டுருவாங்க. சேலையைக் கட்டிவிட்டால் முழுச் சம்பளம் தருவாக. கணையாய்ப் பத்துரூபாய் தருவாக."

அவள் கூறி முடித்தாள்.

அவளது கணக்கின் பரிமாணம் இவனுக்கும் புரியலானது.

# ரூ 5000 வித்தியாசத்தில்...


**வே**லாண்மைப் பல்கலைக் கழகக் குடியிருப்பை நோக்கி மருதமலை ரோடில் டாக்ஸி...

டாக்ஸியில் நான், எனது அம்மா, ஆறே மாத உறவான என் இளம் மனைவி ராதா.

40 கி. மீ. வேகத்தில் காற்று 'விண்டோ' வழியாக வந்து தழுவியது.

இரவில் தர்பாரில் குளிரின் ஆட்சி.

எனது சித்தப்பா மகளின் திருமணத்திற்காக நாங்கள்...




வீட்டிற்கு முன் டாக்ஸி வந்து நின்றது.

மரங்களிலெல்லாம் வண்ண வண்ண ஒளிக் கனிகளாய் மின்சார பல்புகள்.

துணியாலேயே 'டெண்ட்' போல அமைக்கப்பட்ட பந்தல்.

ஸ்டீரியோபோனிக் ஸ்பீக்கர்களில் மேற்கத்திய இன்னிசை.

சூழ்நிலை மனத்திற்கு ரம்மியமாக இருந்தது.

வந்திருந்த உறவினர்களின் கடலில், சிறு துளியாய் நாங்களும் கலந்தோம்.

அங்கே...

பலவகை மலர்க் குவியலின் நடுவே தனித்து, எடுப்பாய் விளங்கும் ரோஜாவைப் போல ஒருத்தி...

'இப்படியொரு அழகா!'

'எனக்குத் திருமணம் ஆகாமலிருந்தால், வரப்போகிறவள் இவளை விட அழகானவளாய் இருப்பாள் என எண்ணி இவளது அழகை ரசித்து, பின் மறந்து விடலாம். ஆனால் நமக்கும்தான் ஒருத்தி வந்து வாய்த்திருக்காளே... ம்!'

வெளிவந்த வெப்பப் பெருமூச்சு குளிர்க் காற்றை உஷ்ணமாக்கியது.

• • • •

**வி**டியல் நேரம்.

திருமண காரியங்கள் துவங்கி விட்டன.

மீண்டும் அந்த ரோஜா... அன்றே மலர்ந்த மலராய்...

ஒவ்வொருவர் கூப்பிடும் குரலுக்கும் ஓடி, சிறிது கூட முகம் சுளிக்காமல் சிரித்த முகத்துடன்...

'யார் இவள்?'

அம்மாவிடம் கேட்கலாம் என எண்ணிய போது நல்லவேளையாக அங்கு ராதா இல்லை.

''அம்மா! அதோ... அந்தப்பொண்ணு... யாரும்மா அது?''

''அவளா ... அவ உங்க சித்தப்பாவுக்குப் பெண்ணெடுத்த வகையிலே சொந்தம். அவளைக் கூட உனக்குப் பார்த்தோமே.''

''எனக்குப் பார்த்தீங்களா? அப்புறம் ஏன் விட்டுட்டீங்க?'' காரணத்தை அறியும் அவசரம் கேள்வியில்.

''நகை, சீரெல்லாம் செய்யறேன்னுங்க. ஆனா ரொக்கமா கேட்ட பணம் பத்தாயிரம் தர முடியாது... ஐயாயிரம்தான் தருவோ முன்னாங்க... அதனாலே வேண்டாம்னு சொல்லிட்டோம்.''


'மத்ததும்... கேட்டதெல்லாம் கொண்டு வந்தவளுக்கு அழகோ, அனுசரித்துப்போகிற குணமோ கொஞ்சங்கூட இல்லையே. வரதட்சணையாலே பெண் மட்டுமில்லே ஆணும் தான் பாதிக்கப்படறான். ஐயாயிரம் ரூபாய் வித்தியாசத்திலே என் நிம்மதி, சந்தோஷம் எல்லாத்தையும் இழந்துட்டேனே... ச்சே!'

**PHILIPS**

# An exciting new composition. Arrangement by Philips.



The Philips Rack System is a perfectly compatible, technically superior and an aesthetic combination that brings you pure and powerful sound.



## 300 watts of undistorted power

That's AH 824. One of the best amplifiers available in the country today. With the most sophisticated features – like wide frequency response from 30 Hz to 20 kHz. Active tone control.

### The Electronic Turntable

AF 834. Stroboscope with pitch control. Electronic motor control. And auto return.

### The Dolby Deck

F 6121. The cassette deck with servo touch and metal compatibility.

### 3 way 3 Speaker bass-reflex system

AH 426 speakers with five segment LED bar graph to indicate power.

If music really means something to you, you've to listen to the Philips Rack System. Walk into the nearest Philips dealer's showroom and ask for a demonstration.

**Philips – the trusted Indian household name for over fifty years**

OBM/17 87

# மூலக் கனல்

நா. பார்த்தசாரதி



## அத்தியாயம் 26

அவனுடைய ஆவலையும் பரபரப்பையும் தாமாகப் புரிந்துகொண்டு சர்மாவே சொன்னார்: ''கொஞ்சம் பொறுத்துக்குங்கோ! உங்க மகன் ராஜாவுக்கு இன்னும் உங்க மேலே இருக்கிற ஆத்திரம் தணியலே... உங்களைப் பார்க்க வரமாட்டேன்னுட்டான். நானே கொஞ்சம் கொஞ்சமாப் பேசி அவன் மனசை மாத்தப் பாக்கறேன்.''

இதைக் கேட்டுத் திருவுக்குமிகவும்ஏமாற்றமாயிருந்தது. ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவன் சர்மாவைக் கேட்டான்: ''என்னைப் பார்க்கப் பிரியப்படாட்டி நாம வற்புறுத்த வேணாம். அது போகட்டும். ஆனா 'எழில்ராஜா' ஏன் முன்னேமாதிரிப் பத்திரிகைகளிலே அதிகம் எழுதறதில்லே? இவ்வளவு மாறுதல்கள் எல்லாம் நடந்திருக்கு. என்னிடமிருந்து தொழில்வளர்ச்சி இலாகா பறிக்கப்பட்டு நான் இலாகா இல்லாத மந்திரியாயிருக்கேன். எனக்கு சவாம் போட்டுக்கிட்டிருந்த தாண்டவராயன் புது மந்திரிக்கு சவாம் போடப் போயிட்டாரு. நான் ஆஸ்பத்திரியிலே படுத்த படுக்கையா, இப்படி விழுந்து கிடக்கறேன். இதை எல்லாம் பத்தி ஒண்ணுமே எழுதாமே எப்படி அவனாலே பேனாவை வச்சுக்கிட்டுச் சும்மா இருக்க முடியுதுன்னு தான் எனக்குப் புரியலே?''

இந்தக் கேள்வியை அவனிடமிருந்து எதிர்பார்த்திராத சர்மா ஒரிரு கணங்கள் பதில் சொல்லத் திணறிப் போனார். ஆனால் அடுத்த சில விநாடிகளிலேயே சமாளித்துக் கொண்டு, ''கடத்தல், கொலை மிரட்டல் எல்லாம் வந்துட்டதாலே கொஞ்ச நாளைக்குப் பத்திரிகையிலேயே எதுவும் எழுதாம இருக்கச் சொல்லி நண்பர்களே அவனுக்கு இப்ப அட்வைஸ் பண்ணியிருப்பாங்கன்னு தெரியுது''— என்றார். அவருடைய இந்தப் பதிலில் சற்றே பூசி மெழுகுவது போன்ற தொனி இருந்ததை உணர்ந்த திரு, ''இது நீங்களாச் சொல்ற சமாதானமா? அல்லது அவனே இப்படிச் சொன்னானா?'' — என்று அவரை உடனே வினவினான். சர்மா மறுபடியும் சமாளித்துக் கொள்ளத் திணறினார். ''நீங்க சொல்ற மாதிரி எதுவும் எழுதாமல் சும்மா இருக்கிறது அவனுக்கும் பிடிக்கலைதான். ஆனால் நண்பர்களும் பத்திரிகை நிர்வாகமும் அவனை வற்புறுத்தி கொஞ்ச நாளைக்கு எழுத வேண்டாம்னு சொல்லியிருக்காங்களாம்.''—

''என்னைப் பத்தி என்னென்னவெல்லாம் சொன்னான்?''

சர்மா நேரடியாக மறுமொழி கூறாமல் பேச்சை மாற்ற முயன்றார். மகன் தன்னைப் பற்றிக் கடுங்கோபமும், ஆத்திரமும் உள்ளவனாயிருக்க வேண்டும், தன்னைத் தாறுமாறாகத் திட்டியிருக்க வேண்டும், அதனால் தான் சர்மா பேச்சை மாற்றுகிறார் என்பதாகப் புரிந்து கொண்டு அவனும் அதை அவ்வளவில் விட்டு விட்டான். சர்மாவை மேலும் தொந்தரவு செய்யவில்லை.

''எப்படியோ போகட்டும்! அவன் நல்லா இருந்தாச் சரிதான்!''— என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தான் திரு. மேற்கொண்டு அங்கே தங்கினால் திரு மறுபடியும் எழில்ராஜாவைப் பற்றிய உரையாடலைத் தன்னிடம் ஆரம்பித்து விடுவானோ என்ற பயத்தினால் சர்மா மெல்ல அவனிடம் சொல்லி விடைபெற்ற பின் அங்கிருந்து நழுவினார்.

திருவுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருந்தது. வாழ்வில் இது வரை இத்தனை பெரிய தனிமையையும் தளர்ச்சியையும் அவன் உணர்ந்ததேயில்லை. தான்செய்த தவறுகளையும் — செய்யப்போகிற தவறுகளையும் நியாயப்படுத்தி மக்களை நம்ப வைக்கப் போதுமான துணிவு இருக்கிற வரைதான் ஒருவன் சரியான அரசியல்வாதி. 'தவறு செய்து விட்டோமா?' — என்ற பயமும், பதற்றமும் குற்ற உணர்வும் என்றைக்கு முதல் முதலாக ஓர் அரசியல்வாதிக்கு ஏற்படுகிறதோ அன்றே அந்த விநாடிமுதல் அவன் அரசியலுக்குத் தகுதியிழந்து ஆன்மீகவாதியாகத் தொடங்கிவிட்டான் என்று பொருள்' — என்பதாகத் தானே பலரிடம் பலமுறை அரசியலுக்கு இலக்கணம் சொல்லியிருப்பதை இப்போது நினைவு கூர்ந்தான் திரு. தன்னுடைய அந்த இலக்கணப்படி இப்போது தானே ஆன்மீகவாதியாகத் தொடங்கி விட்டோமோ என்று திருவுக்குத் தோன்றியது. செய்த தவறுகளுக்கு உடனே வருந்தி நிற்கிற மனமும், மேலே செய்ய வேண்டிய தவறுகளைச் செய்யத் தயங்கி நிற்கிற குணமும் உள்ளவன் அரசியலில் நீடிக்க முடியாது என்பது திருவின் நீண்ட காலத் தத்துவமாயிருந்தது. 'அரசியல்வாதி தோற்பதின் அடையாளங்களில் முதன்மையானது கழிவிரக்கம்தான்' - என்பதை உறுதியாக நம்பியவன் திரு. கட்சியின் அடிமட்டத்துத் தொண்டர்களிடமும், அமைப்புக்களிடமும் சரியான பிடிமானம் வைத்திருந்த தான் ஏன் இன்று இப்படி ஆனோம் என்று சிந்தித்த போது அவனுக்கே வியப்பாகத் தான் இருந்தது. தோல்வியின் அடையாளமான கழிவிரக்க உணர்வு தன்னிடம் எப்போது எந்தக் காரணத்தால் நோயாகப்



பற்றியது என்பதை இப்போது அவனாலேயே கண்டுபிடிக்க முடியவில்லை. பாவ புண்ணிய உணர்வு, நல்லது கெட்டது பற்றிய தராதரங்கள் நியாய அநியாயம் பற்றிய வித்தியாசம் எல்லாம் யாரிடம் உண்டோ, அவன் சாமியாராக இருக்கலாமே ஒழிய அரசியல்வாதியாக இருக்க முடியாது—கூடாது என்று தீர்மானமாக நம்பியவர்களில் ஒருவனை திரு இன்று பாவபுண்ணியம், நல்லது கெட்டது, நியாய அநியாயம் எல்லாவற்றையும்பற்றி நினைப்பதைத் தவிர்க்க முடியவில்லை. மேல்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கிற இளைஞர்கள் சாராயப் புட்டியும் கையுமாக அலைந்தார்கள். ஒழுக்கமும், கட்டுப்பாடும் சமூகத்தின் எல்லா மூலைகளிலும் உடைந்து சிதறிப் போயிருந்தன. கள்ளுக் கடைகளிலும் சாராயக் கடைகளிலும் போலத் தியேட்டர்களிலும் கூட்டங்கள் பொங்கி வழிந்தன. ஆட்சி நடத்தப் பணம் தேவை என்று கள், சாராயக் கடைகளைத் திறந்து விட்ட

'புண்ணியம்' தங்களுடையது தான் என்பது திருவுக்கே நினைவு வந்தது. இதில் மூதறிஞரின் அறிவுரையைக் கூடத் தாங்கள் பொருட்படுத்தவில்லை என்பதும், ஞாபகம் வந்தது. பொருளாதாரப் பிரக்ஞையற்ற திட்டங்களால் அரசு வருமானம், இட்ட ஒதுக்கீடுகள் எல்லாம் தாறுமாறாகப் போன காரணத்தால் அரசு வருவாயைப் பெருக்க மதுவிலக்கை நீக்குவதாக மக்களிடம் சொல்லிக்கொள்ள முடிந்தது. மதுவிலக்கு அமுலிலிருந்த காலத்து, அரசாங்கங்களில் இருந்த தொழில் வளர்ச்சி, மின்சாரத் திட்டங்கள், எதுவும் தங்கள் ஆட்சியில் இல்லை என்பதும் புரிந்தது. மதுவிலக்கு அமுலிலிருந்ததால் கள்ளச் சாராயப் பேர்வழிகளாகவும் நீக்கப்பட்டால் கள், சாராயக் கடைகள் வைக்கவும் கட்சிக்காரர்களுக்குச் சலுகைகள் கிடைத்திருந்தன. தியேட்டர்கள் கட்டுவதற்குத் தாராளமாகக் கடன் ஊக்கம் எல்லாம் தரப்பட்டன. சாராயக் கடைகளையும், தியேட்டர்களையும் தவிர வேறு கனரகத் தொழில்களோ, மின்சாரத் திட்டங்களோ தங்கள் ஆட்சியில் அரை அங்குலம் கூட முன்னேறவில்லை என்பது இப்போது திருவுக்கே புரிந்தது. 'குரங்கு கைப்பூமாலை போல் ஆட்சி அதிகாரங்கள் சீரழிந்து உருக்குலைந்து விட்டதாக' எதிர்க்கட்சிகள் பலகாலமாகக்

குறை சொல்வது நிஜம்தானே என்று இப்போது திருவுக்கே உறைக்க ஆரம்பித்திருந்தது. உழைப்பில் நம்பிக்கையும், கட்டுப்பாடும், தேச பக்தியும் ஒழுக்கமும் இல்லாமல் மேனு மினுக்கியாக ஓர் இளம் தலைமுறை உருவாவதற்குத் தன்னைப் போன்றவர்கள் மூல காரணமாயிருந்து விட்டோமோ என்று எண்ணிய போது திருவுக்கே உடல் பதறி நடுங்கியது. பயிர் செய்வதற்கான அருமையான நன்செய் நிலங்களில் வெறும் களைகளை விதைத்து வளர்த்து அறுவடை செய்து கொண்டு விழலுக்கு நீர்ப்பாய்ச்சி மாய்கிறோமா என்று அவனுக்கே பயமாயிருந்தது.

எதிலும் மனத்தெளிவற்றுத் திரிகிற இந்த இளம் தலைமுறையினரின் இடையே தான் தன்னுடைய மகள் தெளிவாகவும் திட்டமாகவும் உருவாகியிருக்கிறாள் என்று நினைக்கும் போது பெருமிதமாக இருந்தது. அவள் தன்னுடைய முகாமில் தனது நிழலில் வளராமல் தன் மைத்துனனால் தனக்கு எதிரான முகாமில் வளர்க்கப்பட்டது தான் தன் மகளின் தெளிவுக்கும் துணிவுக்கும் காரணம் என்பது புரிந்தது. இந்த இளம் வயதில் எதிர்க்க வேண்டியவையும், எதிர்க்க வேண்டியவர்களும் யார், ஆதரிக்க வேண்டியவையும் ஆதரிக்க வேண்டியவர்களும் யார் என்பது பற்றி எல்லாம் தன் மகளுக்கு ஒரு தீர்மானம் இருப்பதே பெரிய விஷயங்களாகத் திருவுக்குத் தோன்றின. எந்தத் தீர்மானமும் இல்லாத விடலைத் தனமான இளம் தலைமுறையைத் தங்களைப் போன்றவர்கள் உருவாக்க முயன்றும் களைக்கு நடுவே தவறி முளைத்த பயிராகத் தன் மகளைப் போன்றவர்களும் உருவாகியிருப்பது பெருமையளிப்பதாயிருந்தது. இந்நிலையை எதிர்ப்பதற்கு வெறியூட்டப்பட்ட இளம் தலைமுறை படிப்பதையே எதிர்க்கிற அளவு வெறியேறி நிற்பது புரிந்தது. ஐ. ஏ. எஸ். போன்ற அகில இந்தியத் தேர்வுகளில் தேர்வு பெறுகிறவர்களின் எண்ணிக்கை குன்றித் தமிழ்நாடு பதினைந்தாவது இடத்துக்குக் கீழிறங்கியது. தொழில் வளர்ச்சி முன்னேற்றத்தில் பல மாநிலங்களை விடப் பின்னுக்குப் போயிருந்தது. ஒரு மொழியின் மேல் வெறுப்புக் கொண்ட மாணவர்கள் எந்த மொழியையுமே சரியாகக் கற்கவில்லை. அவ்வப்போது, அரசியல் கட்சிகளால் கோபமூட்டப்பெற்றுப் பொதுச் சொத்துக்களான பஸ்கள், ரயில்கள் போஸ்டாபீஸ்களுக்குத் தீமூட்டி அழிக்கக் கற்றுக் கொண்டிருந்தார்கள். கல்லூரிகளும், கல்வி நிலையங்களும் நடைபெறாத நாட்களுக்காக மகிழ்ந்து — நடைபெறும் நாட்களுக்காக வருந்தினார்கள். பெண்கள் தெருவில் நடமாட முடியாதபடி அவர்களைச் சீண்டுவதற்குச் சினிமாவும் பத்திரிகைகளும் அவர்களுக்குப் பயிற்சியளித்திருந்தன. சாதியை ஒழிக்கும் தங்கள் முயற்சியில் சாதி உணர்வு பலமாக விசுவரூபம் எடுத்திருந்தது.

திரு இவற்றை எல்லாம் பின்முகமாகத் திரும்பிப் பார்த்தான், சிந்தித்தான். பிரஷர் அதிகமாகி உடல் நிலை மேலும் கெட்டது. அன்று மாலை உதவியாளன் கன்னையா இரகசியமாக ஒரு பத்திரிகையைத் திருவிடம் கொண்டு வந்து கொடுத்தான். அது திருவின் இயக்கத்தைச் சார்ந்த— ஆனால் சமீப காலத்தில் திருவுக்கு எதிரிகளாக மாறியிருந்த சிலரால் நடத்தப்படும் பத்திரிகை.

ஏராளமான லஞ்ச ஊழல் புகார்களுக்கு ஆளான பின்பும், அதன் காரணமாக இலாகா பறிக்கப்பட்டு இலாகா இல்லாத அநாமதேய மந்திரி ஆனபின்பும், சாகக்கிடக்கிற அளவு உடல்நிலை மோசமான பின்பும், பதவியை விட மனமின்றி அவன் ஒட்டிக் கொண்டிருப்பதாக அவனைக் கடுமையாக விமர்சித்திருந்தது அந்தப் பத்திரிகை. தன்னைச் சேர்ந்தவர்களே இப்படித் தனக்கு எதிர்ப்பைக் கிளப்புவது அவனுள் எரிச்சலூட்டியது. ரோஷம் வேறு கிளர்ந்தது. தலைமாட்டில் படுக்கையருகே கிடந்த ஒரு லெட்டர் பேட்டை எடுத்து ஆத்திரத்தோடு கட்சி மேலிடத்துக்கும் அண்ணனுக்கும் தனித் தனியே இரு கடிதங்களை எழுதினான் திரு. ''ஏற்கெனவே நான் கையெழுத்திட்ட வெள்ளைத்தாள் உங்களிடம் இருக்கிறது என்றாலும் அதிகப்படியான முன் ஜாக்கிரதையோடு இதை நான் எழுதுகிறேன். எனது உடல்நிலை மனநிலை காரணமாகக் கட்சியிலோ அமைச்சரவையிலோ எந்தப் பொறுப்பும் நான் வகிக்க இயலாதவனாக இருக்கிறேன். தயவுசெய்து என் இராஜிநாமாவை உடன் ஏற்று என்னை விடுவிக்கவும்'' — என்று கடிதங்களை எழுதி

### வித்தியாசமானவர்


அட்டையை அலங்கரிக்கும் குமாரி ராதா வெங்கடாத்ரி பி. ஏ. பொருளாதார மாணவி. கல்லூரி மழுக்காத பாட்மின்டன் ஆடும் இவருக்கு மிகப் பிடித்த பொழுதுபோக்கு ஓவியம் வரைதல். படிப்பிலும் படுகெட்டியான இவர் நேரம் கிடைக்கும் போது குரல் வளத்தையும் வளர்த்துக் கொள்கிறார். ''கர்நாடக இசை எனக்கு மிகவும் பிடிக்கும்'' என்கிறார்.

—வண்ணப்படம்: அனு.



## அடுத்த வாரம்

# வெளுத்து வாங்குகிறார் வலையப்பட்டி



### மேடையில் மட்டுமல்ல; பேட்டியிலும் கூட!

உறையிலிட்டு ஒட்டி உடனே கன்னையன் மூலம் உரியவர்களுக்குக் கொடுத்தனுப்பினான் திரு. அவனிடம் ஏற்பட்டிருந்த 'மெட்டமார்பஸிஸ்' — அதாவது உள்கருத்து மாற்றம் அப்போது அவனை வேறுவிதமாகச் செயல்பட விடவில்லை. கடிதங்கள் கிடைத்ததும் அண்ணனும், கட்சி மேலிடத்து ஆட்களும் தன்னை நேரில் சந்தித்துச் சமாதானப்படுத்துவதற்காக மருத்துவமனைக்கே உடன் தேடி வருவார்கள் என்று எண்ணியிருந்தான் திரு. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. அவனது பதவி விலகலை ஏற்றுக் கொண்டு விட்டதாகவும் அதுவரை ஒத்துழைத்ததற்கு நன்றி என்றும் கட்சிமேலிடமும், அண்ணனும் கொடுத்த பதில் கடிதங்களோடு திரும்பிவந்தான் கன்னையா.

இவ்வளவுக்கும் காரணம் எழில்ராஜாவின் காரசாரமான கட்டுரைகள்தான் என்பது புரிந்திருந்தும் இப்போது அவன் மேல் திருவுக்கு ஆத்திரம் வரவில்லை. தன்னுடைய செல்வாக்கையும், புகழையும் தரைமட்டமாக்கிய எழில்ராஜாவை ஆள் ஏவி விட்டுக் கொலை செய்ய முயன்ற திரு வேறு, இந்தத் திரு வேறு. வாழ்க்கையில் தன்னைப் போல் ஒரு தலைமுறையையே தவறான பாதைகளில் வழிகாட்டிச் சீரழிக்காமல் நேர்மையுள்ள துணிச்சல்காரனாகத் தனக்குத் தெரியாமல் தன் மகனாவது வளர்ந்திருக்கிறானே என்று பெருமையாயிருந்தது அவனுக்கு.

மறுநாள் காலைத் தினசரிகளில் திரு மந்திரி பதவியிலிருந்தும், கட்சியிலிருந்தும் ராஜிநாமாச் செய்துவிட்ட செய்தி பிரதானமாக வெளியிடப்பட்டிருந்தது. தொடர்ந்து இரண்டு மூன்று தினங்கள் பிரஷர் அதிகமாகி அவன் உடல்நிலை கெட்டது.

டாக்டர்கள் கன்னையனையும் சர்மாவையும் அழைத்து, ''இந்தப் பரபரப்பான சூழ்நிலையிலிருந்து இவரை ஒரு மாறுதலாக வேறு எங்காவது அழைத்துப் போய் ஓய்வு கொள்ளச் செய்வது நல்லது'' — என்றார்கள். சர்மாவும் கன்னையனும் மெதுவாக இந்த யோசனையைத் திருவிடமே கூறி அவன் அபிப்பிராயத்தைக் கேட்டார்கள். எழிலிருப்பிற்கே போகலாம் என்றான் அவன். வேறு புது இடமாக இருந்தால் நல்லதென்று அவர்கள் நினைத்தார்கள். அவனோ பிடிவாதமாக எழிலிருப்பிற்குத் தான் போக வேண்டும் என்றான். வேகமாகத் தொடங்கி, வேகமாக ஓடி ஒரு சுற்றுச் சுற்றி முடித்து விட்ட இந்த நிலையில் தன் வாழ்க்கையை எந்தத் தேரடியின் மைதானத்திலிருந்து தொடங்கினானோ அந்த இடத்தை அந்தப் பழைய நினைவுகளோடு ஒருமுறை போய்ப் பார்க்க வேண்டும் போலிருந்தது திருவுக்கு. எந்த மண்ணில் தளர்ந்து அடிபட்டு விழுந்திருந்த போது அந்த மண்ணின் ஜமீன்தாரைத் தனக்கு முன் கைகட்டி வணங்கிநிற்கச் செய்து பார்க்க வேண்டும் என்று அன்று சபதம் செய்தானோ, அந்தச் சபதம் இன்றுநிறைவேறிவிட்டது. ஆனால் அந்தச் சபத நிறைவு தனக்குள் மகிழ்ச்சியை உண்டாக்காமல் தோல்வியை உண்டாக்கியிருப்பதை அவனே உணர்ந்தான். எல்லா ஆசைகளையும் நினைத்தபடி நிறைவேற்றி முடித்துக் கொண்டபின்பும் உள்ளம் இன்னும் எதற்கோ குறைப்பட்டு நொந்து அழுதது. எதற்கோ தவித்தது. எதற்கோ ஏங்கியது. சர்மாவும், கன்னையனும் அவனுடைய பிடிவாதத்தை மறுக்கமுடியாமல் எழிலிருப்பிற்கு அவனை அழைத்துச் செல்லும் பயணத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். விமானத்தில் செல்ல முடிந்த பக்கத்து நகரம் வரை விமானப்பயணம், அப்புறம் ஒரு ஏ. சி. காரில் எழிலிருப்பிற்குப் பயணம் என்று ஏற்பாடாயிற்று. சர்மாவும், கன்னையனும் உடன் செல்வதென்றும் முடிவாகியிருந்தது. புறப்படும் தினத்தன்று மறுபடி சர்மாவைக் கூப்பிட்டுத் தன் மகன் எழில்ராஜாவைத் தானே நேரில் சென்று சந்திக்க முடியுமா என்று ஆவலோடு விசாரித்தான் திரு. சாக்குப் போக்குச் சொல்லிச் சமாளிக்க முடியாது போகவே முயன்று பார்ப்பதாக அவனிடம் கூறிவிட்டுச் சர்மா புறப்பட்டுப் போயிருந்தார்.

(தொடரும்)

**வழக்கு விவரங்கள்**



# எம்.ஜி.ஆர் Vs எஸ்.டி.எஸ்



## அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் திரு. எஸ். டி. எஸ். கட்சி ஆரம்பிக்கலாமா?

திரு. எஸ். டி. சோமசுந்தரம் தொடங்கியுள்ள புதிய கட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரையும், கறுப்பு வெள்ளை, சிவப்பு என மூவர்ணக் கொடியையும் பயன்படுத்துவதைத் தடை செய்யக் கோரி அ. இ. அ. தி. மு. க. வின் அமைப்புச் செயலாளர் திருமதி. சத்தியவாணிமுத்து, சென்னை சிடி சிவில் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்துள்ளார். இடைக்காலத் தடையுத்தரவும் பெறப்பட்டது. ஆனால் இடைக் காலத் தடையுத்தரவு பிறப்பிக்கக் கூடாது என வாதம் எழுந்தது.

இது சம்பந்தமாக மூத்த வழக்கறிஞரான என். சி. ராகவாச்சாரி அ.இ.அ.தி.மு.க. சார்பிலும், கோவிந்த சுவாமிநாதன் எஸ்.டி. எஸ். சார்பிலும் காரசார விவாதம் நடத்தினார்கள்.

### சத்தியவாணிமுத்து கூறும் காரணங்கள்:

- இது மக்களை ஏமாற்றும் முயற்சி. எஸ். டி. எஸ். ஸிற்கு மக்களிடையே செல்வாக்கு கிடையாது. ஏற்கெனவே மக்களிடையே செல்வாக்குப் பெற்று ஆளுங்கட்சியாக விளங்கும் அ. இ. அ. தி. மு. க. போலச் சாயலுடைய பெயரையும், கொடியையும் வைத்துக் கொண்டு பாமர மக்களை ஏமாற்ற முயலுகிறார்.
- தேர்தல்கள் நெருங்கும் தருணத்தில் இவர் இப்படிச் செய்தால் பாமர மக்கள் இரண்டு கட்சிக்கும் வித்தியாசம் தெரியாமல் குழம்புவார்கள்.
- அ. இ. அ. தி. மு. க். கொடியிலும் இதே மூவர்ணங்களே உள்ளன. கறுப்பும், சிவப்பும் இருப்பதோடு வெள்ளையில் அண்ணா உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. வெண்மை அண்ணா மற்றும் அண்ணா கொள்கைகளின் தூய்மையைக் குறிக்கிறது.

எனவே, அ.தி.மு. க. எனும் பெயரையும், கறுப்பு, வெள்ளை, சிகப்பு நிறம் கொண்ட கொடியையும் எதிர்வாதியான எஸ்.டி.எஸ். பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும்.

திருமதி சத்தியவாணி முத்துவின் இந்த மனுவை எஸ். எஸ். வரதாச்சாரி, சி. பி. பட்டாபிராமன், டி. எம். ரங்கராஜன் ஆகிய மூவரும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்கள்.

### வேட்டியும், புடவைகளும் வந்தன !

அந்தச் சமயத்தில் இவர்களின் கட்சி வர்ணங்களை நிரூபிப்பதற்காக அ.இ.அ.தி. மு.க. கொடி, மற்றும் கறுப்பு சிவப்புக்கரை இட்ட வேட்டி, புடவைகள் ஆகியவற்றைத் தாக்கல் செய்திருந்தார்கள். இதையொட்டி மூத்த வழக்கறிஞர் திரு. என். சி. ராகவாச்சாரி வாதம் செய்தார்:

''1972–ஆம் ஆண்டு தி.மு.க. விலிருந்து அ. இ. அ. தி. மு. க. பிரிந்த போது புதுக்கட்சிக்கு முதலில் 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' என்றே பெயரிடப் பட்டது. தேர்தல் சமயத்தில் பிராந்தியக் கட்சியாக இல்லாமல் அகில இந்திய ரீதியில் செயல்பட வேண்டுமென்பதற்காக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என மாற்றப்பட்டது.

''எனினும் மக்கள் மத்தியிலும், பத்திரிகைகளிலும், என் எதிர்வாதி எஸ். டி. சோமசுந்தரம் நடத்திய 'போர்வாள்' பத்திரிகையிலும் கூட அ. தி. மு. க. என்றே குறிப்பிடப்பட்டது. எனவே சட்டரீதியாக அ. இ. அ. தி. மு. க. எனப் பெயர் பெற்றிருந்தாலும் அ. தி. மு. க. வாகவே அனைவரிடமும் அழைக்கப்பட்டு வருகிறது.

### நஷ்டம் எங்களுக்குத்தான் அதிகம்!

''இந்த நிலையில் அ. தி. மு. க. என ஒரு புதிய கட்சி ஆரம்பிக்கப்படுமானால் அது நிச்சயமாகமக்களைக் குழப்பும். இடைக்காலத் தடையுத்தரவு வழங்கப்படவில்லையென்றால்

✖ என். சி. ராகவாச்சாரி



✖ பட்டாபிராமன்



✖ டி. எம். ரங்கராஜன்





✕ போடி கருணிவேல்



✕ கபிலன்



✕ சுகந்தராஜ்

நஷ்டம் எங்களுக்கே அதிகமாக இருக்கும். ஏனெனில் தமிழகத்தில் செல்வாக்கு பெற்ற கட்சியாக அ. இ. அ. தி. மு. க. விளங்குவதால் இந்தப் புதிய பெயர்க் குழப்பத்தால் பாதிப்பு அதிகமாக எங்களையே சாரும்...''

## வேட்டி, புடவை பற்றி நான் பேசமாட்டேன்!

திருமதி. சத்தியவாணி முத்துவின் மனுவிற்கு எதிர்மனுவைத் திரு. எஸ். டி. எஸ். தாக்கல் செய்திருந்தார். அதையொட்டி அவரின் சார்பில் வழக்காடிய திரு. கோவிந்த சுவாமிநாதன் எழுந்தவுடனேயே,

''நான் வேட்டி, புடவைகளைப் பற்றிப் பேச வரவில்லை. அதில் என்ன கரை இடப்பட்டுள்ளது என்பது அவ்வளவு முக்கியமில்லை...''

என்றவுடன் கோர்ட்டில் சிரிப்புச் சத்தம் எழுந்தது.

## இவர்களுக்கு என்ன சொந்தம் இருக்கிறது?

''அ. தி. மு. க. எனும் பெயருக்கு வாதிதரப்பினர் உரிமை கொண்டாடி வழக்குத் தொடருகிறார்கள். நீதிமன்றத்தில் உரிமை கொண்டாடி ஒரு வழக்கு வரவேண்டுமானால் அது எந்த அடிப்படையில் வர வேண்டும்? குறிப்பிட்ட ஒரு பெயர் அல்லது பொருள் அவர்களுக்கே உரிமையானதாக இருக்க வேண்டும். அந்த உரிமையும் சட்டப்படி வழங்கப்பட்டதாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் 'இவர்கள் என் உரிமையைப் பறிக்கிறார்களே!' என்று கூறி வழக்காட முடியும்.

''இங்கே வாதியினருக்கு அ.தி.மு.க. எனும் பெயருக்கு உரிமை கொண்டாட எந்தச் சட்டத்தில் இடமுள்ளது? எந்த அடிப்படையில் இந்த வழக்கைக் கோர்ட்டுக்குக் கொண்டு வந்துள்ளனர்?''

என்று கேட்டவுடன் கோர்ட்டில் ஒரு சலசலப்பு எழுந்தது.

## அ. இ. அ. தி. மு. க. தான், அ.தி.மு.க. இல்லை!

''வாதியினரின் வாதப்படியே அகில இந்திய ரீதியாகச் செயல்பட வேண்டும் என்னும் நோக்கத்தில் அ. தி. மு. க. எனும் பெயர், அ.இ.அ.தி.மு.க. என மாற்றப்பட்டு விட்டது. ஆக, 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' எனும் பெயர் கைவிடப்பட்டது. அதற்குப் பிறகு அந்தப் பெயரில் இவர்களுக்கு என்ன உரிமை இருக்க முடியும்?

''பாராளுமன்ற நடவடிக்கைகளில் சட்டமன்ற அலுவலகங்களில், அதன் தொடர்பான அதிகாரிகளின் அலுவல்களில், பாங்க் கணக்குகளில் அனைத்திலும் அ. இ. அ. தி. மு. க. என்னும் பெயரே பின்பற்றப்படுகிறது. ஏன், கட்சி உறுப்பினர்களின் அடையாள அட்டையிலும் கூட அ.இ.அ.தி. மு. க. என்றே குறிப்பிடப்படுகிறது. அ.தி. மு. க.எனும் வார்த்தையை சட்டரீதியாகப் பயன்படுத்தியதாக ஒரு சான்று கூட இங்கு காட்டப்படவில்லை.

## வழக்கறிஞர் சொன்ன குட்டிக்கதை !

''சட்டரீதியாகவும், நடைமுறை அலுவல்களிலும் இப்படி இருக்கும் போது அ.தி. மு. க. என்றே மக்களிடையே பிரபலமாக உள்ளது; எனவே வேறொரு கட்சி இந்தப் பெயரை வைத்துக் கொள்ளக் கூடாது என்கிறார்கள்—

''எனக்கு ஏ. பி. சக்கரவர்த்தி என்றொரு நண்பன் இருந்தான். அவனை அனைவரும் ஏ.பி.சி. என்று தான் அழைப்பார்கள். அவனேகூட ஏ.பி.சி. என்றால் தான் திரும்பிப் பார்ப்பானே தவிர சக்கரவர்த்தி என்றால் திரும்ப மாட்டான்.

''அதற்காக 'ஏ.பி.சி.' என்ற பெயரையே யாரும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பதா? சட்டரீதியாக, பாங்க் அக்கவுண்ட்டில், அலுவலகங்களில் அவன் பெயர் ஏ. பி. சக்கரவர்த்திதான். ஏ. பி. சிக்கு இவன் எப்படி உரிமை கொண்டாட முடியும்? அதைப் போலத்தான் இவர்கள் சொல்லும்விதம் இருக்கிறது.

## ஓட்டுப்போடுவது, கொடிக்கா, சின்னத்திற்கா?

''அதே போலக் கொடியும் பாமரமக்களைக் குழப்பும் என்கிறார்கள். ஓட்டுப் போடும் போது ஒரே மாதிரி வர்ணம் கொண்ட கொடிகளைப் பார்க்கும் போது சாதாரண மக்களுக்குப் புரியாது என்கிறார்கள்.

''ஓட்டுச் சீட்டில் வாக்காளரின் பெயரும், கட்சியின் சின்னமும் தான் பொறிக்கப்பட்டிருக்குமே தவிர கொடியல்ல. அ.இ.அ.தி. மு.க.விற்கு இரட்டை இலைதான் சின்னமே தவிரக் கொடியல்ல.

''அதுவும் தவிர வாதியினரின் கொடியில் மூன்று வர்ணங்கள் இருக்கின்றன என்று

கூறுவது கோர்ட்டாரைத் தவறான வழியில் திசை திருப்பும் முயற்சி.''

என்று குறைகூறி அ. இ. அ. தி. மு. க. வினரின் கொடியை எடுத்துக் காட்டினார்.

''மேலே கறுப்பு, கீழே சிவப்பு என இரண்டு வர்ணமிட்ட கொடியில் இரண்டு வர்ணங்களுக்கும் மேல் அண்ணாவின் உருவப் படம் வெள்ளையில் பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் எங்கள் கட்சிக்காரரின் கொடியில் கறுப்பு, வெள்ளை, சிவப்பு மூன்றும் சம அளவில் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன.'' என்றார். பிறகு ஒரு பிரமாண வாக்கு மூலத்தைப் படித்தார். அது யார் கொடுத்தது என்பதை சஸ்பென்சில் வைத்துவிட்டுப் பிரமாணத்தை மட்டும் படித்தபோது கோர்ட்டே ஆவலாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

## அந்தப் பிரமாணம் யாருடையது?

...''அண்ணா எனும் பெயர் ஒருவருக்கு மட்டுமே உரிமையான சொத்தல்ல. அவர் மகாத்மா காந்தி, ஆபிரகாம் லிங்கன்போல பொதுச் சொத்து. அண்ணா எனும் பெயரை நான் பயன்படுத்தக் கூடாது என்கிறார்கள். வாதி தரப்பினர் பயன்படுத்துவதால்தான் அவருடைய பெயருக்கு அதிக களங்கம் ஏற்படுமே தவிர, என்னைப் போன்ற அவருடைய உண்மையான தொண்டர்கள் பயன்படுத்துவதால் அதிகக் களங்கம் ஏற்படாது...''

என்று நீளமாகப் படித்துக் கொண்டே போனார். அனைவரும் 'இது யார் சொன்னது?' என்று ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்தனர். கடைசியில் சஸ்பென்சை உடைத்தார் திரு. கோவிந்த சுவாமிநாதன். 1972—ல் புதிய கட்சி ஆரம்பித்த போது அதற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனப் பெயர் வைப்பதைத் தடை செய்யக் கோரி, ராம்மோகன் என்பவர் வழக்குத் தொடர்ந்தார். அவர்களுக்குப் பதில் கூறுமுகமாக திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தந்திருந்த பிரமாண வாக்கு மூலமே அது.

''இதைப் போன்ற விவகாரங்கள் மக்களின் மத்தியிலே தான் தீர்க்கப்பட வேண்டுமே தவிர, நீதிமன்றத்தில் அல்ல...''

எனக் கடைசியில் குறிப்பிட்டிருக்கிறார் எம். ஜி. ஆர். அதைக் கோர்ட்டில் தாக்கல் செய்ய கோவிந்த சுவாமிநாதன் முற்பட்டபோது 'அது சான்று செய்யப்பட்ட நகலல்ல' என என். சி. ராகவாச்சாரி ஆட்சேபித்தார்.

## எஸ். டி. எஸ். கூறியுள்ள பதில்கள் சில:

- அ. இ. அ. தி. மு. க. வில் ஊழல் அதிகமாகி விட்டது என நான் கூறியதாலேயே, பாதிக்கப்பட்டவர்களால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டேன்.

- கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகக் கொடியும், கட்சியின் பெயரும் உள்ளது; அதனால் பாமர மக்கள் ஏமாந்து விடுவார்கள் என்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களைப் பற்றி மிகக் குறைவான மதிப்பீட்டை வைத்திருக்கிறார்கள் வாதி தரப்பினர்.

## தமிழ் மக்கள் ஏமாந்தவர்களல்ல

- திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம்; அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என சிறுசிறு மாறுதல்களுடன் கட்சிகள் வளர்ந்து தான் இருக்கின்றன. அனைத்தையும் புரிந்து கொண்டு தான் மக்கள் வாக்களித்து வருகிறார்கள்.

## ஒரே வர்ணக் கொடிகள் பலவுண்டு!

- இந்திய தேசியக் காங்கிரஸிலிருந்து பல கட்சிகள் பிரிந்தன. ஒவ்வொருவரும் அதே மூவர்ணக் கொடியைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதிலே ராட்டை, கை, என உருவங்களையே மாற்றிக் கொள்கிறார்கள். இதிலே ஒருவரையொருவர் தடை செய்யவில்லையே!

## கட்சியைத் தடைசெய்யத்தான் இந்த வழக்கு!

- எனவே அ. தி. மு. க. என்ற பெயரும், கொடியும் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதற்காக வாதித் தரப்பினர் இந்த வழக்கைத் தொடரவில்லை. வேண்டுமென்றே குற்றச்சாட்டுக்களைக் கூறி என்னுடைய கட்சியை ஆரம்பிக்க விடாமல் செய்யத்தான் இந்த வழக்கைத் தொடர்ந்திருக்கிறார்கள்.

- திரு. எஸ். டி. எஸ் சார்பில் வழக்கறிஞர்கள் சுகந்தராஜ், கபிலன்,' போடி கருணிவேல் ஆகியோர் இந்த எதிர் மனுவைத் தாக்கல் செய்து உள்ளனர்.

இரு தரப்பு வாதத்தினையும் கேட்ட பதினோராவது உதவி நீதிபதி திரு. நடராஜன் உத்தரவைத் தள்ளி வைத்துள்ளார். (Order Reserved)

-நமது நிருபர்

---

என் நண்பனுடைய ஆட்டோகிராபில் கவிஞர் வைரமுத்து அவர்கள் எழுதிக் கையெழுத்திட்டிருந்தது:

''உங்கள் வீட்டு ரோஜாவில் முட்களும் பூக்களாக மலரட்டும்.''

—ஜெயின் சேகர்.



யோகாசன மகிமை

# சலபாசனம்

"பஸ்சிமோத்தாசனத்துக்கு மாற்று இந்த சலபாசனம். முதுகெலும்பு பின்புறமாக வளைகிறது. புஜங்காசனத்திலும் இதே போலத்தான்" என்கிறார் தஞ்சாவூரிலுள்ள Peace Life mission-ஐச் சேர்ந்த யோகி ஏ. இராஜமாணிக்கம் இவருடைய மனைவி, மகன் ஆக குடும்பமே யோகப் பயிற்சியில் அக்கறை கொண்டவர்கள்.

சலபாசனத்தில் முதுகெலும்பு பின்புறமாக வளைவதாலும், வயிற்றுப் பகுதி அழுத்தப்படுவதாலும் உடலின் பிற்பகுதிக்கு அதிகப் பலன்கள் கிடைக்கின்றன. வயிற்றுப் பகுதிக்கு அதிகமான ரத்தஓட்டம் ஏற்படுவதால் பாலுறவுச் சுரப்பிகள் வலுவடையும், சிறுநீரகம், கல்லீரல், மண்ணீரல், கணையம், போன்ற உறுப்புக்கள் நன்கு செயல்படும். குடல்கள் நன்கு இழுக்கப்படுவதால் மலச்சிக்கல், செரிமானக் கோளாறுகள் போன்றவை நீங்கும். வயிறு, இடுப்பு, தொடைகளில் அதிகப்படியான சதை போடாமல் உடம்பு கட்டாக இருக்கும். நுரையீரல் நன்கு விரிந்து பலமடையும். முதுகுவலி, இடுப்புவலி போன்றவை அணுகாது.

இருதய நோயுள்ளவர்களும் இரத்த அழுத்த நோய் உள்ளவர்களும் சலபாசனம் செய்யக் கூடாது. வேறு உடல் கோளாறு உள்ளவர்கள் நிபுணர்களின் ஆலோசனை கேட்டுப் பழக வேண்டும்.

ஆசன நிலை வெட்டுக்கிளியை நினைவூட்டுவதால் இது சலபாசனம் என வழங்கப்படுகிறது.

**பயிற்சிமுறை:**

தரை விரிப்பின் மீது முதலில் குப்புறப் படுக்க வேண்டும். கால்கள் சேர்ந்து இருக்க வேண்டும். முகவாய்க் கட்டை தரையில் படும்படி, முகத்தைச் சற்று உயர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.


கைவிரல்களை நன்கு மடக்கித் தொடைகளுக்குக் கீழே வைத்துக்கொள்ளவேண்டும். பின்னர் மூச்சை இழுத்துக் கொண்டு, கைகளைத் தரையில் அழுத்திக்கொண்டு, இரண்டு கால்களையும், சேர்த்த மாதிரியே மேலே உயர்த்த வேண்டும். கால்களை வளைக்காமல் 45 டிகிரி வரை உயர்த்தவேண்டும். இதே நிலையில் பத்து முதல் இருபது வினாடிகள் வரை இருக்கலாம். பிறகு மெதுவாக மூச்சை விட வேண்டும். அப்படியே கால்களை மெல்லக் கீழே இறக்க வேண்டும். தரையில் படியும் வரை கால்கள் வளையக் கூடாது.

இந்த சலபாசனத்தை மூன்று முதல் ஐந்து முறைகள் வரை செய்யலாம்.

கால்களை மேலே தூக்கும் போது தொப்புளுக்குக் கீழேயுள்ள பாகம் மட்டுமே உயர்த்தப்பட வேண்டும். உள்ளங்கால்கள் வளையாமல் ஆகாயத்தை நோக்கி இருக்க வேண்டும்.

கட்டுரை வடிவம்: சுப்ரபாலன்

படம்: திருமதி மல்லிகா இராஜமாணிக்கம்





**வே**லை இல்லாத இளைஞன். எப்படிக் கஷ்டப்படுகிறான்? எப்படி மெட்ராஸ் வருகிறான்? எப்படி ஹீரோவாகிறான்? எப்படிக் கல்யாணம் செய்து வைக்கிறான்? பாக்யராஜ் சப்ஜெக்டைத் தொட நிறைய நேரம் விரயம் செய்திருக்கிறார். பிட், பிட்டாய் தனித்த மேகங்கள் மாதிரி ஸீன்கள். எதுவும் மனத்தில் தங்கி இருக்காது. அவருடைய ஹ்யூமர் மட்டும் இல்லையென்றால், படத்தில் அறுபது சதம் ஸீரியஸ்னெஸ், நாற்பது சதம் அவர் ப்ராண்ட் நகைச்சுவை.

மெகஃபோனில் அன்புள்ள நண்பர்களே, பாக்யராஜ் ஏக்கத்துடன் ராதிகாவைப் பார்க்க, ராதிகா பூர்ணிமா ராவை அணைப்பது. ரெண்டு நஹியிலேர்ந்து ஒரு நஹிக்கு வந்துட்டான் என்று சொல்லும் தயாரிப்பாளர், மயங்கிச் சாய்ந்த வில்லன் பாக்கெட்டிலிருந்து பணத்தைக் கபளீகரம் செய்வது, தியேட்டரில் காசு வீசி, தங்கைகளைப் பொறுக்கச் சொல்வது — என்று ஏகப்பட்ட ஸீன்களில் வாய் விட்டுச் சிரிக்கவைக்கிறார்.

'பொன்மேனி உருகுதே' என்று பத்து வயது உருக, முறத்தால் அம்மா வந்து அடித்துத் திட்டும் இடம் நம் பக்கத்துவீட்டு ராமசுப்புவின் குடும்பத்தில் நடக்கிறமாதிரி அவ்வளவு இயல்பு.

கல்யாண வீட்டு பாதி சாப்பாடு ஸீனில் மனத்தை மெல்லிறகால் தொடுகிறார்.

ஷூட்டிங் சண்டை, கதையைப் பிளந்து செருகப்பட்ட ஸ்டண்ட் ஸீன். அது நிஜச் சண்டையாவது அந்த நாள் 'அன்பேவா'வில் எம். ஜி. ஆர். பயில்வானிடம் மோதுவதை நினைவுபடுத்தத் தவறவில்லை.

பாக்யராஜ் வசனம் அமைத்து அவரை பாரதிராஜா பொறுக்கி எடுக்கும் ஸீன் மயிர்க்கால்களை விறைக்க வைக்கிறது. குருவை சிஷ்யர் மிஞ்சுகிறாரா? சிஷ்யனை குரு மண் கவ்வ வைக்கிறாரா? தெரியவில்லை. தெரியவேயில்லை!

# வாய்ச் சொல்லில்

**ரா**கவேந்தர் பாம்பை அடித்ததும், சாதனை நேர்ந்து கொள்கிறதைப் பார்க்கும்போது அட, ஏற்கெனவே பல படங்களில் அரைத்த மாவுதானே என்ற சம்சயம் ஏற்பட்டாலும், தோஷ நிவர்த்தி செய்து விடுகிறார்கள்— கலகல வசனம், இயல்பான நகைச்சுவை ஆகியன மூலம்.

விசு, படம் ஆரம்பித்த கொஞ்ச நேரம் கழித்து சயோட்டி லாயராக அறிமுகம் ஆகிறாரா? இருபத்தைந்து வருட அழுக்குக் கோட்டைப் பற்றிச் சொல்லிச் சொல்லியே ஒதுங்கிவிடப் போகிறார் என்ற பயத்தை முதலில் ஏற்படுத்தி விடுகிறார். அப்புறம் பாருங்களேன்,— 'காந்தியைக் கொன்னதுக்கு கோட்ஸேதானே வருத்தப்படணும், புல்லட் ஏன் வருத்தப்படணும்?' என்று கேட்டது என்ன; 'இருவத்தஞ்சி வருஷத்திற்கு அப்புறம் முதல் கேஸே டைவர்ஸ் கேஸ்தானா?' என்று உருகுவது என்ன? ரியல் ஹீரோ — விசுதான். (குரல்தான் கொஞ்சம் நெருடுகிறது.)

ஸீத்ரு மிடியில் வனிதா ஆட, ஒய். ஜி. எம். மயங்க, தந்தை தனித் தமிழாசிரியர் வர — படத்தில் நிறைய மார்க்குகளைத் தட்டிக் கொண்டு போவது இந்த ஜோடிதான்.

முதல் தரம் ஜனகராஜ் தொப்பியை எடுத்து விசு முத்தமிடும் விதம் — இரண்



பணம் சம்பாதிக்க ஐந்து வழிகளில் ரஜினி ஸ்டைல் வழியில் மூக்குடைபட்டு, காரும், ஆட்டோவும், ரிக்ஷாவும் ரிவர்ஸ் அடிப்பது—

கோயில் சிலை கடத்தலில் மணி அடிப்பது. ஏறக்குறைய தொண்ணூறு சதம் மாட்டிக்

# தாவணிக்

# ஸீரனடி

# வெள்ளித்திரை

டாம் தரம் ஜனகராஜ் தானே தொப்பியை எடுத்துக் காட்டும் நயம் —

அம்பு எய்த மனோரமா விழிக்க, அம்பு ஜனகராஜ் விசுவின் காலை வாரிவிட, பின்னணியில் பாலூட்டி வளர்த்தகிளி வயலினில் உயிர் பெற — தியேட்டர் அதிர்கிறது. அதிர்கிறது. அப்படி அதிர்கிறது. மனோரமாவா கொக்கா? நெற்றித் திலகவதி மனோரமா (அய்யங்கார் ஆக்ஸெண்ட் அட்டகாசம்)—

கோர்ட் இடைவேளையில் ஜோடி பின்னால் போய், பூக்காரியை லபக்கென்று பிடிப்பதும், சர்வரை அமுக்குவதும், கோர்ட்டில் காரையே சாட்சிக்கு அழைப்பதும் — ஹா, ஹா, ஹா, ஹா, ஹா, ஹ ... ஹ ... ஹ ! (வயிற்றில் வலி — கண்ணில் நீர்)

'எப்படி கரெக்டாச் சொல்லிட்டேனு?' என்று பெருமிதத்துடன் மகேந்திரன் கேட்டதும் 'கரெக்டாச் சொல்லிட்டே, எதிர்க்கட்சி வக்கில் சொல்ல வேண்டியது, ஜட்ஜ் சொல்ல வேண்டியது எல்லாம் நீயே சொல்லிட்டே' என்று விசு பொருமுவதும், வசன விசு நன்றாகவே சிலம்பாடி இருக்கிறார்.

எல்லாப் பாடல்களுமே இனிமைதான். விஜய்ஆனந்திடம் நிறைய சரக்கு இருக்கிறது.

என்னென்னவோ கலந்து 'மிக்ஸர்' தயாரித்திருக்கும் விசுவின் படம்!

விறு, விறு! விறு, விறு! விறு, விறு!





உனக்கு இன்ஜினீயர், டாக்டர், வக்கில்னு ஆயிரம் மாப்பிள்ளைங்க வருவாங்க, ஆனா என் தங்கச்சிகளுக்கு என்னை விட்டா வேற அண்ணன் கிடைக்க மாட்டான்' என்று பாக்யராஜ் உதறும் இளவரசி? அந்த அகலக் கண்கள்? சோக முகம்? இரண்டும் ஆரம்பத்திலேயே அகன்று போவதால் நம் மனத்தை விட்டும் அகன்று விட்டாரோ?

பாக்யராஜ் க்ளைமாக்ஸிற்காக எவ்வளவு கஷ்டப்படுவார்? பெரிதான வெடிகுண்டை வைத்துக் கொண்டு எப்படி மெதுமெதுவாய்த் திரியைக் கொளுத்துவார்? இதில் புஸ்ஸ்ஸ்ஸ்.

போஸ்ட்மேனாய் வரும் பார்த்திபன். கொஞ்சநேரமே வந்தாலும் உள்ளத்தில்லதைக் கிற மாதிரி பண்ணியிருக்கிறார். யார் கண்டது? பின்னாளின் இன்னொரு பாக்யராஜோ என்னவோ?

(இவர்னு முப்பத்தாறு கோடி மக்களுக்கும் அத்துப்படி — பாக்யராஜின் ஜஸ்! ஜஸ்!) யார் படத்தில் நடித்தால் என்ன? சிவாஜிக்கே உரிய ஒரிஜினல் முத்திரைகள். நடிப்பில் மட்டும் அவரை எந்த மேகமும் மறைக்கவே முடியாது. பாக்யராஜ் வெகு கவனத்துடன் அளந்து தான் அந்த மிலிட்டரி சட்டையை கணேசனுக்கு மாட்டியிருக்கிறார்.

'செங்கமலம் சிரிக்குது'— காதினில் கேட்குது! வானம் நிறம் மாறும் — ரிச்சான கனவுக் காட்சிப் பாடல். பாடலை விட கவனத்தை செட் ஈர்த்துக் கொள்கிறது.

மாமோய் — ஏன் மாமோய்? அது பரவாயில்லை மாமோய்.

வழக்கமான பாணியை விட்டு, வரதட்சிணை அது, இது என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றிப் பார்க்கிறார் பாக்யராஜ்.

பாக்யராஜிற்காக ஓடும்.

— ஜெயமன்மதன்

கொண்டு தப்பிப்பது — அந்தத் 'திருட்டு விழிகள்' பாக்யராஜிற்கு நிறைய உதவி இருக்கின்றன.

'தயிர் போட்டுக்கய்யா குளிர்ச்சி'' என்று சொல்லும் ராதிகா ஈரம் காயாத பெயிண்ட் மாதிரி மனத்தில் ஒட்டுகிறார்.

# கனவுகள்

சைலே...ன்ஸ்

# ஒளிய வேண்டும் ஒளிப்பதிவாளர்

## ஜோசியம்: தனக்குத்தானே

ஆனந்த சயனத்தில் இருந்த ஆனந்த் பாபுவை ஒரு மதிய வேளையில் எழுப்பினேன். அவசரமாய்ச் சட்டையை மாட்டிக் கொண்டு பேட்டிக்குத் தயாரானார்.

''உங்கள் டான்ஸ் திறமையைத்தான் பாராட்டுகிறார்கள். மற்றபடி நடிப்பில்...'' என்று இழுத்தேன்.

''எனக்குக் கிடைத்த ரோல்கள் அப்படி. என்ன செய்ய? முழுக்கதையும் என்னைச் சுற்றி வர்ற மாதிரியோ, அல்லது குடும்பப் பாங்கான கதையாகவோ இருந்தால் நடிப்புன்னு எதையாவது செய்யலாம்'' என்றார். நியாயம் கேட்கிறேன் படம் சிட்டியில் வெற்றிகரமாகப் போகாததற்குக் காரணம், ஏற்கெனவே அதன் இந்தி மூலம் மேரி அதாலத் வந்து விட்டுப் போனதுதானாம். ''மற்றபடி மொபசல் ஏரியாக்களில் நன்றாகத்தான் போகிறது'' என்றார்.

அடுத்து ஒரு புதுப் படத்திற்கு ஹீரோவாக ஒப்பந்தமாகி இருக்கிறாராம். டான்ஸ், ஃபைட், கொஞ்சம் நடிப்பு எல்லாம் உண்டாம். அந்தப் படத்திற்குப் பிறகு நல்ல காலம் பிறக்கும் என்பது இவருக்கு இவரே சொல்லிக் கொள்கிற ஜோசியம்.

## ஆறாத வடு!

இரவு ஏழு மணி. அறையில், நான்கைந்து பேருடன் தீவிரமாகப் பேசிக்கொண்டிருந்தார் டைரக்டர் மகேந்திரன். அடுத்த படத்திற்கான ஸ்டோரி டிஸ்கஷனாம்.

ராஜரத்னம் பிள்ளை நாதஸ்வரத்தில் ஒரு 'பிர்கா' அடித்தார் என்றால், பரபரவென்று ஏறுமே... அதுபோலத்தான்... மகேந்திரன் பேசினாலும்.

''எனது அடுத்த படத்தில் சிற்சில தெரிந்த முகங்களோடு நிறையப் புதுமுகங்களும் அறிமுகமாகிறார்கள்'' என்றார்.

''நெஞ்சத்தைக் கிள்ளாதே இந்தியில் எடுப்பதாக இருந்தீர்களே...?''

''எடுப்பேன். அது விஷயமான வேலைகளும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.''

''அதிலும் நம்மூர்க்காரர்களை அறிமுகப் படுத்துகிறீர்களா?''


''இல்லை. அப்படிச் செய்தால் சுகாசினியை அறிமுகப்படுத்தலாம். அவர்தான் அந்தக் கேரக்டருக்குப் பொருத்தமானவர்.''

''உங்களுடைய பழைய 1...2...3...4... படம்...''

''இருக்கிறது. அவ்வப்போது கிடைக்கும் 'கேப்பில்' முடித்து விடலாம் என்றிருக்கிறேன்.''

உதிரிப் பூக்களுக்கு அவார்டு கிடைக்காமல் போனதில் மகேந்திரனுக்கு இன்னும் வருத்தமிருக்கிறது. ''அந்த வடு என் மனத்திலிருந்து வாழ்நாள் முழுவதும் மாறவே மாறாது'' என்றார். இந்த ஆண்டு முடிவில்

✖ நிலேஷ்யா





✖ மணிபாரதி



✖ அனுராதா

✖ ஆனந்த் பாபு



NFDC மூலம் ஒரு படம் எடுக்கவிருக்கிறாராம். அவார்டு பெறும் நோக்கத்துடனேயே எடுக்கப்படும் படம்!

## ஒளிப்பதிவாளர் ஒளியவேண்டும்

பூனா பிலிம் இன்ஸ்ட்டிடியூட்டிலிருந்து வந்தவர் தினேஷ்பாபு. இவர் ஒளிப்பதிவில் வெளிவந்த முதல் படம் பகவதிபுரம் ரயில்வே கேட். அடுத்தது 'பொண்ணு புடிச்சிருக்கு' 'உன்னை நான் சந்தித்தேன்' ஆகிய படங்களுக்கு ஒளிப்பதிவு செய்திருக்கிறார்.

காலேஜ் ரோடில் இருக்கும் நடிகை ஜெயபாரதியின் வீட்டில் நடந்த படப் பிடிப்பு ஒன்றில் தினேஷ் பாபுவைச் சந்தித்தேன்.

''ஒரு படத்தைப் பார்க்கும் போது 'ஆகா ஒளிப்பதிவு அற்புதம்' என்று சொன்னால், அந்தப் படத்தில் டைரக்டரின் ஒர்க் சரியில்லை என்று அர்த்தம். படத்தில் சரியாக இன்வால்வ் ஆகாமல் போனால்தான் மற்ற டெக்னிக்குகளை உணர முடியும். என் படங்கள் எதிலும் நான் தனித்துவமாகத் தெரியாத அளவிற்கு பார்த்துக்கொள்கிறேன்'' என்றார்.

அநேகமாக தமிழ்ப்பட ஒளிப்பதிவாளர்களில் இவர்தான் மிக இளைஞராக இருப்பார். வயது: 25.

## 'நொறுக்கு' நல்லா இருக்கு!

நமது நடிகைகள் நடிப்பில் தனித்தனி ஸ்டைல் காட்டுகிறார்களோ, இல்லையோ? ஆளுக்கொரு நொறுக்குத் தீனி பழக்கம் வைத்திருக்கிறார்கள்.

அனுராதா நிமிடத்திற்கொருதரம் வாசனைப் பாக்கு போடுகிறார். சின்ன டப்பாவில் பாக்குத் தூளை நிரப்பிக் கொண்டு, பக்கத்திலேயே ஒரு பையன்.

ஒரு தட்டில் வறுத்த முந்திரிப் பருப்புகளை வைத்துக் கொண்டு (எதிரே இருப்பவர்களுக்குக் கொடுக்காமல்) சாப்பிடுகிறார், மாதவி.

அடிக்கடி இளநீர் குடிக்கிறார், சசிகலா.

ரேவதி சாத்துக்குடிகளை உரித்து உள்ளே தள்ளுகிறார்.

இன்னும் ஆராய்ந்து பார்த்தால் தனிப் புத்தகமே எழுதலாம். ஆனால் அதுதான் நமக்கு வேலையா, என்ன?

## ''அது நான்தான்!''

மணிபாரதி. இதுவரை 60 படங்களுக்கு மேல் நடித்து விட்டாலும், 'துடிக்கும் கரங்கள் படத்தில் ராதாவுக்கு அப்பாவாக வருவேனே... அது நான்தான் என்று சொல்லிக் கொள்ளும் அளவில் தா பிரபலமாகி இருக்கிறார்.

எல். ஐ. சி. யில் பணிபுரியும் இவர் சொ. தத்தில் 'சௌமியா' என்கிற நாடகக் குழுவையும் நடத்திக் கொண்டிருக்கிறார்.


—சம்பத்ஜி


# நீங்கள் கேட்டவை

## தராசு



○ பி. முத்து சுப்பிரமணியம், சென்னை-78.
? சமீபத்தில் ஜனநாயக கிரகணத்தின் போது தங்கள் மனநிலை எவ்வாறிருந்தது?
! நண்பர் நா. பா. ''என்னடா இது நமது ஜனநாயகத்தின் நிலை இப்படியாகி விட்டதே?'' என்று கவலைப்பட்டதில் மூலக் கனல் தொடர்கதை எழுத முடியாமல் தவித்தது எனக்குத் தெரியும். எழுத ஆரம்பித்துக் கொஞ்சம் முன்னேறுவார். மன வேதனையால் எழுத்து தடைப் படும். என். டி. ஆர். மறுபடி முதல்வர் என்று அறிவிப்பு வந்ததோ இல்லையோ அந்த ஞாயிற்றுக்கிழமையே மூன்று அத்தியாயங்களை எழுதி முடித்து அனுப்பி விட்டார்! 'அது சரி, உமது மனநிலையைக் கேட்டால் நா. பா. மனநிலையைச் சொல்கிறீரே?' என்கிறீரா? தலையணை மீது அதர்மங்களின் மொத்த உருக்களின் படங்களை வைத்து நாலு கும் குத்து. இரண்டு கராட்டே சாப், கூடவே எட்டு வசவு! மனம் இலேசாகி விடும். உபயம்: ஜப்பானியப் பழக்கம்.



○ இன்சாட்

○ அன்புநாதன், கவுந்தப்பாடி.
? மூத்த அறிஞர் ராஜாஜியின் எழுத்துக்களில் தங்களை அதிகமாகக் கவர்ந்தது எது?
! சக்கரவர்த்தித் திருமகன், வியாசர் விருந்து என்ற அழகிய தலைப்புக்களில் வெளியான நூல்களும் பர்மிட் லைசென்ஸ் கோட்டா ஆட்சி என்ற வர்ணனை வாசகமும்.

○ மு. மதிவாணன், அரூர்.
? கையெழுத்து விஷயத்தில் நீர் எப்படி?
! சிந்தனை வேகத்தில் கை செயல்படாததால் ஒரேகிறுக்கல். மறுபிரதி எடுக்கும் போது எனக்கே என்ன எழுதினேன் என்று புரியாமல் சில வார்த்தைகளில் தடுமாற்றம். அதுசரி, உமது கையெழுத்து ரொம்ப அழகாயிருப்பதால் எழுந்த கேள்வியா இது? பத்திரிகை ஆபீஸில் வாய்ப்புக் கிட்டுமானால் ஆறு மாசம் வேலை பாரும். அப்புறம் தெரியும் உமது கையெழுத்தின் லட்சணம்.

○ எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.
? எது நிம்மதியான வாழ்க்கை?
! கொடைக்கானல் கோக்கர்ஸ் வாக்கில் ஒரு டெலிஸ்கோப் இருக்கிறது. அதன் வழியே பள்ளத்தாக்கில் தொலை தூரத்தில் தெரியும் சிறு கிராமத்தைப் பார்த்தேன்! அடடா! இதுவல்லவோ அமைதியான கவலையற்ற வாழ்க்கை என்று தோன்றியது. பக்கத்தில் டெலஸ்கோப் பாதுகாவலர் கூறினார்: 'நிம்மதியாவது ஒன்றாவது. அந்தக் கிராமத்தில் ஒரு விஷ ஜுரம் பரவியுள்ளது. பஸ் போக்குவரத்துக்காக பெடிஷன் மேல் பெடிஷன் எழுதித் தள்ளுகிறார்கள். குடிநீர் வசதி இல்லை...' என்று அடுக்கினார். தூரத்துப் பச்சை கண்ணுக்கழகு என்பது புது அர்த்தத்துடன் விளங்கியது எனக்கு. 'நிம்மதியாவது ஒன்றாவது' யாருக்கு இருக்கிறது நிம்மதி....?

○ நாஞ்சில் நடராஜ், சென்னை-5.
? அண்ணாயிசம் இந்திராயிசத்தைக் கண்டு நடுங்குவதேன்?
! பதவியிசம்தான் காரணம்.

○ அ. அன்பழகன், அந்தணப்பேட்டை.
? அடியார், எஸ். டி. எஸ். கட்சியில் இணைந்தது பற்றி...
! ஏதோ இந்த மட்டுக்கும் தமிழகத்தில் ஒரு கட்சி குறைந்ததே என்றசந்தோஷம்.

○ எம். எட்வர்ட் ராஜையா, அவனிபுரம்.
? நாம் எதை மறக்க எண்ணுகிறோமோ அதுவே நினைவை ஆக்கிரமிக்கிறதே?
! அளவற்ற துயரம், காமக் குரோதம், முதலியவற்றை மறக்க, மனத்திலிருந்து ஒதுக்க ஒரே வழி மேன்மேலும் கடமை ஆற்றுவது தான். வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வதுதான். சும்மா இருந்தால் வேண்டாத எண்ணங்கள் வந்து சேரும். வெட்டிப்பேச்சு பேசச் செய்யும். இத்தகைய சுறுசுறுப்

பான வாழ்க்கையுடன் தேகப் பயிற்சி, தியானம் ஆகியவற்றை இணைத்தால் மனம் நம்மை ஆளுவதற்குப் பதில் மனத்தை நாம் ஆள முடியும்.

○ ஆர். பூபாலன், கிருஷ்ணகிரி.

? டாலிக்களின் நூல்களைத்தான் நாங்கள் படித்திருக்கிறோம். அது யார் சுவாமி பாலிக்கன்?

! அச்சுப்பிழை காரணமாக உருவானவர்.

○ உலகநாதன், லால்குடி.

? பேபி அஞ்சுவின் உதடு, அனுராதாவின் உதடு ஒப்பிடவும்.

! ராங் நெம்பர்; சென்னை பத்துக்கு டயல் செய்யவும்.

○ ஆ. கப்பராஸ், திருக்கோவிலூர்.

? கவிழ்ப்பது ஒரு கலையா?

! கலை என்று ஒப்புக் கொள்வதாயின் அதையும் கொலை செய்ய முடியும் என்று நிரூபித்திருக்கிறார் ராம்லால்.

○ லதா, பட்டுக்கோட்டை.

? கொள்கை வகுப்பது முக்கியமா? திட்டம் போட்டு நிறைவேற்றுவது முக்கியமா?

! கொள்கை வகுப்பதென்பது எளிது. திட்டமிட்டு நிறைவேற்றுவது கஷ்டம். உதாரணமாக விண்வெளி விஞ்ஞானத்தில் பாரதம் முன்னேற வேண்டுமென்று அரசு கொள்கை வகுத்து விட்டது. ஆனால் அதைத் திட்டமிட்டு நிறைவேற்றும்போது பல குறைபாடுகள் இருக்கக் காண்கிறோம். இன்ஸாட் 1–ஏ, 1–பி முதலிய விண்கோள்கள் வெற்றிகரமாக அனுப்பப்பட்டன. ஆனால் அவற்றின் ஆற்றலை இங்கு மக்களுக்குப் பயன்படுமாறு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. எனவே அந்த விண்கோள்களின் திறனெல்லாம் பெரும்பகுதி வீணாகிக் கொண்டிருக்கின்றன. அந்த அளவுக்கு மக்களின் வரிப்பணம் விரயமாவதாகவே கருத வேண்டும்.



○ நா. பா.



○ ராஜாஜி



○ அடியார்



○ அனுராதா

○ ஆர். அப்துல் சலாம், திருச்சி.

? வானொலி ட. வி. நாடகங்கள் – ஒப்பிடவும்.

! முன்னது காதுக்கு மட்டும் தொல்லை; பின்னது காது, கண் இரண்டுக்கும் கெடுதல். – மிகப் பெரும்பான்மை சமயங்களில்.

○ மங்களா சேஷாத்ரி, சென்னை.

? வீடியோ கோச்சில் பயணம் செய்திருக்கிறீர்களா?

! சமீபத்தில் பெங்களூர் செல்ல நேர்ந்த போது... 10 மணிக்குக் கிளம்ப வேண்டிய பஸ் வீடியோ கேஸட்டுக்காகக் காத்திருந்ததால் 10.30–க்குத் தான் கிளம்பியது. பூந்தமல்லி போனதும் வீடியோ தடங்கல். அதைச் சரி செய்யக் கால் மணி நேரம் போராடி ஒரு ஹிந்திப் படம் போட்டனர். தூக்கம் கண்களைச் சொக்க வைக்க வீடியோ அலறல் தூங்க விடாமல் தடுக்க... இரண்டு படங்கள் விடிய விடிய... காலையில் நல்ல தலைவலி. வேண்டாமய்யா வீடியோ கோச்!

○ ஜி. பாரதி, காங்கேயம். ★

? உங்களால் மன்னிக்க முடியாத குற்றம் எது?

! பக்தி என்ற பெயரில் காளைகளை வண்டிகளில் பூட்டி பழனி மலை ஏறச்செய்வது; விளையாட்டு, ஸ்போர்ட் என்ற பெயரில் கஜராஜனுக்கு எதிராக ஏராளமானவர் நின்று கயிறு இழுப்புப் போட்டியில் ஈடுபடுவது. (இது கேரளத்தில் போலீஸ் விளையாட்டில் ஒன்றாக அண்மையில் நடந்த அசிங்கம்) இப்படி வாயில்லா ஜீவன்களைத் துன்புறுத்துவதும், அவமதிப்பதும்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

ஜி. பாரதி,
எம். எஸ். பி. பில்டிங்,
மெயின் ரோடு,
காங்கேயம்
638 701.

# மாடியில் ஒரு ஏ.ஸி. அறை

**ஆபரேஷன் வெற்றிகரமாக முடியக் கெட்டிக்கார டாக்டர்களும் நர்ஸ்களும் இருந்தால் போதாது. ஆபரேஷன் தியேட்டர் பழுதின்றி இருக்கவேண்டும். இல்லையென்றால் அண்மையில் புதுதில்லியில் நடந்தது போல மின்சாரம் தாக்கியே நோயாளி இறந்து விடலாம். அல்லது நோய்க் கிருமிகளால் தாக்குண்டு டெடனஸ் போன்ற விளைவுகள் ஏற்பட்டு மரணம் சம்பவிக்கலாம்...**

எல்லா ஆபரேஷன் தியேட்டர்களுமே ஏர்கண்டிஷன் செய்யப்பட்டவைதான். சாதாரணமாகப் புறக் காற்றின் ஒரு சதுர மீட்டர் பரப்பளவில் நூறு நுண்ணுயிர்கள் இருக்கலாம். ஆனால் இடத்தின் சுகாதாரம், ஆட்களின் புழுக்கம் இவற்றுக்கு ஏற்ப இந்த எண்ணிக்கை கூடும். நோய் தொற்றிய காயத்தின் மீதிருந்து மேலே போட்டிருக்கும் பாண்டேஜ் அல்லது பிளாஸ்டரை அகற்றினால், பல்லாயிரக்கணக்கில் கிருமிகள் பரவிவிடும். இவை எல்லாவற்றிலிருந்தும் போதுமான பாதுகாப்புப்பெற வேண்டும்.

ஏ. ஸி. அறைக்குள் புறக்காற்று இழுக்கப்படும் போதே கிருமிகளை நன்றாக வடிகட்டித்தான் இழுக்கப்படுகிறது. தவிர ஆபரேஷன் தியேட்டருக்குள் காற்றின் அழுத்தமும் கூடுதலாக இருக்கும்.

சர்ஜரி முடிந்தவுடன் பயன்படுத்திய துணிகள், பஞ்சு, கழிவுப் பொருள்கள் அவ்வளவையும் கட்டி வெளியே போடக் கூட ஒரு சிறு ஜன்னலைத்தான் அப்போதைக்கப்போது திறந்து பயன்படுத்துவார்கள். அப்படி ஜன்னல் திறக்கிற நேரங்களில் கூட ஆபரேஷன் அறையின் அழுத்தப்பட்ட காற்று திமிறிக் கொண்டு வெளியேறுமே தவிர, வெளிப்புற அசுத்தக்காற்று உள்ளே வர வாய்ப்பில்லை.

சர்ஜரி நடைபெறுகிற அறையில் ஆள்நடமாட்டம் தேவைக்கு மேல் இருக்கக்கூடாது. தூய்மையாக்கப்பட்ட பிரத்தியேகமான உடையுடன் தான் நோயாளியும், டாக்டர்களின் உதவியாளர்களும் அறைக்குள் வர முடியும்.

தினமும் ஆபரேஷன் தியேட்டரின் சுவர்கள் உட்பட எல்லாப் பகுதிகளும் மருந்து கலந்த நீரால் நன்கு கழுவப்படுகின்றன. ஆபரேஷன் மேஜை போன்ற அனைத்துப் பொருள்களும் சுத்தமாக்கப்படுகின்றன. வாரம் ஒரு முறை சர்ஜரியை நிறுத்திவிட்டுத் தூய்மைப் படுத்துகிறார்கள்.

சுவர்கள் கூட விளிம்புகள், 'ட' வளைவுகள் ஏதுமில்லாமல் கட்டப்படுகின்றன. அப்படியும் நோய்த் தொற்று ஏற்படக் கூடும். இது உடனே Post Operative Case களில் தெரிந்து விடும். அப்போது சர்ஜரி அறையில் தான் ஏதோ கோளாறு என்று கண்டுபிடிக்க முயல்வார்கள். 'பாக்டீரியல் ஸ்வாப்'' சோதனை என்று ஒன்று உண்டு. தியேட்டரின் சுவர்ப் பகுதி, ஓரங்கள் என்று சந்தேகம் வருகிற பகுதிகளைப் பஞ்சால் ஒற்றியெடுத்துச் சோதனைக்கு அனுப்புவார்கள். கல்ச்சரில், கிருமிகள் ஏதேனும் கிடைத்து விட்டால் உடனே முழு அளவில் துப்புரவு நடக்கும். பார்மாலிடி ஹைட், பொட்டாஸியம் பர்மாங்கனேட், போன்ற பொருள்களின் கலவையை நீரில் கரைத்து வைத்து அறைக் கதவுகளை மூடிவிட்டால் போதும். காற்றில் கலவை நீர் ஆவியாகி அறை முழுவதும் சூழ்ந்து நெடியேற்படுத்திக் கிருமிகளை அழித்து விடும். இருபத்து நான்கு மணிநேரம் இப்படித் தொடர்ந்து ஆவி சுழன்று சுழன்று வருகிற போது நோய்க் கிருமிகள் தப்புவதற்கில்லை.

ஆபரேஷன் தியேட்டர்கள் எல்லாம் பொதுவாக மூன்றும் நான்காம் தளங்களில் தான் கட்டுகிறார்கள். அருகில் மரங்கள் இருக்கக் கூடாது. மரங்களில் அமரும் பறவைகளின் கழிவுகள் நோய்க் கிருமிகளைப் பரப்பும் என்பது காரணம்.

ஒரு சர்ஜரி முடிந்தவுடன் அடுத்த சர்ஜரியை அதே மேஜையில் உடனே எடுத்துக் கொள்ள மாட்டார்கள். முந்தைய சர்ஜரிக்குப் பிறகு களேபரமாகியிருக்கும் அறையைக் கழுவி, சுத்தப்படுத்தித் தயார் பண்ணுவதற்கு நேரம் ஒதுக்குவார்கள்.

ஆபரேஷன் கருவிகள், துணிகள் போன்றவற்றைக் கொதிநீரில் போட்டோ அல்லது ஆட்டோக்ளேவிங் என்று, ஆவியில் வைத்தோ சுத்தப்படுத்துகிறார்கள்.

விளக்குகள் முக்கியமானவை. வெப்பம் தாக்காத கண்ணாடிகள் மூலம் சர்ஜரி மேஜையில் வெளிச்சம் பரவும். மூளை, இருதயம் போன்ற உறுப்புக்களின் மீது சிறிது கூட வெப்பம் தாக்கக் கூடாது. இப்போதெல்லாம் 'ஹாலோஜன் லாம்ப்' என்னும் குளிர் ஒளி விளக்குகள் புழக்கத்துக்கு வந்துவிட்டன. தொடர்ச்சியான மின்சக்தி தேவை என்பதால் முன்னெச்சரிக்கையாக ஜெனரேட்டர் வசதிகளை நம்பப்படுகின்றன.

இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் இவற்றையெல்லாம் சிராகக் கண்காணிக்க இப்போது மானிட்டர்கள் வந்து விட்டன. அனஸ்தீஸியாவுக்கு விதம் விதமான பாதுகாப்பான மருந்து வகைகள் உள்ளன.

ஒரு டாக்டர் கூறக் கேட்டு எழுதியவர்:

**-சுப்ரபாலன்**

**வண்ணப்படம்: உத்ரா**

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Frivate Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran

# கல்கி

30-9-84



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

